DR இளங்கோ & DR. ஜானகி
பல் மருத்துவர்கள்
www.illangodentistry.com
SCARBOROUGH 416 292 7004
BRAMPTON / MISSISSAUGA 905 457 1700
MARKHAM (New Location) 905 472 7223
பற்களை ஒழுங்குபடுத்தும் முறையை தமிழில் விளக்கிக்கொள்வதற்கு சரியான அலுவலகங்கள் உங்களுக்கு அருகில் - டாக்டர். இளங்கோ

For Your Rental Needs
iHOME Rentals
416-703-7300 | info@ihomerentals.ca

Homelife Future Realty Inc.
"My clients are my value"
647-668-8276 | 416-629-5800
905-201-9977 (Business)
Kailain Thillainathan, Sales Representative — kailain.thillai@gmail.com
homesbyraghu@gmail.com — Ragu Thillainathan, Sales Representative

இவ்விடத்தில்
விளம்பரம் செய்ய
எம்மை அழையுங்கள்
416-752-1524

29ம் ஆண்டில்...
29 years of publishing
www.uthayannews.ca
UTHAYAN உதயன்
திக்கெட்டும் தமிழ் உலகில் எத்திக்கும் கதிர் வீசும் வாரச் செய்தி இதழ்
Member of National Ethnic Press and Media Council of Canada
Canada's Other Voices
$1.00
416-752-1524 www.uthayannews.ca
Canadian Media Circulation Audit

நான் எப்பொழுதும் உங்களோடு தான்
Buying-Selling-Investing
Homelife/Future Realty Inc., Brokerage
Raj Perampalam, Broker
என்னை அழையுங்கள்
Direct: 416-897-9155
Office: 905-201-9977
e-mail: raj.p@rogers.com

PYRAMID GROUP
UTHAYAN SIVARAJAH 416.301.5555
RAJ 416.843.3333
KUMAR 416.453.7777

தாமோர் நகை அடைவு மாளிகை
THAMOR PAWN BROKER
107 Dundas St, East, Mississauga, ON, L5A 1W7 — 905-272-1222
23-8907 The Gore Rd, Brampton, ON L6P 2L1 — 905-794-4404
online service: www.remitbee.com

ALL IN ONE TAX & IMMIGRATION SERVICES
• Family sponsorship;
• Super visa for parents and grandparents including health insurance;
• Citizenship;
• Permanent resident card renewal;
More than 10 Years experience in the field of Canadian Immigration
Kokulan Baskaran, Tax Consultant
403-2855 Markham Road, Scarborough ON M1X 0C3
Tel: 647-344-6600
info@allinoneserves.ca
www.allinoneservices.ca

Residential & Commercial Real Estate Services
Bala Logendralingam, Realtor
Cell: 647-447-1562
RE/MAX COMMUNITY

உதயம் 1557 — CHIEF EDITOR: R.N. LOGENDRALINGAM — Friday February 6, 2026

## Toronto Police officers charged in 'Project South': Police Chief calls corruption case 'most concerning' in his career!

# ரொறன்ரோ காவல்துறை அதிகாரிகள் 'Project South' வழக்கில் குற்றம் சாட்டப்பட்டமை,தனது வாழ்க்கையில் "மிகவும் கவலைக்குரியது" என்று தெரிவித்த காவல்துறைத் தலைவர்!

## Four Police 'Officers' will be suspended without pay. - Toronto Police Chief Myron Demkiw

# நான்கு குற்றவாளிகளான பொலிசார் சம்பளமற்ற பணி இடைநிறுத்தம் செய்யப்படவுள்ளனர் என ரொறன்ரோ தலைமை பொலிஸ அதிகாரி தெரிவிப்பு!




பொலிஸ் உத்தியோகத்தர்களே குற்றச் செயல்களிலும் ஊழல் போன்றவற்றிலும் போதை வஸ்த்து கடத்தலிலும் ஈடுபட்ட காரணத்தால் தற்போது கனடா எங்கும் பேசு பொருளாக விளங்கும் ரொறன்ரோ மாநகர பொலிஸ் பிரிவில் பணியாற்றும் ஏழு பொலிஸ் அதிகாரிகள்? (இவர்களை பொலிஸ் அதிகாரிகள் என்று அழைப்பது இனிமேலும் ஏற்றுக் கொள்ளக் கூடியதா என்று நாம் யோசிக்க வேண்டும்) தொடர்பான மேலதிக விபரங்களை உள்ப் பக்கங்களில் எமது வாசகர்களுக்காத் தரலாம் என்றநோக்கத்தோடு ஆரம்பிக்கின்றோம்.

(தொடர்ச்சி 5ம் பக்கம்)

தங்கள் நாடுகளில் உயிருக்கு உத்தரவாதமில்லை. நிம்மதியான வாழ்க்கையை மேற்கொள்ள இயலவில்லை. இனம் சார்ந்த மற்றும் மதங்கள் தொடர்பான அடக்கு முறைகள் உள்ளன போன்ற காரணங்களால் வெளிநாட்டவர்கள் அமைதியைத் தேடி கால்பதிக்கும் கனடிய தேசத்தில் "வேலியே பயிரை மேய்கின்றதா? என்று மூக்கில் விரலை வைக்கும் அளவிற்கு

## UTHAYAN INTERNATIONAL AWARDS FESTIVAL 2026

உலகெங்கும் பேசப்பெறும் கனடா உதயன் சர்வதேச விருது விழா 2026 06-06-2026 அன்று கனடா ஸ்காபுறோ நகரில் நடைபெறவுள்ளது. விருது விழா தொடர்பான மேலதிக விபரங்களுக்கு uthayannews@yahoo.com என்னும் மின்னஞ்சல் மூலமாகவோ அன்றி 416 732 1608 அல்லது 647 854 8384 ஆகிய தொலைபேசி இலக்கங்களிலோ தொடர்பு கொள்ளவும்.

# பிக்கறிங் தொகுதி பாராளுமன்ற உறுப்பினர் யுனிற்றா நாதன் அவர்கள் ஏற்பாடு செய்த தமிழர் மரபுரிமை மாத கொண்டாட்டம்



கனடிய மத்திய பாராளுமன்றத்தின் பிக்கறிங் தொகுதி பாராளுமன்ற உறுப்பினர் யுனிற்றா நாதன் அவர்கள் ஏற்பாடு செய்த தமிழர் மரபுரிமை மாத கொண்டாட்டத்தை மாதத்தின் இறுதிநாளான 31-01-2026 அன்று, 19 NOTION ROAD, AJAX என்னும் விலாசத்தில் அமைந்துள்ள THE EXPERIENCE EVENT CENTRE என்னும் அழகிய மண்டபத்தில் சிறப்பாக நடைபெற்றது.

மத்திய- மாகாண மற்றும் உள்ளாட்சி அமைப்புக்களின் அரசியல் தலைவர்கள் கலந்து சிறப்பித்த மேற்படி நிகழ்வில் உரைகள் மற்றும் கலை நிகழ்ச்சிகள் ஆகியன இடம்பெற்றன.

இங்கே காணப்பெறும் படத்தில் பாராளுமன்ற உறுப்பினர் யுனிற்றா நாதன் அவர்களை டுறம் பிராந்திய நகரசபை உறுப்பினர்கள் கௌரவிப்பதைக் காணலாம்.

தமிழில் உரையாடி உங்கள் நெருக்கடியான நேரத்தில் எமது சேவைகளை பூரண திருப்தியுடன் பெற்றுக்கொள்ளுங்கள்
SMART RESTORATION
We work with your insurance company
ARUN ANANTH
24/7 EMERGENCY SERVICES
info.smartrestoration@gmail.com
smart-restoration.net
647-849-4444 (Cell)
1-833-SMART 09 (Office) (76278)
• Water and flood services • Mold remediation • Trauma
• Sewage clean up • Fire & smoke • 24/7/365 days
LICENSED INSURED CERTIFIED

GL PRIME LEGAL SERVICES
இலவச சட்ட ஆலோசனை 905 334 6851
Immigration Law | Family Law | Criminal Law
• PR APPLY • SPONSORSHIPS • WORK PERMIT
• SUPER VISA All Other Legal Services
www.glprimelegal.ca — ERAA PLAZA Unit #231

இலங்கை செய்திகள்
Sri Lanka News

# தித்வா மீள் கட்டுமானத்தில், மலையக பெருந்தோட்ட மக்கள் மீது இன ஒதுக்கல் காட்ட படுகிறது!

## இலங்கை ஐநா பிரதிநிதி மார்க் அந்ரேயிடம் மனோ கணேசன் முறையீடு



தித்வா பேரழிவுக்குப் பிந்தைய நிவாரணம் மற்றும் மீள்குடியேற்றத் திட்டங்களில், மலையக பெருந்தோட்ட சமூகத்தை, இன்றைய அரசாங்கம் ஒதுக்கி வைத்துள்ளது. இது திட்டமிட்ட இன ஒதுக்கல். எமது மக்கள் மீது பொறுப்பு ஐநா சபைக்கு இருக்கிறது. ஆகவே எங்கள் இந்த குற்றசாட்டை ஐநா சபை விசேட கவனத்தில் எடுக்க வேண்டும்.

இலங்கை அரசாங்கத்தின், இடர் நிவாரண நிலையத்தின் மீள் கட்டுமான (Rebuilding Sri Lanka), திட்டங்களின் கீழ், தித்வா பேரழிவில் பாதிப்புக்கு உள்ளான மலையக பெருந்தோட்ட மக்களுக்கு இடமில்லை. அவர்களை நாம் இந்திய வீடமைப்பு திட்டத்தின் கீழ்தான் வைத்துள்ளோம் என அத்தியாவசிய சேவைகள் ஆணையாளர் - நாயகம் பகிரங்கமாக இலங்கையின் ஒரு முன்னணி ஊடகத்துக்கு கூறியுள்ளார்.

இடர் நிவாரண நிலையத்தின் மீள் கட்டுமான (Rebuilding Sri Lanka), வீடமைப்பு திட்டத்தில், ஒவ்வொரு வீடும் அதிகபட்சமாக ரூபா. 50 இலட்சத்தில் வீடுகள் கட்டப்படும்; உரிய காணிகள் இல்லாதோருக்கு காணிகள் வழங்கப்படும்; என ஜனாதிபதி அனுர குமார திசாநாயக்க, இந்த திட்டத்தை அனுராதபுரத்தில் ஆரம்பித்து வைக்கும் போது, அறிவித்தார். அதேவேளை இந்த திட்டத்தில், மலையக தமிழ் மக்களுக்கு இடமில்லை, என ஜனாதிபதியால் விசேடமாக, அத்தியாவசிய சேவைகள் ஆணையாளர் - நாயகமாக நியமிக்க பட்டுள்ள பிரபாத் சந்திரகீர்த்தி கூறுகிறார்.

மலையக தமிழர்கள் இந்நாட்டு குடிமக்கள் இல்லையா? அவர்கள் என்ன, இந்திய பிரஜைகளா? இலங்கையின் ஏனைய மக்களுக்கு, இடர் நிவாரண நிலையத்தின் மீள் கட்டுமானத்தில் வழங்கப்படும், உரிமைகள், கொடுப்பனவுகள் என்ற அரசாங்க கவனிப்புகள், ஏன் எமது மக்களுக்கு வழங்க படமுடியாது? ஆகவே இது எமது மக்களை மாற்றான் தாய் பிள்ளைகள் போன்று, இரண்டாம் தர பிரஜைகள் போன்று, நடத்த படும் இன ஒதுக்கல் இல்லையா? இதை கவனத்தில் எடுங்கள் என இலங்கையில் உள்ள ஐநா வதிவிட பிரதிநிதி ஒருங்கிணைப்பாளர் மார்க் அந்ரே பிரான்சேவை சந்தித்து, தமிழ் முற்போக்கு கூட்டணி தலைவர் மனோ கணேசன் தெரிவித்துள்ளார்.

கொழும்பில் உள்ள ஐநா அலுவலகத்தில், ஐநா வதிவிட பிரதிநிதி ஒருங்கிணைப்பாளர் மார்க் அந்ரே பிரான்சேக்கும், தமிழ் முற்போக்கு கூட்டணி தலைவர் மனோ கணேசனுக்கும் இடையில் சந்திப்பு நிகழ்ந்தது. இதன் போது, ஜனநாயக மக்கள் முன்னணியின், சர்வதேச விவகாரங்களுக்கு பொறுப்பான இணை தலைவரும், தமுகூ அரசியல் குழு உறுப்பினருமான பாரத் அருள்சாமியும் கலந்து கொண்டார். இந்த சந்திப்பு தொடர்பில் மனோ கணேசன், தனது எக்ஸ் தளத்தில் தெரிவித்துள்ளதாவது;

இடம்பெயர்ந்த ஒவ்வொரு குடும்பத்திற்கும் வழங்கப்பட வேண்டிய ரூ50 இலட்ச வீடமைப்பு நிதியுதவியும், காணி ஒதுக்கீடும், பெருந்தோட்ட சமூகத்திற்கு மறுக்கப்பட்டுவருகிறது. இது கவனயீனம் அல்ல. இது திட்டமிட்ட பாகுபாடு ஆகும். மலையக தமிழர்கள் மீது காட்டப்படும் இந்த “அபார்தெய்ட்” என்ற இன ஒதுக்கல் முடிவுக்கு வரவேண்டும்.

தித்வா பேரழிவுக்குப் பிந்தைய நிவாரணம் மற்றும் மீள்குடியேற்றத் திட்டங்களில் எங்கள் சமூகத்தை விலக்கி வைக்கும் நிலையை விளக்குவதற்காக ஐநா வதிவிட ஒருங்கிணைப்பாளர் மார்க் அந்ரே பிரான்சேஇடம் நாம் தெரிவித்த எங்களது அவசர நிலைப்பாடுகள்:

1) தித்வா பேரழிவால் இடம்பெயர்ந்த அனைத்து மலையகக் குடும்பங்களும், தேசிய பேரிடர் முகாமைத்துவ மையத்தின் கீழ் செயல்படும் ஜனாதிபதியின் ரூபா. 50 இலட்ச வீடமைப்பு, மற்றும் காணி வழங்கல் திட்டத்தில் உள்வாங்க பட வேண்டும். பெருந்தோட்ட காணிகளின் உரிமையாளர் அரசாங்கமாகும். அங்கே பெருந்தோட்ட நிறுவனங்கள் நீண்டகால குத்தகைக்கே காணி நிலத்தை பயன் படுத்துகின்றன. ஆகவே பெருந்தோட்டங்களில் பாதுகாப்பான காணிகளை, அடையாளம் கண்டு, அவற்றை மலையக மக்களுக்கு பிரித்து கொடுக்க, அரசாங்கத்துக்கு சட்டப்படி அதிகாரம் உண்டு. காணிகளை தந்து, வீடமைத்து தந்து, பாதிக்க பட்ட மலையக மக்களுக்கும், நாட்டின் ஏனைய மக்களுக்கு சமானமான அந்தஸ்த்தை தரும் கடப்பாடு இலங்கை அரசாங்கத்துக்கு உண்டு. இதில் சட்ட தடைகள் எதுவும் இல்லை. அவசரச் சட்டங்கள் நிலம் கைப்பற்ற அனுமதிக்கின்றன. தோட்ட நிலங்கள் அரசின் நிலங்களே. நிலம் கையகப்படுத்தும் சட்டத்தின் கீழ் நிரந்தரத் தீர்வுகள் உள்ளது.

2) ரூபா. 27 இலட்ச பெறுமதியான, இந்திய அரசின் உதவி வீடமைப்பு திட்டம் தனியாகவே தொடர வேண்டும். இலங்கை பிரஜைகளான மலையக தமிழர்களுக்கான இலங்கை அரசின் பொறுப்புக்கு மாற்றாக, இந்திய அரசின் உதவி வீடமைப்பு திட்டம் அமைய முடியாது. தித்வா வீடமைப்பு திட்டம் என்பது, இலங்கை அரசின் இடர் நிவாரண விசேட அவசர திட்டமாகும். இந்திய அரசின் உதவி வீடமைப்பு திட்டம், பேரழிவு நிகழாத பிரதேசங்களில், வழமை போல், பெருந்தோட்ட தனி வீட்டு திட்டமாக தொடர வேண்டும். இலங்கையில் உள்ள இந்திய தூதரகமும் எமது நிலைப்பாட்டுக்கு சமானமான நிலைப்பாட்டை கொண்டுள்ளது.

3) நில உரிமை, நிலத்துடன் கொண்டுள்ள சமூக பிணைப்பு, மற்றும் பாதுகாப்பு காரணங்களால், பெருந்தோட்டங்களில் தொடர்மாடி குடியிருப்புகளை கட்டி, நமது மக்களுக்கு வழங்கும் அரசாங்க யோசனையை நாம் ஒருபோதும் ஏற்று கொள்ள மாட்டோம்.

மலையக மக்களை ஒதுக்கி வைக்கும் கொள்கை “அபார்தைட்” (Apartheid) என்ற இன ஒதுக்கல் ஆகும். தித்வா மீள்கட்டமைப்பு, பாதிக்க பட்ட இலங்கை மக்கள் அனைவரையும் உள்ளடக்கியதாக இருக்க வேண்டும். அதற்காகவே உலக நாடுகள், மற்றும் இலங்கையின் உலகளாவிய அபிவிருத்தி பங்காளிகள், மற்றும் ஐநா ஆகியவை இலங்கை அரசாங்கத்துக்கு உதவுகின்றன. ஆகவே இலங்கை அரசின் மலையக மக்களை ஒதுக்கி வைக்கும் இந்த கொள்கையை, ஐநா தலையிட்டு உடனடியாக நிறுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும். என்றும் மனோ கணேசன் கேட்டுக் கொண்டுள்ளார்.

# ”கிவுல் ஓயா” திட்டத்திற்கு எதிராக குரல் கொடுக்கின்ற தமிழ் பாராளுமன்ற உறுப்பினர்கள் இந்திய மீனவர்களின் அத்து மீறலுக்கு எதிராகவும் குரல் கொடுக்க வேண்டும்!

## வடமாகாண கடற்றொழிலாளர் இணையத்தின் செயலாளர் என்.எம். ஆலம்




இந்திய மீனவர்களின் அத்து மீறிய வருகை தொடர்பாக நாங்கள் பல்வேறு கோரிக்கைகளை முன் வைத்த போதும் இந்த அரசாங்கமும் குறிப்பாக கடற்றொழில் அமைச்சரும் கண்டு கொள்ளாமல் இருப்பது ஏன் என்று தெரியவில்லை. தமிழக முதலமைச்சர் நினைத்திருந்தால் இந்திய மீனவர்களின் அத்து மீ-றிய வருகையை கட்டுப்படுத்தி இருக்க முடியும் என வடமாகாண கடற்றொழிலாளர் இணையத்தின் செயலாளர் என்.எம்.ஆலம் தெரிவித்தார்.

மன்னாரில் உள்ள அலுவலகத்தில் 3ம் திகதி அன்று செவ்வாய்க்கிழமை (3-2-2026) மதியம் இடம்பெற்ற ஊடக சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், இலங்கை கடற்பரப்பில் அத்துமீறி நுழைந்து அடாவடியில் ஈடுபடுகின்ற தமிழக மீனவர்கள் நடவடிக்கை கண்டிக்கத்தக்க விடையமாக உள்ளது.குறித்த விடயத்தை யாரிடம் முறைய-ிடுவது என்று தெரியவில்லை. தொடர்ச்சியாக இந்திய மீனவர்களின் வருகை-கயும், அடாவடித் தனமும், வட பகுதியில் பாரிய தாக்கத்தை ஏற்படுத்தி உள்ளது.

ஆனால் கடற்றொழில் அமைச்சர் குறித்த விடையத்தில் மௌனமாக இருக்கின்றார். கடற்றொழில் அமைச்சரை நாங்கள் பல தடவை சந்தித்து, பல்வேறு முறைப்பாடுகளை தெரிவித்துள்ளோம். குறிப்பாக இந்திய மீனவர்களின் அத்து மீறிய வருகை தொடர்பாகவும், அவர்களின் வருகையை கட்டுப்படுத்த நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு கோரிக்கை விடுத்திருந்தோம்.

நாங்கள் பல்வேறு கோரிக்கைகளை முன் வைத்த போதும், இந்த அரசாங்கமும், குறிப்பாக கடற்றொழில் அமைச்சரும் கண்டு கொள்ளாமல் இருப்பது ஏன் என்று தெரியவில்லை.

எதிர் வரும் மே மாதம் தமிழகத்தில் சட்ட சபை தேர்தல் இடம்பெற இருக்கின்றது. இந்த நிலையில் இவ்வாறான செயல்பாடுகளும் தூண்டி விடப்படுகிறது. முதலமைச்சர் நினைத்திருந்தால் இந்திய மீனவர்களின் அத்து மீறிய வருகையை கட்டுப்படுத்தி இருக்க முடியும்.

அண்மையிலே பாராளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தலைமையிலான குழுவினர் இந்தியாவிற்கு பயணம் செய்த நிலையில், இந்திய மீனவர்களின் வருகை அதனால் எமது மீனவர்களின் பிரச்சினை குறித்து தெளிவுபடுத்திய போதும், சாதகமான பதில்கள் எவையும் வழங்கப்படவில்லை என்பதே அவர்களின் கருத்தாக இருக்கின்றது. அரசியலும், எமது வாழ்வாதாரமும் பின்னி பிணைந்த விடையத்தை பார்க்கின்றோம்.

குறிப்பாக வட பகுதி மீனவர்கள் தாக்கப்படுகின்ற அவர்களின் வாழ்வாதாரம் பாதிக்கப் படுகின்ற போது இங்குள்ள அரசியல் கட்சிகளாக இருக்கட்டும், குறிப்பாக தமிழ் அரசியல்வாதிகள் அனைவரும் “கிவுல் ஓயா” நீர்த்தேக்க மேம்பாட்டுத் திட்டத்திற்கு எதிராக ஒன்று சேர்ந்து உள்ளார்கள். அதை வரவேற்கிறோம்.

இவ்வாறான எதிர்ப்புக்கள் ஊடாகவே அரசாங்கத்தின் சில கொள்கைகளையும், திட்டங்களையும் மாற்ற முடியும். அதே போன்று ஏன் இந்த மீனவர்கள் விடையத்தில் தமிழ் பாராளுமன்ற உறுப்பினர்கள் அல்லது அரசியல் கட்சிகள் ஏன் ஒருமித்த குரலில் இதற்கு எதிராக எதிர்ப்பு தெரிவிக்கிறார்கள் இல்லை என்கிற கேள்வி எழுந்துள்ளது.

மேலும் ஆளும் கட்சியை சேர்ந்த பல பாராளுமன்ற உறுப்பினர்கள் வடக்கில் இருக்கிறார்கள். அவர்கள் கூட இந்திய மீனவர்கள் விடையத்தில் மௌனம் காக்கிறார்கள். மீனவர்கள் தாக்கப்பட்ட சம்பவம் இடம்பெற்ற இரு தினங்களாகி விட்டது.

மீனவர்களின் வலைகள் சேதப்படுத்தப்பட்டுள்ளதாகவும், கடந்த காலங்களில் ஏற்பட இழப்புகளுக்கு இது வரை எவ்வித நிவாரணங்களும் கிடைக்கவில்லை என அந்த மீனவர்கள் கவலை தெரிவிக்கின்றார்கள். கடந்த வருடம் ஏற்கட்ட புயல் மற்றும் வெள்ளம் காரணமாக தமக்கு ஏற்பட்ட பாதிப்பகளுக்கும் எவ்வித நிவாரணங்களும் உரிய முறையில் கிடைக்கவில்லை.

நாங்கள் உள்ளூரில் சட்டவிரோதமாக முன்னெடுக்கப்படுகின்ற தொழில் முறைமைகளையும் நிறுத்தி தருமாறு அரசிடம் கோரி இருக்கின்றோம்.

அதே சம காலத்தில் இந்திய மீனவர்களின் பிரச்சினையும் தீர்க்கப்பட வேண்டும் என்ற கோரிக்கையும் நாங்கள் முன் வைத்தோம். ஆனால் உள்ளூரில் தடை செய்யப்பட்ட தொழில்களை நிறுத்தி எங்களை திருப்தி படுத்துகின்ற அரசாங்கம் ஏன் இந்திய மீனவர்களின் வருகையை கண்டுகொள்ளாமல் இருக்கிறது.

இந்திய மீனவர்களின் அத்து மீறிய வருகையை தடுக்க வேண்டும் என்பதே எமது மீனவர்களின் கோரிக்கையாக இருக்கிறது. அவர் தெரிவித்தார்.

Canada

We acknowledge the financial support of the Government of Canada

Single Copy $1 Annual Subscription Price $52.00

பிரதம ஆசிரியர்: ஆர்.என்.லோகேந்திரலிங்கம்

உதயன் வெளியீட்டாளர்கள் — உதயன் — Uthayan Publishers

EDITOR IN CHIEF: R. N.Logendralingam
OFFICE ASSISTANT: Pirabu
GRAPHIC: Pathma, Yalini, Logan & Shanthy (Aum Sign) and Arjune
TECHNICAL: Janani and Bala
PRINTERS: Web News Printing Inc.
DISTRIBUTION: Yogarajah

Phone: 416 752 1524, Fax: 416 752 6703
4062 Ellesmere Road, Scarborough ON M1C 1J2
website: www.uthayannews.ca email: Uthayannews@yahoo.com

## உதயன் கதிரோட்டம்

# இலங்கை அரசியலில் அனைத்து கட்சிகளிலிருந்தும் நீண்ட காலம் "நன்கு அனுபவித்த" அரசியல்வாதிகள் தாமாக ஒதுங்கிக் கொள்ள "அழுத்தம்" கொடுக்க வேண்டும்!

முழு இலங்கையையும் பரிபாலனம் செய்யவும், அந்த தேசத்தின் பொருளாதாரம் வீழ்ச்சியடையாமல் இருக்கத் தேவையான முன்னேற்பாடுகள் அல்லது நடவடிக்கைகள் ஆகியவற்றை கவனிப்பதற்கும் மற்றும் பல ஆட்சி முறைகளை நேர்மையாக கடைப்பிடிக்கவுமே ஜனாதிபதியும் பிரதமரும் எதிர்க்கட்சித் தலைவரும் மற்றும் பாராளுமன்ற உறுப்பினர்களும் அவர்களுக்கு
மேலாக அமைச்சர்களும் அதிகாரிகளும் தேர்ந்தெடுக்கப்பெற்றும் நியமனங்களைப் பெற்றும் தங்கள் பணிகளை ஆரம்பிக்கின்றார்கள்.

இலங்கையின் ஒன்பது மாகாணங்களைச் சேர்ந்த 225 பாராளுமன்ற உறுப்பினர்கள் அந்த பாராளுமன்றத்தை அலங்கரிக்கின்றார்கள். அவர்களில் பெரும்பான்மையினரான சிங்களவர்கள், தமிழர்கள் மற்றும் இஸ்லாமியர்கள் என வெவ்வேறு கட்சிகளிலிருந்து தேர்நதெடுக்கப்பெற்று ஜனநாயக முறையில் எவ்வாறு தேர்தல் நடத்தப்பெறுகின்றதோ அதே போன்று பாராளுமன்றமும் இயங்கவேண்டுமென்ற எதிர்பார்ப்போடு தான வாக்காளப் பெருமக்கள் அங்கத்தவர்களைத் தேர்ந்தெடுத்து வருகின்றார்கள்.

இவ்வாறான அரசியல்வாதிகளில் தமிழ் பேசும் மக்களது பாராளுமன்ற உறுப்பினர்களும் இஸ்லாமிய மக்கள் அனுப்பிவைக்கும் பாராமன்ற உறுப்பினர்ம் சிங்கள மக்கள் தேர்தெடுத்து அனுப்புபவர்களை விட பொறுப்புக்கள் அதிகம் உள்ளவர்கள் என்று அனைவருமே எதிர்பார்க்கும் விடயம் நீதியின் அடிப்படையில் அனைவராலும் ஏற்றுக் கொள்ளப்பட வேண்டியதே!

இவ்வாறாக இலங்கையின் பாராளுமன்ற அரசியலில் 70 ஆண்டுகளுக்கு மேலாக நாம் மேற்குறிப்பிட்ட சிறுபான்மை இன மக்களும் அவர்களுக்குள் அடங்கும் மலையக மக்களும் அவர்கள் சார்ந்த பாராளுமன்ற உறுப்பினர்களாலும்
அரசியல் தலைவர்களாலும் வஞ்சிக்கட்டுள்ளார் என்பதே கடந்த காலம் தொடக்கம் இன்றுவரையும் மறைமுகமாக மேற்கொள்ளப்பெறும் ஒரு விடயம் என்பதை அனைவரும் புரிந்து கொண்டிருக்க மாட்டார்கள்.

குறிப்பாக மலையக மக்களைப் பொறுத்தளவில மலையகத தோட்டத் தொழிலாளர்களின் சந்தாப் பணத்தில் தங்களை வளர்த்துக் கொண்டவர்கள் பின்னர் அரசியல் பதவிகைளயும் அவர்களது வாக்குகள் மூலமாகப் பெற்றுக்கொண்டு தங்களுக்கு வாக்களித்தவர்களுக்கு எவ்விதமான விடிவையும் தேடித்தராமல் தங்களை செல்வந்தர் என்ற நிலைக்கு கொண்டு வந்தனர். அவ்வாறு அவர்கள் பொருளாதார ரீதியாகவும் அரசியல் பலம் பெற்றவர்களாகவும் வாழ்க்கை உயர்ந்தபடியால் அவ்வாறான பதவிகள் தங்கள் குடும்பத்தில் மாத்திரம் வாரிசுக்கள் என்ற அடிப்படையில் தொடர வேண்டும் என்பதில் கவனம் செலுத்தினார்கள் . இதற்கு உதாரணமாக சௌயமூர்த்தி தொண்டமான், அவரைத் தொடர்ந்து ஆறுமுகம் தொண்டமான் பின்னர் செந்தில் தொண்டமான் ஜீவன் தொண்டமான் என பரம்பரை அரசியல் தொடர்ந்தாலும் தோட்டத் தொழிலாளர்களுக்கு எவ்வித விடிவும் ஏற்படவில்லை. உதாரணமாக தோட்டதட் தொழிலாளர்களின் சம்பள உயர்விற்காகப் போராடுகின்றோம் என்று வெளியில் அறிக்கைகளை விடுபவர்கள் தோட்ட முதலாளிமாரிடமிருந்து "சன்மானங்களைப்" பெற்றுக் கொண்டு தொழிலாளர்களுக்கு "துரோகம்" இழைத்தவர்களாக மாறிவிடுகின்றனர்

இதே போன்று இஸ்லாமிய மக்கள் தேர்ந்தெடுத்த பல அரசியல்வாதிகள் ஆரம்பத்தில் கொழும்புத் தலைநகரில் வாழுகின்றவர்களாகவே இருந்தார்கள். கொழும்புத் தலைமைகள் என்று அடையாளமிடப்பட்ட அவர்கள் கொழும்பிலுள்ள இஸ்லாமிய முதலாளிகளுக்கு சலுகைகளையும் உதவிகளையும் செய்து அவர்களிடமிருந்து பெரும் நிதியினால் செல்வந்தர்களாகவே வாழ்ந்து மடிந்தார்கள். அனால் சாதாரண மத்தியதர மற்றும் ஏழை இஸ்லாமியர் வஞ்சிக்கப்பட்டவர்களாகவே தொடர்ந்தும் உள்ளார்.

உதாரணமாக ரவூப் ஹக்கீம் போன்றவர்கள் கொழும்பில் எந்தக் கட்சி வந்தாலும் அமைச்சர் பதவிகளைப் பெறுவற்காக மக்களுக்கு பொய் வாக்குறுதிகளையும் வழங்கி தங்கள் "சுகபோக" வாழ்க்கையை மாறி மாறி வரும் அரசாங்கங்களின் வாயிலாக தொடர்வதற்கான வழிகளை ஏற்படுத்திக்கொள்வார்கள். இதில் குறிப்பாக ரவூப் ஹக்கீம் போன்றவர்கள் அவர்களது சொந்த மக்கள் மத்தியில் பல குற்றச்சாட்டுகளுக்கு உள்ளாகி தலை குனிந்தவர்களாகவே தற்போதும் அவர்களது அரசியல் பயணம் தொடர்கின்றது. சந்தர்ப்பங்களுக்கு ஏற்றவாறு தங்கள் உரைகளையும் அறிக்கைகளையும் மக்களிடத்தில் காட்டி "பிழைத்துக் கொள்ளத் தெரிந்தவர்கள் அவர்கள்.

இவ்வாறு வடக்கு கிழக்கை பிரதிநிதித்துவம் செய்பவர்களும் இவர்களுக்கு விதி விலக்கானவர்கள் அல்லது. இறுதியாக எதிர்க்கட்சித் தலைவராக பதவியேற்ற எமது சம்பந்தர் ஐயா கூட அந்தப் பதவிஜயு இழந்த பின்னரும் அரச மாளிகையில் வாழ்வதற்கு மகிந்தா-கோட்டாபாய மற்றும் ரணில் ஆகியோரால் அனுமதிக்கப்பெற்றார். அதற்கு காரணம் பல தடவைகள் மேற்படி தலைவர்கள் மீது பாராளுமன்றத்தில் கொண்டு வரப்பட்ட நம்பிக்கையில்லாத் தீர்மானங்களின் போது அவர்களைத் தப்பிக்க வைக்க பலருக்கு "சன்மானங்கள்" வழங்கப்பெற்றன. இவ்வாறு சம்பந்தர் ஐயாவின் வழிகாட்டலில் வாக்களித்தவர்களுக்கு அவர்கள் ர்களது பொருளாதார நிலை உயர்ந்து அவர்களும் செல்வந்தர்கள் என்ற வளமிக்க வகுப்பினராக மாறிவிட்டார்கள்.

இவ்வாறு அடுக்கிக் கொண்டே சென்றால் பலரது உண்மையான முகங்கள் வெளியே காட்டப்பட வேண்டிய நிலை தோன்றும்.

தற்போது பல தமிழ் பேசும் பாராளுமன்ற உறுப்பினர்கள் மீது முன் வைக்கப்படும் "மதுபான நிலைய லைசன்ஸ்" விவகாரம் என்பது சுமார் 60 வருடங்களுக்கு முன்னரே எமது அன்றைய அரசியல்வாதிகளால் கையாளப்பட்ட விடயமாகும். அவர்கள் தங்கள் உறவினர்களுக்கும் பணம் தரக்கூடிய நண்பர்களுக்கும் அ்வவாறான லைசன்களைப் பெற்றுக் கொடுத்தார்கள். அந்த வியாபாரங்கள் தற்போது பரம்பரைபரம்பரையாகத் தொடர்கின்றன.

இதே போன்று அண்மையில் இலங்கைக்கான புதிய கனடியத் தூதுவரை தம்மிச்சையாகச் சந்தித்த சுரேஸ் பிரேமச்சந்திரன் மற்றும் செல்வம் அடைக்கலநாதன் போன்றவர்கள் தற்கால அரசியலில் பல குற்றச்சாட்டுக்களுக்கு உள்ளானவர்களாக அறியப்பட்டவர்கள். ஆனால் அவர்கள் "ஆடாமலும் அசையாமலும்" தங்கள் காய்களை நகர்த்திச் செல்லமுயலுகின்றார்கள். இவ்வாறானவர்களையும் இன்னும் இவர்கள் போன்ற இன்னும் சிலரையும் வடக்கு கிழக்கு அரசியலிருந்து ஒதுங்கிக் கொள்ளுமாறு வேண்டிக் கொள்வது நியாயத்தைத் தேடும் ஊடகங்களினதும் தனி நபர்களினதும் முக்கிய பணி என்பதை நாம் இந்த இடத்தில் குறிப்பிட விரும்புகின்றோம்!



Toronto சிட்டி கவுன்சிலர்
PAUL AINSLIE
WARD 24, SCARBOROUGH-GUILDWOOD
HELP IS AVAILABLE
வட்டார மக்களின் தேவை கருதி பின்வரும் சேவைகள் எம்மால் கவனிக்கப்படுகின்றன.

குறைந்த கட்டணத்தில் வீட்டுவசதி
விலங்கு சேவைகள்
உயர்மாடி கட்டட சட்டங்கள்
கட்டட அனுமதி பத்திரங்கள்
பிள்ளை பராமரிப்பு சலுகை
அவசர வீட்டு வசதிகள்
தீயணைப்பு சேவைகள்
கழிவுப் பொருட்கள் சேவை
நூலகச் சேவை
மாநகரத் தேர்தல்
மாநகர அனுமதியும் சட்டங்களும்

Ontario Works
வாகனத் தரிப்பிடங்கள்
பூங்காக்கள்
காவல் துறை
பொதுச் சுகாதாரம்
வீதிகள்
ஆதன வரிகள்
பொதுப் போக்குவரத்து
மீள் சுலட்சியும் பசுமை திட்டமும்
மரங்கள்
நீர் விநியோகம்

நியமன அலுவலகம்
Scarborough Civic Centre
150 Borough Drive, 2nd Floor
Scarborough, ON M1P 4N7
Phone: 416-396-7222
Fax: 416-392-4006

ரொரன்ரோ சிட்டி ஹால் அலுவலகம்
100 Queen Street West,
2nd Floor - Suite C52
Toronto, ON M5H 2N2
Phone: 416-392-4008
Fax: 416-392-4006

councillor_ainslie@toronto.ca
www.paulainslie.com
Ward 24 Scarborough-Guildwood
@Ainslie_Ward24
@cllrainslie
Paul Ainslie (City of Toronto)

www.paulainslie.com 416-396-7222

PART TIME CLEANING JOB

Part-time cleaning job available in Oakville for 2 people. Morning and midnight shifts. Permanent resident or citizen person. For more details, call 647-286-2340

HELP WANTED

Workers needed for renovation company. Must have experience in one of the following:

- Drywall Installation
- Hardwood Installation
- Kitchen Reno
- Painting
- Bathroom Reno

Call - Siva 416-706-8160



# யாழ்ப்பாணம் அரியாலை கிழக்கு ஈரநில பிரதேசத்தில் உலக ஈர நில தினம் அனுஷ்டிப்பு!

இலங்கை செய்திகள் Sri Lanka News

ஈர நிலங்களின் பாதுகாப்பு மற்றும் அவற்றின் சூழலியல் முக்கியத்துவம் குறித்த விழிப்புணர்வை அதிகரிக்கும் நோக்கில் சர்வதேச உலக ஈர நில தினம் 2ம் திகதி திங்கட்கிழமை அன்றைய தினம் (02.02.2026) கடைப்பிடிக்கப்பட்டது.

அந்தவகையில் யாழ். மாவட்ட மத்திய சுற்றாடல் அதிகார சபையின் ஏற்பாட்டில், உலக ஈர நில தினம் யாழ் மாவட்டத்தின் நல்லூர் பிரதேச செயலர் பிரிவிற்குட்பட்ட அரியாலை கிழக்கு ஈரநில பிரதேசத்தில் அன்றைய தினம் காலை 9.00 மணிக்கு அனுஷ்டிக்கப்பட்டது.

யாழ்ப்பாண மாவட்ட மத்திய சுற்றாடல் அதிகார சபையின் உதவிப் பணிப்பாளர் திரு. லோ.கி ஆனந் தலைமையில் நடைபெற்ற இந் நிகழ்வில், பிரதம விருந்தினராக யாழ்ப்பாண மாவட்ட அரசாங்க அதிபர் திரு. மருதலிங்கம் பிரதீபன் கலந்து சிறப்பித்தார்.

இங்கு மாவட்ட அரசாங்க அதிபர் கருத்துத் தெரிவிக்கையில், உலக ஈரநில தினத்தின் தேசிய விழா இன்று பத்தரமுல்லை "அபே கம" வளாகத்தில் பிரதமர் கௌரவ ஹரிணி அமரசூரிய அவர்களின் தலைமையில் நடைபெறுகின்றது எனவும், அதற்கு இணையாக யாழ்ப்பாண மாவட்ட நிகழ்வு யாழ்ப்பாண. மாவட்ட மத்திய சிற்றாடல் அதிகார சபையின் ஏற்பாட்டில் இங்கு நடைபெறுகின்றது எனவும் தெரிவித்தார்.

மேலும், ஈர நிலங்கள் நீர் வளங்களைப் பாதுகாப்பதிலும், வெள்ள கட்டுப்பாட்டிலும், உயிரியல் பல்துறை பாதுகாப்பிலும் முக்கிய பங்காற்றுகின்றன எனவும், இவற்றை நாம் பாதுகாக்க வேண்டிய அவசியத்தினையும் எடுத்துக் கூறினார். மேலும், இவ்வாறான பிரதேசங்களைப் பாதுகாத்து இயற்கைச் சமநிலையை பேணுவது முக்கியமானதாகும் எனவும் அரசாங்க அதிபர் தெரிவித்தார்.

"ஈரநிலங்கள் மற்றும் பாரம்பரிய அறிவு - கலாசார பாரம்பரிய தந்தைக்காக கொண்டாடுதல்" எனும் தொனிப்பொருளில் இன்றைய தினம் உலகளாவிய ரீதியாக கொண்டாடப்படுகிறது குறிப்பிடத்தக்கது.

இந் நிகழ்வு விழிப்புணர்வு நடைபவனியுடன் ஆரம்பமாகி கண்டல் தாவர மரக்கன்றுகளும் நாட்டி வைக்கப்பட்டதுடன், விழிப்புணர்வு உரைகளுடன் ஈர நில தினம் தொடர்பாகத் தயாரிக்கப்பட்ட வழிகாட்டல் கையேடுகளும் வழங்கி வைக்கப்பட்டன.

இந் நிகழ்வில் நல்லூர் பிரதேச செயலகத்தின் உதவி பிரதேச செயலாளர், யாழ் பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி, சுற்றாடல் பிரிவு பொலிஸார், யாழ் மாவட்ட மத்திய சுற்றாடல் அதிகார சபை உத்தியோகத்தர்கள், தெல்லிப்பளை யூனியன் கல்லூரி சுற்றாடல் முன்னோடி சனாதிபதி பதக்கதாரி மாணவர்கள், பாடசாலை சுற்றாடல் கழக முன்னோடி மாணவர்கள், பாடசாலை மாணவர்கள், பொதுமக்கள் என பல்வேறு தரப்பினரும் கலந்து கொண்டிருந்தனர்.





# யாழ்ப்பாணம் வலிகாமம் வடக்கில் மக்களின் நிலங்களில் உள்ள பனை மரங்கள் படையினரால் இடித்து வீழ்த்தப்பட்டு அழிக்கப்படுகின்றன

**ஒருவர் தனது காணியில் நிற்கும் பனை மரத்தை தறிப்பதானாலும் பனை அபிவிருத்திச் சபை, பிரதேச செயலகம் ஆகியவற்றின் அனுமதி பெறவேண்டியது அவசியம் என்பது குறிப்பிடத்தக்கது**

வலி. வடக்கில. படையினரின் ஆக்கிரமிப்பில் உள்ள தமிழ் மக்களிற்கு சொந்தமான நிலத்தில் நிற்கும் பனை மரங்கள் அடியோடு இடித்து வீழ்த்தப்படுகின்றன.

இலங்கையில் ஒருவர் தனது காணியில் நிற்கும் பனை மரத்தை தறிப்பதானாலும் பனை அபிவிருத்திச் சபை, பிரதேச செயலகம் ஆகியவற்றின் அனுமதி பெறவேண்டிய கட்டாயம. இருக்கின்றது.

ஆனால் தமிழ் மக்களின் நிலங்களை ஆக்கிரமித்துள்ள படையினர் எவரது அனுமதியும் இன்றி நில உரிமையாளரின் ஒப்புதலும் இன்றி பனைகளை அழிக்கின்றனர்.

இவை தொடர்பில் எந்த நடவடிக்கையும் எடுக்காது பனை அபிவிருத்திச் சபை உறக்கத்தில் உள்ளது என மக்கள் பேசிக் கொள்கின்றார்கள்.

இலங்கை செய்திகள் Sri Lanka News

# மொழிக்கான உரிமை முக்கியம் என ஜனாதிபதி அநுரா கூறினாலும் எமது மொழி சார்ந்த உரிமை ஆட்சியாளர்களால் மறுக்கப்படுகின்றது என்கிறார் சுமந்திரன்

ஜனாதிபதி மொழி உரிமை முக்கியமானது, அதி முக்கியமானது, ஒவ்வொருவரும் தங்கள் மொழியில் பேசும் உரிமை இருக்கின்றது எனத் திரும்பத் திரும்ப கூறுகின்றார். ஆனால் நடைமுறையில் அப்படி இல்லை இதற்கு மணலாறு (வெலிஓயா) உதாரணம். இவர்கள் சொல்வது ஒன்று செய்வது ஒன்றாகவுள்ளது. மிக முக்கியமான மொழி உரிமை என சொல்லிக்கொண்டு அந்த மொழி உரிமை மறுக்கப்படுகின்றது என இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் தற்காலிகச் செயலாளர் எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்தார்.

வெலி ஓயா எனப்படும் பிரதேச செயலாளர் பிரிவின் ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் 3 ஆம் திகதி இடம்பெற்றபோது வழமைக்கு மாறாக தனிச் சிங்களத்தில் இடம்பெற்றமை தொடர்பில் யாழ்ப்பாணத்தில் இடம்பெற்ற ஊடாக சந்திப்பிலேயே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில், மணலாறு பகுதிக்குரிய ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் 3 ஆம் திகதி இடம்பெற்றது. மணலாறு தற்போது வெலிஓயா என பெயர் மாற்றி வைத்திருப்பது எல்லோருக்கும் தெரியும். இந்த கூட்டத்திற்கு வவுனியா வடக்கு மற்றும் கரைத்துரைப்பற்று பிரதேச சபை என்பவற்றின் தவிசாளர்கள் கலந்துகொள்வது வழமையானது. இக் கூட்டத்திற்கு வவுனியா வடக்கு தவிசாளர் கிருஸ்ணவேனி வழமையாகவே சமூகமளிப்பவர். இக் கூட்டத்தில் பங்குகொள்பவர்களில் அதிகமானோர் தமிழ் மக்கள். உத்தியோகத்தர்களும் அவ்வாறுதான் உள்ளனர்.



இக் கூட்டமானது இதுவரை காலமும் மொழி பெயர்ப்புடனேயே இடம்பெறுவது வழமை. இக் கூட்டம் இடம்பெற்றதற்கு முதல் நாள் கிவுல் ஓயாத் திட்டத்திற்கு எதிராக ஓர் ஆர்ப்பாட்டத்தை மேற்கொண்டது அனைவருக்கும் தெரியும் அடுத்த நாள் இந்தக் கூட்டம் இடம்பெறுகின்றபோது வவுனியா வடக்கு பிரதேச சபையின் தவிசாளருக்கு வழமையாக ஆசனம் ஒதுக்கும் இடத்தில் இருக்கை ஒதுக்கப்படவில்லை. அதாவது ஒருங்கிணைப்புக் குழுத் தலைவருடன் அமர முடியாது கீழே அமருமாறு கூறப்பட்டது.

வழமைக்கு மாறாக மாற்றமுடியாது எனத் தெரிவித்த தவிசாளர் மேடையிலேயே அமர்ந்தார். அதன் பின்பு கூட்டமானது முழுமையாக தனிச் சிங்களத்தில் மட்டுமே இடம்பெற்றது மொழி பெயர்ப்பு கேட்டபோதும் கொடுக்கப்படவில்லை. ஆகையினால் தவிசாளர் கூட்டத்தில் இருந்து வெளியேறினார்.

சுதந்திரதினக் கொண்டாட்டத்தில் ஜனாதிபதி, பாராளுமன்றத்தில் சபை முதல்வர் மற்றும் அமைச்சர்கள் நாம் இனவாதிகள் அல்ல நாங்கள் இனவாதச் செயல்பாட்டில் ஈடுபடுவது கிடையாது, நீங்கள் நடாத்திய போராட்டம் இனவாதமான போராட்டம் என்று கூறியுள்ளனர்.

இந்தப் பின்னணியில் வவுனியா வடக்கு தவிசாளரையும் அங்குள்ள மக்களையும் புறக்கணித்து மொழி பெயர்ப்பு இல்லாமல் தனிச் சிங்களத்தில் நடத்தியதை நாம் எப்படி வர்ணிப்பது என்பதே எமது கேள்வி. இதை இனவாதம் என்பதா அல்லது வேறு எவ்வாறு கூறுவது?.

தேர்தல் காலத்தில் யாழ்ப்பாணம் வந்த ஜனாதிபதி மொழி உரிமை முக்கியமானது, முக்கியமானது, ஒவ்வொருவரும் தங்கள் மொழியில் பேசும் உரிமை இருக்கின்றது எனத் திரும்பத் திரும்ப கூறுகின்றார். சொல்லில் சரியாகவுள்ளது ஆனால் நடைமுறையில் எப்படி உள்ளது என்று நான் அவரிடம் கேட்கின்றேன். அதனால் நாம் இதனை தேசிய மட்டத்தில் நாட்டில் உள்ள மக்களிற்கும. தெரிய வேண்டும் இவர்கள் சொல்வது ஒன்று செய்வது ஒன்றாகவுள்ளது. மிக முக்கியமான மொழி உரிமை என சொல்லிக்கொண்டு அந்த மொழி உரிமை மறுக்கப்படுகின்றது என்றார் சுமந்திரன்.

TRADITIONAL CHINESE ACUPUNCTURE THERAPY

| | |
|---|---|
| எல்லாவிமான வலிகளுக்கும் | All Pain & Aches, Arthritis |
| ஆஸ்மா, பீனிசம், ஒவ்வாமை | Asthma, Sinusitis, Rhinitis Allergies |
| மனத்தளர்ச்சி, தலைவலி | Stress, Migraine & All Types of Headaches |
| நீரிழிவு நோய், வயிற்றுவலி | Diabetes, Gastric Pain, Ulcer |
| மாதவிடதய் சம்மந்தமானவையும் | Menstruation |
| உடற்பருமன் குறைத்தல் | Weight Loss |

முதலான சகலவிதமான நோய்களுக்கும்

Mrs. K. Vasanthakumar ஐ

Acupuncturist (R.A.C)

தொடர்புகொள்ளவும்.

(416) 754-4024

5200 Finch Ave., East -- Suit #349
Scarborough, ON M1S 4Z5

# Toronto Police officers charged in 'Project South': Police Chief calls corruption case 'most concerning' in his career

# றொறன்ரோ காவல்துறை அதிகாரிகள் 'Project South' வழக்கில் குற்றம் சாட்டப்பட்டமை: தனது வாழ்க்கையில் "மிகவும் கவலைக்குரியது" என்று தெரிவித்த காவல்துறைத் தலைவர்!

## Four Police 'Officers?' will be suspended without pay. - Toronto police Chief Myron Demkiw

## முக்கியமான நான்கு குற்றவாளிகளான பொலிசார் சம்பளமற்ற வேலை இடைநிறுத்தம் செய்யப்பட்வுள்ளனர் என றொறன்ரோ தலைமை பொலிஸ அதிகாரி தெரிவிப்பு!



தங்கள் நாடுகளில் உயிருக்கு உத்தரவாதமில்லை. நிம்மதியான வாழ்க்கையை மேற்கொள்ள இயலவில்லை. இனம் சார்ந்த மற்றும் மதங்கள் தொடர்பான அடக்கு முறைகள் உள்ளன போன்ற காரணங்களால் வெளிநாட்டவர்கள் அமைதியைத் தேடி கால்பதிக்கும் கனடிய தேசத்தில் "வேலியே பயிரை மேய்கின்றதா? என்று மூக்கில் விரலை வைக்கும் அளவிற்கு பொலிஸ் உத்தியோகத்தர்களே குற்றச் செயல்களிலும் ஊழல் போன்றவற்றிலும் போதை வஸ்த்து கடத்தலிலும் ஈடுபட்ட காரணத்தால் தற்போது கனடா எங்கும் பேசு பொருளாக விளங்கும் றொறன்ரோ மாநகர பொலிஸ் பிரிவில் பணியாற்றும் ஏழு பொலிஸ் அதிகாரிகள்? (இவர்களை பொலிஸ் அதிகாரிகள் என்று அழைப்பது இனிமேலும் ஏற்றுக் கொள்ளக் கூடியதா என்று நாம் யோசிக்க வேண்டும்) தொடர்பான மேலதிக விபரங்களை இந்தப் பக்களில் எமது வாசகர்களுக்காத் தரலாம் என்றநோக்கத்தோடு ஆரம்பிக்கின்றோம்

இந்த மிகப்பெரிய குற்றச்செயல்கள் தொடர்பான விசாரணையில் ஏழு றொறன்ரோ மாநகர காவல்துறை அதிகாரிகள்? மற்றும் ஒரு ஓய்வுபெற்ற கான்ஸ்டபிள் மீது குற்றம் சாட்டப்பட்டுள்ளது என்ற செய்தி வெளியாகிய நாளிலிருந்து கனடாவின் அனைத்து பொலிஸ் பிரிவுகளிலும் சந்தேகங்கள் வலுக்கும் நிலையில உயர் அதிகாரிகள் பலர் கலக்கமடைந்தவர்களாக ஊடகங்களுக்கு தங்கள் கருத்துக்களைப் பகிர்ந்து வருகின்றார்கள்.

--றொறன்ரோ மாநகர பொலிஸ் பிரிவின் அதி உயர் தலைமை அதிகாரியான மைரான் டெம்கிவ் இந்த கைதுகள் தொடர்பாக கருத்து தெரிவிக்கையில் இந்த ஊழல் குற்றச்சாட்டுக்கள் மூலமாக - இதுவரை மொத்தம் 27 குற்றவாளிகள் கைது செய்யப்படும் அளவிற்கு எம்மைஅழைத்துக் கொண்டு சென்றுள்ளது. அத்துடன் எனது 35 ஆண்டுகளுக்கும் மேலான காவல்துறை பணி வாழ்க்கையில் நான் சந்தித்துள்ள மிக மோசமான குற்றவியல் வழக்குகள் இவை என்று கூறினார்.ழு

--றொறன்ரோ மாநகர பொலிஸ் பிரிவின் அதி உயர் தலைமை அதிகாரி டெம்கிவ் பொதுமக்களின் நம்பிக்கையை மீண்டும் நிலைநாட்டக் கூடிய அளவில் பாடுபட வேண்டிய ஒரு நேரம் வந்துள்ளது என்று றொறன்ரோ மாநகர மேயர் ஒலிவியா சோவ் கூறினார்.ழு

--றொறன்ரோ நகர பொலிஸ் பிரிவிற்கு வெளியே உள்ள யோர்க் பிராந்தியத்தில் உள்ள ஒரு வீட்டில் கொலை செய்ய சதித்திட்டம் தீட்டியதை போலீசார் நிறுத்தியதாக காவல்துறை கூறியதை அடுத்து, மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளின் தொடர்ச்சியில் ஜூன் 2025 இந்த பாரிய ஊழல் மற்றும் கொலைக் குற்றச்சாட்டுக்கள் தொடர்பான விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டன!

இவ்வாறு இந்த கைதுகளுக்கு "பிள்ளையார் சுழி போட்ட யோர்க் பிராந்திய பொலிஸ் பிரிவின் தலைவர் மற்றும் அர்ப்பணிப்புள்ள பொலிஸ் அதிகாரிகளின் முயற்சியினாலும் றொறன்ரோ பொலிஸ் பிரிவின் கடமை உணர்வுள்ள பொலிஸ் அதிகாரிகளினாலும் மேற்கொள்ளப்பறற்ற விசாரணைகள் மற்றும் கைதுகள் காரணமாக மோசமான குற்றவாளிகள் என்று கருதப்பட்டவர்களின் ஏழு றொறன்றொ மாநகர காவல்துறை அதிகாரிகள் மற்றும் ஒரு ஓய்வுபெற்ற கான்ஸ்டபிள் மற்றும் ஏனைய சுமார் 15 தனிநபர்களான குற்றவாளிகள் ஆகியோர் மீது பெரிய அளவிலான ஊழல் விசாரணையில் குற்றம் சாட்டப்பட்டுள்ளது, இது குற்றவியல் சம்பவங்கள் மற்றும் ஊழல் போதைப் பொருள் வியாபாரம் ஆகியவை தொடர்பாக கிடைத்த ரகசிய தகவல்கள் கசிந்து, எவ்வாறு இந்த குற்றவாளிகள் கூட்டாக மிரட்டி பணம் பறித்தல், துப்பாக்கிச் சூடு மற்றும் வர்த்தக நிலையங்களை கொள்ளையிடுவது போன்ற குற்றச் செயல்களுக்கு வழிவகுத்தது என்று யார்க் பிராந்திய காவல்துறைத் தலைவர் துனைஅ ஆயஉளுறநநெ 5ம் திகதி வியாழக்கிழமை அறிவித்தார்.



அப்போது அவரோடு றொறன்ரோ மாநகர காவல்துறை உயர் அதிகாரியான **Chief Myron Demkiw**, யோர்க் பிராந்திய பிரதித் தலைமை அதிகாரி **Ryan Hogan** வியாழக்கிழமை யோர்க் பிராந்திய பொலிஸ் பிரிவின் தலைமைச் செயலகத்தில் நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பின் போது முன் சொன்ன விடயங்களையும் பின்வரும் குற்றச்சாட்டுக்கள் தொடர்பான விடயங்களையும் தெரிவித்தார்.

" தெற்கிற்கு உரிய திட்டம்" என்று ப்ராஜெக்ட் சவுத் என்று அழைக்கப்படும் மேற்படி ஏழு மாத கால தொடர் இரகசிய விசாரணைகளின் இறுதியில், றொறன்றொ மாநகர காவல் சேவையின் வரலாற்றில் குற்றவியல் ஊழல் தொடர்பான மிகப்பெரிய விசாரணைகளில் ஒன்று என கண்டுபிடிக்கப்பட்டது முக்கியமான விடயமாகும். (தொடர்ச்சி 19ம் பக்கம்)



இலங்கை செய்திகள்
Sri Lanka News

# மன்னாரில் வீதி அமைக்க கோரிய நபருக்கும் நகர சபை தலைவருக்கும் இடையில் கைகலப்பு – காயமடைந்த நபர் வைத்தியசாலையில் அனுமதி

மன்னார் நிருபர்



(30-01-2026)

மன்னார் பாத்திமா புரம் பகுதியில் வீதி ஒன்றை அமைக்கும் போது எமில் நகர் பகுதியை சேர்ந்த நபர் ஒருவருக்கும் மன்னார் நகரசபை தலைவருக்கும் இடையில் வாய் தர்க்கம் ஏற்பட்டு கைகலப்பாகி அடிதடியில் முடிந்த நிலையில் எமில் நகர் பகுதியை சேர்ந்த நபர் ஒருவர் காயங்களுடன் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

குறித்த சம்பவம் தொடர்பில் மேலும் தெரிய வருகையில், மன்னார் நகர சபைக்கு சொந்தமான எமில் நகர் எல்லையில் உள்ள பாத்திமா புறத்தில் நகர சபைக்கு சொந்தமான வீதிகளில் கிரவல் பரப்பும் நடவடிக்கை இடம் பெற்று வந்த நிலையில் அப்பகுதியை சேர்ந்த நபர் ஒருவர் தங்கள் பகுதி வீதியையும் அமைத்து தருமாறு கோரிக்கை விடுத்திருந்தார்.

சம்பந்தப்பட்ட நபர் தொடர்ச்சியாக வீதி யை அமைத்து தர கோரி பலமுறை நகரசபை தலைவரிடம் முன்னதாகவே கோரிக்கை விடுத்திருந்தார்.

இந்த நிலையில் 30ம் திகதி வெள்ளிக்கிழமை அன்றைய தினம் வீதியை அமைக்கும் பணியை மேற்கொண்டிருந்த மன்னார் நகரசபை தலைவரிடம் நேரடியாக நீண்ட காலமாக கோரிக்கை விடுத்தும் எங்கள் பகுதி வீதியை அமைக்காது தனிப்பட்ட நபர் ஒருவருக்காக இந்த வீதி யை அமைக்க முன்னிற்பது சரியா? என கேள்வி எழுப்பி இருந்தார்.

இந்த நிலையில் இருவருக்கும் இடையில் வாய்த்தர்க்கம் முற்றிய நிலையில் குறித்த நபரை அவ்விடத்தில் இருந்து வெளியேறுமாறு நகரசபை தலைவர் தெரிவிக்க அவர் வெளியேற மறுத்துள்ளார்.

இதனை தொடர்ந்து நகரசபை தலைவர் குறித்த நபரை தள்ளி விட்டு அவர் மீது தாக்குதல் நடத்தியதாக வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட நபர் தெரிவித்துள்ளார்.

அதனை தொடர்ந்து இருவரும் மாறி மாறி தாக்கிக்கொண்ட நிலையில் பரஸ்பரம் கற்களாலும் எரிந்து கொண்டுள்ளனர்.

இந்த நிலையில் அதிக அளவு தாக்குதலுக்கு உள்ளான எமில் நகரை சேர்ந்த நபர் காயங்களுடன் வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளார்.

குறித்த சண்டையின் போது கற்கலால் தாக்குதல் மேற்கொள்ளப்பட்ட போது அங்கே இருந்த நகர சபை பெண் உறுப்பினர் மீது கற்கள் எறியப்பட்ட நிலையில் குறித்த சம்பவம் தொடர்பில் பெண் உறுப்பினரும் மன்னார் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு ஒன்றை மேற்கொண்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# மன்னார் மாவட்டச் செயலகத்தில் இடம்பெற்ற இலங்கையில் 78 ஆவது சுதந்திர தின நிகழ்வு

- எஸ்.ஆர்.லெம்பேட் (04-02-2026)



இலங்கையின் 78 ஆவது சுதந்திர தின நிகழ்வுகள் 4ம் திகதி அன்று (04-02-2026) புதன்கிழமை காலை மன்னார் மாவட்ட செயலகத்தில் இடம்பெற்றது.

நிகழ்வில் மன்னார் மாவட்ட செயலாளர் க.கனகேஸ்வரன் தேசிய கொடி ஏற்றப்பட்ட நிலையில் தேசிய கீதம் இசைக்கப்பட்டது.





தொடர்ந்து நாட்டின் சுதந்திரத்திற்காக உயிர் தியாகம் செய்த வீரர்களை நினைவு கூறும் வகையில் ஒரு நிமிட மௌன அஞ்சலி செலுத்தப்பட்டது.

அதனை தொடர்ந்து அரசாங்க அதிபரினால் சுதந்திர தின உரை நிகழ்த்தப்பட்டது. தொடர்ந்து மர நடுகை நிகழ்வு இடம்பெற்றது.

குறித்த நிகழ்வில் உதவி மற்றும் மேலதிக அரசாங்க அதிபர்கள், பிரதேச செயலாளர்கள், பதவி நிலை உத்தியோகத்தர்கள் என பலர் கலந்து கொண்டனர்.

மேலும் மன்னார், நானாட்டான், முசலி, மாந்தை மேற்கு மற்றும் மடு ஆகிய பிரதேச செயலகங்களில் தேசிய கொடி ஏற்றப்பட்டு சுதந்திர தின நிகழ்வுகள் இடம் பெற்றமை குறிப்பிடத்தக்கது.

# மன்னார் – புத்தளம் பிரதான பாதை மூடப்பட்டால் பேரழிவு உறுதி என ஆளும் தேசிய மக்கள் சக்தி அரசுக்கு எச்சரிக்கை

- எஸ்.ஆர்.லெம்பேட் (05-02-2026)

100 வருடம் பழமை வாய்ந்த புத்தளம் மன்னார் பாதையை திறந்து மக்களுக்கு இலகுபடுத்தி கொடுங்கள் என்று அகில இலங்கை மக்கள் காங்கிரஸின் தலைவரும்,பாராளுமன்ற உறுப்பினருமான றிசாத் பதியுதீன் அரசுக்கு பாராளுமன்றில் வேண்டுகோளினை முன்வைத்தார்.

பாராளுமன்றத்தில் 5ம் திகதி வியாழக்கிழமை அன்று உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு கூறினார். அவர் பாராளுமன்றத்தில் மேலும் உரையாற்றுகையில் பின்வருமாறு கூறினார்.

கடந்த தேர்தல்களின் போது மன்னாருக்கு வேட்பாளராக வந்த ஜனாதிபதி தாங்கள் ஆட்சிக்கு வந்தால் இந்த பாதையை திறந்து மக்களுக்கு வசதி செய்து கொடுப்பதாக கூறினார்.

இந்த அரசாங்கத்தின் அமைச்சராக இருக்கின்ற விமல் ரத்நாயக்க தொடர்பில் எம்மிடத்தில் மதிப்பிருந்தது,ஆனால் இன்று அவரது பதில் அதை உடைத்து எரிந்துவிட்டது.

இந்த அரசு கொண்டு வருகின்ற அனைத்து நல்ல விடயங்களையும் நாங்கள் நேர்மையுடன் பார்த்து வந்துள்ளதுடன்,அதற்கு எதிராக பாராளுமன்றில் நாம் பேசியதில்லை.

ஆனால் துரதிஷ்டம் தற்போது தான் புரிகிறது இந்த அரசும், ஜனாதிபதியும், அமைச்சர்களும், இவர்களுக்கு கீழ் வருகின்ற இரண்டு நிறுவனங்களும் இந்த புத்தளம் - மன்னார் பாதையினை நிரந்தமாக மூடுவதற்க எடுத்துள்ள நடவடிக்கைகள்.

முன்னாள் ஜனாதிபதிகளான மஹிந்த ராஜபக்ச, மைத்திரிபால சிறிசேன, ரணில் விக்ரமசிங்க ஆகியோர் இந்த பாதை திறப்பது தொடர்பில் தூர நோக்கு சிந்தணையுடன் செயற்பட்டனர்.

கோட்டாபய ராஜபக்ஷவின் ஆட்சியில் தான் இது இழுத்து மூடப்பட்டது. அன்று வீதி அபிவிருத்தி அதிகார சபை மற்றும் வனவிலங்கு திணைக்களம் என்பன மக்களின் பக்கம் நின்று இந்த பாதை மக்களுக்கு பயணத்திற்காக வழங்க வேண்டும் என்ற நிலைப்பாட்டில் தான் இருந்தார்கள்.

ஆனால் இன்று இந்த அரசாங்கத்தின் கீழ் அவர்கள் வெளிநாட்டு நிதிகளை அண்டி வாழும் அமைப்புக்களுடன் இணைந்து இந்த பாதையை நிரந்தரமாக மூட ஒத்துழைப்பு நல்குவது பெறும் துரோகமும்,அநியாயமாகும்.

இந்த பாதையானது முஸ்லிம்களுக்கு மட்டும் சொந்தமானது அல்ல என்பதை இந்த அரசு புரிந்து கொள்ள வேண்டும். மாறாக தமிழர்களுக்கும், அது போன்று அனைவருக்கும் பொதுவானது. அதனை திறப்பதன் மூலம் கொழும்பில் இருந்து யாழ்ப்பாணம் செல்லும் அனைவருக்கும் 100 கிலோமீட்டர் குறைந்த தூரத்தை கொண்டதாக இருப்பது மட்டுமல்லாமல் பொருளாதார ரீதியிலும் இது முக்கியமானதாகும்.

அன்று நான் அமைச்சராக இருந்த போது எடுத்த முயற்சியால் இந்த பாதையினை திறந்து மக்களுக்கு பயண வசதிகள் செய்து கொடுத்தோம். அப்போது கூட சில பெரும்பான்மை இனவாதத்தை கொண்ட சிலர் இதற்கெதிராக செயற்பட்டது மட்டுமல்லாமல் இலங்கையில் உள்ள பெரும்பான்மை ஊடகங்களும் இந்த பாதையினை மையப்படுத்தி பல்வேறு இனவாத கருத்துக்களை விதைத்தனர்.

வடக்கில் வாழும் மக்களுக்கு தேவையான அனைத்து வசதிகளையும் செய்து தருவதாக கூறிய ஜனாதிபதி அனுர குமார திசாநாயக்க,மன்னார் காற்றாலை மின்சாரத்தை அமைக்க ஏற்பட்ட மக்கள் எதிர்ப்பை அடுத்து எம்மையும், மதத்தலைவர்கள் உள்ளிட்ட பலரையும் அழைத்து இந்த திட்டத்தை மட்டும் நடைமுறைப்படுத்த உதவுமாறு வேண்டினார்.

அப்போதும் நாங்கள் தெளிவாக சொன்னோம்.மக்களின் விருப்பத்திற்கு எதிராக எதையும் செய்ய முடியாது என்று கூறியதுடன், மன்னார் - புத்தளம் பாதையினை திறந்து மக்களது அத்தியாவசிய தேவையை செய்து கொடுங்கள் என்று வலியுறுத்தினோம்.

78வது இலங்கையின் சுதந்திரத்தை அரசு கொண்டாடிய போது வடக்கிலும், கிழக்கிலும் வாழும் மக்கள் இன்றைய தினத்தை கரிநாளாக கொண்டாடியதோடு, தமது எதிர்ப்பு ஊர்வலங்களை நடத்தினர். ஆனால் நாங்கள் உங்களிடம் நாட்டை பிரித்து கொடுங்கள் என்று கேட்கவில்லை என்பதை புரிந்து கொள்ளுங்கள்.

மன்னார் - புத்தளம் பாதை தொடர்பாக வன்னி,யாழ் மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர்களையும், புத்தளம் மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர்களை அழைத்து இந்த பாதை தொடர்பில் மக்கள் கருத்துக்களை கேட்டு இந்த பாதையை திறப்பதற்கு அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்பதை வலியுறுத்தி கேட்டுக் கொள்கிறேன் என்றும் றிசாத் பதியுதீன் கூறினார்.

கடந்த 15 வருடங்களுக்கு முன்னர் போடப்பட்ட அந்த வழக்கின் எதிரிகளோடு சதிகாரர்களோடும் இந்த அரசாங்கம் இணைந்து இந்த பாதையை இழுத்து மூடுவதற்கு எடுக்கும் நடவடிக்கையானது பெரும் அழிவை தோற்றுவிக்கும் என்பதை சபையில் சுட்டிக்காட்ட விரும்புகிறேன் என்றும் தனதுறையில் அவர் மேலும் குறிப்பிட்டார்.


TRADITIONAL CHINESE
ACUPUNCTURE THERAPY

எல்லாவிமான வலிகளுக்கும்
ஆஸ்மா, பீனிசம், ஒவ்வாமை
மனத்தளர்ச்சி, தலைவலி
நீரிழிவு நோய், வயிற்றுவலி
மாதவிடதய் சம்மந்தமானவையும்
உடற்பருமன் குறைத்தல்

All Pain & Aches, Arthritis
Asthma, Sinusitis, Rhinitis Allergies
Stress, Migraine & All Types of Headaches
Diabetes, Gastric Pain, Ulcer
Menstruation
Weight Loss

முதலான சகலவிதமான நோய்களுக்கும்
Mrs. K. Vasanthakumar ஐ
Acupuncturist (R.A.C)
தொடர்புகொள்ளவும்.
(416) 754-4024
5200 Finch Ave., East -- Suit #349
Scarborough, ON M1S 4Z5

இலங்கை செய்திகள் Sri Lanka News

# எமக்கான உரிமை கிடைக்கும் வரை இலங்கையின் சுதந்திர நாள் எமக்கு கரிநாளே ஆகும் என காணாமல் ஆக்கப்பட்டவர்கள் சங்கத்தின் செயலாளர் ஜெனிற்றா தெரிவிப்பு!

தமிழ் மக்கள் தம்மைத் தாமே ஆளுகின்ற உரிமை கிடைக்கும் வரை இலங்கையின் சுதந்திர நாள் தமிழ் மக்களுக்கு கரிநாள் என வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளின் சங்கத்தின் செயலாளர் ஜெனிற்றா தெரிவித்தார்.

4ம் திகதி புதன்கிழமை கிளிநொச்சியில் இடம் பெற்ற இலங்கையின் சுதந்திர நாள் தமிழ் மக்களின் கரிநாள் போராட்டத்தில் கலந்து கொண்டு ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கையில் அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில், தமிழ் மக்களுக்கான உரிமைகள் மறுக்கப்பட்ட போதே எமது இளைஞர் யுவதிகள் இனத்தின் விடுதலைக்காக ஆயுதமேந்தினார்கள்.

அந்த ஆயுதப் போராட்டம் மௌனிக்கப்பட்ட பின்னரும் இலங்கையி அரசு தமிழ் மக்களை ஒடுக்கப்பட்ட இனமாக வழிநடத்தி தொடர்ந்து உரிமைகள் பறிக்கப்பட்டு வருகிறது. இறுதி யுத்தத்தில் இராணுவத்திடம் ஒப்படைக்கப்பட்ட எமது பிள்ளைகளுக்கு என்ன நடந்தது என இதுவரை எந்த ஒரு அரசாங்கமும் கூறாத நிலையில் தொடர்ச்சியாக நாம் போராடி வருகிறோம்.

வடக்கு கிழக்கு தமிழர் பகுதிகளில் இருந்து இராணுவத்தை வெளியேற்றுமாறு பல போராட்டங்களை மேற்கொண்ட போதும் இராணுவம் தொடர்ந்தும் தமிழர் பகுதிகளில் நிலை கொண்டுள்ளது.

தமிழ் மக்களுக்கு தம்மைத் தாமே பாதுகாத்துக் கொள்ளும் திராணி உள்ள நிலையில் இராணுவத்தை பாதுகாப்புக்காக வைத்திருக்கிறோம் என இலங்கையின் ஆட்சியாளர்கள் கதை விடுகிறார்கள்.



தமிழர் பகுதிகளில் திட்டமிட்ட குடியேற்றம் பௌத்த விகாரை கட்டுவதற்கே இராணுவத்தை தமிழர் பகுதிகளில் வைத்திருக்கிறார்கள் என்பதை உண்மையான விடயம்.

தையிட்டியில் தமிழ் மக்களின் பூர்விக நிலங்களுக்குள் இராணுவத்தை வைத்து சட்ட விரோத திஸ்ஸ விகாரையை கட்டி முடித்து விட்டார்கள்.

யுத்தம் நிறைவடைந்த பின்னர் வடக்கு கிழக்கு பகுதியில் இராணுவத்தை பயன்படுத்தி தமிழ் மக்களுடைய பூர்வீக நிலங்களை கையகப்படுத்துவது மற்றும் திட்டமிட்ட பௌத்தமயமாக்கலை மேற்கொள்வதற்கே இராணுவ இருப்பு தேவைப்படுகிறது.

ஆகவே தமிழ் மக்கள் தருவதை பெற்றுக்கொண்டு இருக்கும் இனம் அல்ல எமது உரிமைகள் கிடைக்கும் வரை தொடர்ந்தும் போராடுவோம் இலங்கையின் சுதந்திர நாள் எமது உரிமைகள் கிடைக்கும் வரை கரிநாளாகவே இருக்கும் என அவர் மேலும் தெரிவித்தார்.



# ஈழ விடுதலைப் போராட்டத்தின் முன்னோடிகளில் ஒருவரான திருநெல்வேலி முத்துக்குமாரசாமி நினைவுகூரப்பெற்றார்!

அமெரிக்காவில் அண்மையில் இயற்கை எய்திய ஈழ விடுதலைப் போராட்டத்தின் முன்னோடிகளில் ஒருவரான தம்பித்துரை முத்துக்குமாரசாமியை நினைவுகூரும் அஞ்சலி நிகழ்ச்சி கடந்த 1ம் திகதி (01.02.2026) ஞாயிற்றுக்கிழமை, யாழ்ப்பாணம் திருநெல்வேலி இந்து வாலிபர் சங்க மண்டபத்தில் நடைபெற்றது.

திருநெல்வேலி இந்து வாலிபர் சங்கத்தின் தலைவரும், தமிழ்த்தேசியப் பசுமை இயக்கத்தின் தலைவருமான பொ. ஐங்கரநேசன் தலைமையில் இந்நிகழ்ச்சி நடைபெற்றது. இதில் நாடாளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம், அரசியல் ஆய்வாளர் சி.சு.யோதிலிங்கம், வல்வெட்டித்துறை நகரசபைத் தலைவர் எம். கே.சிவாஜிலிங்கம், வைத்திய கலாநிதி இ.சிவசங்கர், கணக்காளர் வ. தில்லைநாதன் ஆகியோர் அமரர் முத்துக்குமாரசாமி தொடர்பான நினைவுகளைப் பகிர்ந்துகொண்டனர்.

இந்து வாலிபர் சங்கத்தின் செயலாளர் யோ.சஜீதராவின் வரவேற்புரையுடன் ஆரம்பமான இந்நினைவுகூர் அஞ்சலி நிகழ்ச்சியில் தமிழ்த் தேசியப் செயற்பாட்டாளர்கள் அமரர் முத்துக்குமாரசாமியின் உறவினர்கள், பொதுமக்கள் என ஏராளமானோர் கலந்துகொண்டு சுடரேற்றி அஞ்சலி செலுத்தினர்.




இந்நிகழ்ச்சியில் அரசியல் ஆய்வாளர் சி.சு.யோதிலிங்கம் எழுதிய தமிழ்த்தேசியப் போராட்டத்தின் ஆரம்பகர்த்தா த.முத்துக்குமாரசாமி" என்ற கையேடும் வெளியிடப்பட்டது.


# Thana Insurance Inc

## T20 INSURANCE

| AGE | | 25 | | 30 | | 35 | | 40 | | 45 | | 50 | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | M | F | M | F | M | F | M | F | M | F | M | F |
| 200K | T20 | 17 | 15 | 18 | 15 | 20 | 17 | 27 | 21 | 43 | 30 | 69 | 49 |
| 500K | T20 | 30 | 22 | 31 | 22 | 32 | 24 | 46 | 35 | 73 | 54 | 126 | 85 |
| 1MILL | T20 | 54 | 36 | 55 | 38 | 56 | 42 | 86 | 62 | 139 | 100 | 244 | 164 |

## PERMANENT LIFE INSURANCE (PREMIUM NEVER INCREASE)

| AGE | | 25 | | 30 | | 35 | | 40 | | 45 | | 50 | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | M | F | M | F | M | F | M | F | M | F | M | F |
| 200K | WL | 82 | 71 | 100 | 86 | 123 | 106 | 152 | 131 | 197 | 166 | 238 | 209 |
| 500K | WL | 192 | 164 | 232 | 202 | 295 | 251 | 368 | 316 | 480 | 407 | 587 | 513 |

## NON MEDICAL INSURANCE (PREMIUM NEVER INCREASE)

| AGE | | 45 | | 50 | | 55 | | 60 | | 65 | | 70 | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | M | F | M | F | M | F | M | F | M | F | M | F |
| 25K | WL | 38 | 34 | 47 | 40 | 55 | 49 | 76 | 75 | 106 | 84 | 148 | 105 |
| 50K | WL | 69 | 62 | 89 | 75 | 104 | 93 | 147 | 123 | 206 | 162 | 290 | 205 |
| 100K | WL | 133 | 118 | 172 | 144 | 202 | 179 | 289 | 241 | 406 | 319 | 475 | 405 |

## 20 YEARS TERM - NON MEDICAL INSURANCE

| AGE | | 40 | | 45 | | 50 | | 55 | | 60 | | 65 | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | M | F | M | F | M | F | M | F | M | F | M | F |
| 100K | T20 | 20 | 17 | 28 | 22 | 41 | 34 | 78 | 57 | 131 | 88 | 233 | 157 |
| 200K | T20 | 33 | 30 | 50 | 38 | 78 | 63 | 150 | 108 | 257 | 171 | 460 | 307 |

Thana Manickavasagar

Insurance Broker



THANA INSURANCE Inc.

Web : www.thana.ca

E-mail : thana7@gmail.com

Address : 80 Nashdene Road , unit D218, Scarborough, ON,M1V 5E4

Cell : 416-728-5772

Office : 416-519-3896

"WE DO 100% ONLINE SERVICES,24/7."



# கடந்த கிழமை நடந்த ஆர்ப்பாட்டங்கள்

**எப்பொழுது நடக்கும் என்று தெரியாத மாகாண சபை தேர்தலை நோக்கியும் எப்பொழுது வரும் என்று தெரியாத புதிய யாப்பு முயற்சிகளை நோக்கியும் தமிழ்க் கட்சிகள் தங்களுக்கு இடையே மோதிக் கொண்டிருக்கும் ஓர் அரசியற் சூழலில், கடந்த புதன் கிழமை, தமிழர் தாயகத்தில், இலங்கையின் 78ஆவது சுதந்திர தினம் கரி நாளாக அனுஷ்டிக்கப்பட்டது. பல்கலைக் கழக மாணவர்கள் அதை முன் நின்று ஒழுங்குபடுத்தினார்கள். கடந்த வாரம் அடுத்தடுத்த நாள் நடந்த போராட்டங்களில் அதிக அளவு மக்கள் தொகையினர் கலந்துகொண்ட ஆர்ப்பாட்டம் அது. கட்சி கடந்து தமிழ் மக்களைத் திரட்ட பல்கலைக்கழக மாணவர்களால் முடியும் என்பதை அது நிரூபித்திருந்தது.**

---

**- யாழ்ப்பாணத்திலிருந்து நிலாந்தன் எழுதுகின்றார் -**

**கி**வுல் ஓயா அபிவிருத்தி திட்டத்திற்கு எதிரான போராட்டம் தமிழ்க் கட்சிகளை ஒப்பீட்டளவில் ஒருங்கிணைத்திருக்கிறது. கடந்த திங்கட்கிழமை நெடுங்கேணியில் நூற்றுக்கணக் கானவர்கள் திரண்டிருந்தார்கள். தமிழரசுக் கட்சியின் சுமந்திரன் அணி அந்தப் போராட்டத்தை ஒழுங்குபடுத்தியிருந்தாலும் சிறீதரனும் அவருடைய அணியினரும் அதில் கலந்து கொண்டார்கள். தமிழரசுக் கட்சி கடந்த சில மாதங்களாக ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்போடு உறவாடி வருகிறது. அதனால் ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர்களும் அந்த ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொண்டார்கள்.

கடந்த ஆண்டின் இறுதியில் தையிட்டியில் நடந்த எதிர்ப்புப் போராட்டத்தில் பல்வேறு கட்சிகளைச் சேர்ந்தவர்களும் பங்குபற்றியபோது அது ஒப்பீட்டுளவில் அதிக ஜனத்தொகையோடு காணப்பட்டது. அப்படித்தான் கிவுல் ஓயா திட்டத்திற்கு எதிராகவும் ஒப்பீட்டளவில் அதிகம் பேர் நெடுங்கேணி ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொண்டார்கள்.

ஆனால் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியை மையமாகக் கொண்ட தமிழ்த் தேசிய பேரவையைச் சேர்ந்த கட்சிகள் அதில் கலந்துகொள்ளவில்லை. நெடுங்கேணிப் போராட்டம் நடந்து கொண்டிருந்த அதே காலப்பகுதியில் யாழ்ப்பாணத்தில் ரில்கோ விருந்தினர் விடுதியில், தமிழ்த் தேசிய மக்கள் முன்னணிக்கும் கடல் தொழிலாளர் சங்கங்களுக்கும் இடையே ஒரு சந்திப்பு இடம்பெற்றது. தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் பிரமுகர்கள் அந்தச் சந்திப்பில் காணப்பட்டார்கள். தமிழ்த் தேசியப் பேரவையைத் தவிர்த்து ஏனைய பெரும்பாலான தமிழ்க் கட்சிகள் நெடுங்கேணி ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொண்டன.

சிங்கள பௌத்த ஆக்கிரமிப்பு, நிலப்பறிப்பு, ஒடுக்குமுறை என்று வரும்பொழுது தமிழ்க் கட்சிகள் ஒன்றிணைய முடியும் என்பதற்கு இதுவும் இதற்கு அடுத்த நாள் கிளிநொச்சியிலும் மட்டக்களப்பிலும் நடந்த ஆர்ப்பாட்ட்ங்கள் ஆகப்பிந்திய உதாரணங்கள். அதேசமயம், நெடுங்கேணியில் நடந்தது அரசுக்கு எதிரான ஒரு போராட்டம் என்ற போதிலும் கூட அங்கே வேறு உள்நோக்கங்களும் உண்டு.

முதலாவது, இந்தப் போராட்டத்தின் மூலம் சுமந்திரன் தன்னை அரசுக்கும் சிங்கள பௌத்த ஆக்கிரமிப்புக்கும் எதிரானவராக நிறுவ முற்படுகிறார். அவருடைய கட்சிக்குள் சிறீதரன் அணியும் கட்சிக்கு வெளியே தமிழ்த் தேசியப் பேரவையும் பொதுவாக அவரை தேசிய நீக்கம் செய்பவர் என்று குற்றம் சாட்டி வருகின்றன. அவர் கொழும்பு மைய அரசியல்வாதி என்றும் தமிழரசுக் கட்சியை கொழும்பை நோக்கிச் சாய்க்க முற்படுகிறார் என்றும் அவர் மீது விமர்சனங்கள் உண்டு. இந்த விமர்சனங்களுக்குப் பதில் அளிக்க அவருக்கு கிவுல் ஓயா திட்டத்திற்கு எதிரான போராட்டம் உதவும்.

கடந்த இரண்டு ஆண்டுகளுக்கும் அதிகமாக அவர் அதைத்தான் செய்து வருகிறார்.கட்சிக்குள் தன்னுடைய ஸ்தானத்தை எப்படிப் பலப்படுத்துவது? கட்சித் தலைவராக தன்னை எப்படிக் கட்டியெழுப்புவது? என்று சிந்தித்து தந்திரமாகவும் புத்திசாலித்தனமாகவும் காய்களை நகர்த்தி வருகிறார்.

தமிழரசுக் கட்சியானது எனைய கட்சிகளோடு ஒப்பிடுகையில் வடக்கு கிழக்காக ஒப்பீட்டளவில் பலமான கீழ் மட்டக் கட்டமைப்பைக் கொண்டிருக்கிறது. ஒப்பீட்டளவில்தான். இந்தக் கட்டமைப்பை பதில் செயலாளராக சுமந்திரன் தன்னுடைய கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவர முயற்சிக்கின்றார். அவ்வாறு ஏற்கனவே கட்சிக்குள்ள அடிமட்ட வலைப் பின்னலை தன்னை மையமாகக் கொண்டு பலப்படுத்துவதன்மூலம் அவர் கட்சிக்குள் தன்னுடைய தலைமை ஸ்தானத்தை பலப்படுத்திக் கொள்ளலாம் என்றும் நம்புகிறார்.

தமிழரசுக் கட்சிக்குள்ள பலமான கீழ்மட்டக் கட்டமைப்பை முடுக்கி விடுவதன் மூலம் வெற்றி பெறலாம் என்பதற்கு உள்ளூராட்சி மன்றத் தேர்தல் முடிவுகள் நல்ல உதாரணம். அதில் சுமந்திரனின் உழைப்பு அதிகமானது. ஆனால் இங்குள்ள பிரச்சினை என்னவென்றால், தமிழரசுக் கட்சியின் வாக்குத்தளம் எனப்படுவது தனியாக அந்தக் கட்டமைப்புகளுக்கூடாக கிடைப்பது மட்டுமல்ல.அதைவிட ஆழமான பொருளில், அது இன உணர்வுகளின் அடிப்படையிலான வாக்குத் தளமாகும்.சிங்கள பௌத்த இனவாதத்துக்கு எதிரான தமிழ் இன உணர்வுகளின் அடிப்படையிலான ஒரு வாக்குத்தளம் அது. அந்த வாக்குத்தளத்தை முழுமையாக கைப்பற்றுவது என்று சொன்னால் அதே உணர்வு தளத்தில் ஏற்றுக்கொள்ளப்படத்தக்க ஒரு தலைமையை வழங்க வேண்டும். இதில் சுமந்திரனுக்கு உள்ள மைனஸ் என்னவென்றால், அவர் ஒரு தமிழ்த் தேசிய நீக்க வாதியாக விமர்சிக்கப்படுவதுதான். எனவே அந்த விமர்சனங்களை வெற்றி கொள்வதற்கு அவர் கிவுல் ஓயா திட்டத்துக்கு எதிரான போராட்டம் போன்ற போராட்டங்களை முன் நின்று ஒழுங்கமைக்கின்றார்.

இரண்டாவது உள்நோக்கம், தமிழரசு கட்சிக்குள் காணப்படும் சுமந்திரனுக்கும் சிறீதரனுக்கும் இடையிலான முரண்பாடுகள். இதில் யார் அதிகம் சனத்தை கொண்டு வர முடியும்? யார் அரசுக்கு எதிரான போராட்டத்தில் முன்னணியில் நிற்கின்றார்? போன்றவற்றை நிரூபிக்கும் ஒரு போட்டி உண்டு. கிவுல் ஓயா திட்டத்திற்கு எதிரான போராட்டத்தை தன் கையில் எடுத்ததன் மூலம் சுமந்திரன் கட்சிக்குள் தன்னுடைய முதன்மை நிறுவ முற்படுகிறார்.

மூன்றாவது உள்நோக்கம், கஜேந்திரகுமார் தலைமையிலான தமிழ்த் தேசியப் பேரவையைத் தனிமைப்படுத்துவது. தமிழரசுக் கட்சியின் சுமந்திரன் அணி ஏற்கனவே ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்போடு பேசி வருகிறது. வரக்கூடிய மாகாண சபைத் தேர்தல் ஒன்றை எதிர்நோக்கி அவர்கள் இவ்வாறான பேச்சுவார்த்தைகளில் ஈடுபட்டு வருகிறார்கள் என்பது தெளிவாகத் தெரிகிறது.

மாகாண சபைத் தேர்தலை அரசாங்கம் இந்த ஆண்டு நடத்தும் நோக்கம் இல்லை என்று அமைச்சரவைப் பேச்சாளர் அண்மையில் தெரிவித்திருந்தார். எனினும் இந்தியா அந்தத் தேர்தல் விரைவாக நடத்தப்படுவதை விரும்புகிறது என்ற காரணத்தால், மாகாண சபைத் தேர்தல் விரைவில் நடக்கலாம் என்ற ஊகத்தின் அடிப்படையில் சுமந்திரன் அணியும் ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும் தொடர்ந்து சந்தித்து வருகின்றன. இது மூன்றாவது உள்நோக்கம்.

மாகாண சபைத் தேர்தல் நடந்தால் அதில் தமிழரசுக் கட்சியின் வெற்றி வாய்ப்புகளை உறுதிப்படுத்தவும் பலப்படுத்தவும் இந்தக் கூட்டு அவசியம் என்று அவர்கள் கருதக்கூடும். ஆனால் சில நாட்களுக்கு முன் அமைச்சரவைப் பேச்சாளர் தெரிவித்த தகவல்களின்படி இந்த ஆண்டில் மாகாண சபைத் தேர்தலை அவர்கள் வைப்பார்களா என்பது சந்தேகமாக உள்ளது.

ஆனால் எப்பொழுது நடக்கும் என்று தெரியாத மாகாண சபையை நோக்கியும் எப்பொழுது வரும் என்று தெரியாத புதிய யாப்பு முயற்சிகளை நோக்கியும் தமிழ்க் கட்சிகள் தங்களுக்கு இடையே மோதிக் கொண்டிருக்கும் ஓர் அரசியற் சூழலில், கடந்த புதன் கிழமை, தமிழர் தாயகத்தில், சிறீலங்காவின் 78ஆவது சுதந்திர தினம் கரி நாளாக அனு'டிக்கப்பட்டது. பல்கலைக்கழக மாணவர்கள் அதை முன் நின்று ஒழுங்குபடுத்தினார்கள்.கிளிநொச்சியிலும் மட்டக்களப்பிலும் ஆயிரக்கணக்கானவர்கள் திரண்டார்கள். கட்சி கடந்த ஒரு போராட்டம் அது. தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியும் அங்கே காணப்பட்டது. கடந்த வாரம் அடுத்தடுத்த நாள் நடந்த போராட்டங்களில் அதிக அளவுத் தொகையினர் கலந்துகொண்ட ஆர்ப்பாட்டம் அது. கட்சி கடந்து தமிழ் மக்களைத் திரட்ட பல்கலைக்கழக மாணவர்களால் முடியும் என்பதை அது நிரூபித்திருந்தது.

## தாய்மொழி காப்போம்!

உலகில் உயர்மொழி நம்தமிழ் மொழியே
உவகையாய்ப் பேசுவோம் அம்மொழியை
இலக்கண இலக்கிய இயற்தமிழ் இசைத்தமிழ்
அனைத்தும் அமைந்தது எம்மொழியே!
ஐம்பெரும் காப்பியம் அளித்த அரும்மொழி
அவ்வையின் ஆத்திசூடியும் அடங்கியமொழியே
எம்மொழிக்கு ஈடிணை இல்லை எங்கும்
ஏற்றமுறச் செய்வோம் அதனை இவ்வுலகிலே!

அன்னைத் தமிழே அழகாய்த் தாலாட்டும்
ஆயுள்வரை நம்மைச் சீராட்டும்
இன்பம் தந்திடும் இனிய மொழியாம்
எல்லோரும் பருகும் தேனடையாம்
கரும்பிலும் இனிய கனிமொழி எம்மொழி
காலங்கள் ஆயிரம் பலகண்டது
இரும்பையும் எலும்பையும் உருக்க வல்லது
இதயத்தையும் இதமாய்ப் பேணும் அதுவே!

பாட்டிசைத்த புலவர் பல்லாயிரம் என்றால்
பாக்களைப் படித்தவர் பலகோடியாம்
நாட்டுப் பாடலும் நம்தமிழில் உண்டே!
நாடுபோற்றும் திருக்குறளும் நம்மொழியே!
காவிய நாயகி கண்ணகி கதையையும்
காதலியைக் கைவிட்ட காதலனையும்
காவியமாய் ஆக்கித் தந்த கவின்தமிழை
காலம் எல்லாம் போற்றுவோமே!

உள்ளத்தை ஊடறுத்துச் செல்லும் திருவருட்பா
ஊனையும் உருக்கும் திருவாசகம்
வள்ளலார் வழங்கிய வாழ்க்கை உபதேசம்
வாகாய் வரிசையாய் நிக்குதே!
எம்மதமும் சாரா பொதுமொழியாம் எம்மொழியை
இணையத்திலும் ஏற்றினோம் ஏற்றமுற
எம்வீட்டுக் கணினியும் கவிபாடும் எம்மொழியில்
இனியெங்கும் வீசுமே தமிழ்வாசமே!

முதலில் தோன்றிய மூத்த மொழியிது
முக்கனிச் சுவைமிகு மூலமொழி
இதயமே இளகும் ஈடில்லா மொழியின்
இலக்கணம் இயம்புமே தொல்காப்பியம்
பாரதி காட்டிய புதுமைப் பெண்ணை
பாடலாய்ப் பாடிக் காட்டுவோம்
பாரதப் போரின் பாடல்கள் பாடியே
பாரெலாம் தமிழை வளர்ப்போமே!

---

**ஆக்கம் ... பாவலர் மார்க்கம் சந்திரன்**
(416) 844-7453

இலங்கை செய்திகள் Sri Lanka News

# தேசிய மக்கள் சக்தியின் எதிர்ப்பையும் மீறி வலி கிழக்கு பிரதேச சபையில் கிவுல் ஓயாவிற்கு எதிரான பிரேரணை நிறைவேற்றம்!

## தவிசாளரை உரையாற்ற விடாது குழப்பிய தேசிய மக்கள் சக்தி உறுப்பினரை சபையில் இருந்து வெளியேற்றுவோம் என எச்சரித்த நிலையில் சபையில் சற்ற அமைதி!



தமிழ் மக்களின் பூர்விக தாயகமான வடக்குக் கிழக்கில் தமிழ் இன விகிதாசாரத்தினை மாற்றியமைக்கும் அரச கொள்கையின் திட்டமிட்ட தொடர்ச்சியாகவே கிவுல் ஓயாத்திட்டம் அமைகிறது எனத் தெரிவித்து வலிகாமம் கிழக்கு பிரதேச சபையில் கண்டனத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

கடந்த 30ம் திகதி வெள்ளிக்கிழமை சபைக் கூட்டம் இடம்பெற்றது. கிவுல் ஓயாத்திட்டம் தொடர்பான பிரேரணை சபையில் தவிசாளர் தியாகராஜா நிரோஷனால் முன்வைக்கப்பட்டது. இப் பிரரேரணையினை சபையில் முன்வைக்க முடியாது என மத்தியில் ஆளும் தேசிய மக்கள் சக்தியைப் பிரதிநிதித்துவப் படுத்துகின்ற உறுப்பினர்கள் கடும் எதிர்ப்பினைத் தெரிவித்தனர். அவ் எதிர்ப்பினையும் மீறி தமிழ்க் கட்சிகள் அனைத்தும் பிரேரணைக்கு ஆதரவாக தேசிய மக்கள் சக்தியினரின் கருத்தை எதிர்த்தன. இறுதியில் தேசிய மக்கள் சக்தியினர் நிகழ்ச்சி நிகழ்ச்சி நிரலில் இல்லாததை எவ்வாறு தவிசாளர் சபைக்கு ஆற்றுப்படுத்த முடியும் என வாதிட்டனர்.

நிகழ்ச்சி நிரலில் சேர்க்கப்படாத ஒன்றை சபையின் அனுமதியுடன் தவிசாளர் அறிவிப்பாக முன்வைப்பதற்கு ஏற்பாடுகளில் இடமுண்டு. எனவே தயவு செய்து இனம் சார்ந்த பிரச்சினையில் உங்கள் கட்சி சார்ந்த நிலைப் பாடுகளுக்காக நீங்கள் தடையினை ஏற்படுத்தாதீர்கள் என பலதடவைகள் தேசிய மக்கள் சக்தியினரின் வினயமாகக் கோரினார். எனினும் கூச்சல் தொடர்ந்தது.

தவிசாளர், தமிழ் மக்களின் இனப்பிரச்சினைக்கான காரணங்களுள் ஒன்றாக அரச அனுசரனையுடன் திட்டமிட்ட சிங்கள பேரினவாதக் குடியேற்றங்கள் வரலாற்று ரீதியாக இடம்பெற்றுள்ளன. மாறி மாறி ஆட்சிக்கு வந்த அரசாங்கங்கள் அதிகாரசபைகள் ஊடாக குறிப்பாக மகாவலி அதிகார சபை ஊடாக ஏற்கனவே பல சிங்கள குடியேற்றங்கள் தமிழர் இன விக்தாசாரத்தினையும் அடையாளத்தினையும் இருப்பையும் அழிக்கும் வகையில் இடம்பெற்றுள்ளன. அரசாங்கம் தமிழ் மக்களுக்கு இழைக்கப்பட்ட அநீதிகளுக்கு பொறுப்புக்கூறாது இனப்பிரச்சினை தீர்வை முன்வைக்காது கடந்த அரசாங்கங்கள் போலவே தொடர்ந்து செயற்படுகின்றது. அதனை ஏற்க முடியாது. ஆரம்பமாக அரசாங்கம் 2500 மில்லியன்களை ஒதுக்கி சூட்சுமமான முறையில் ஆரம்பித்துள்ள இத்திட்டத்தினை எதிர்கின்றோம். மேலும் பல கோடிகள் இத்திட்டத்திற்கு ஒதுக்கப்படவுள்ள நிலையில் அரசாங்கம் தமிழர்களின் வரலாற்றத் தாயக இயல்பு வாழ்வை உறுதிப்படுத்த வேண்டும் என்றார்.

தவிசாளரை உரையாற்ற விடாது செயற்பட்ட தேசிய மக்கள் சக்தி உறுப்பினரை ஒருமாத காலத்திற்கு சபையில் இருந்து வெளியேற்ற வேண்டிவரும் என தவிசாளர் எச்சரித்த நிலையில் சபையில் சற்ற அமைதி ஏற்பட்டது. இதில் சபை உறுப்பினர்களின் விவாதத்திற்கு அனுமதிக்கப்பட்டது. விவாதத்தில் தேசிய மக்கள் சக்தியைத் தவிர பிரசன்னமாகியிருந்த தமிழ்க் கட்சிகளின் உறுப்பினர்கள் கண்டனத் தீர்மானத்திற்கு முழு ஆதரவைத் தெரிவித்தனர்.


இந் நிலையில், சபையில் தேசிய மக்கள் சக்தியின் ஒன்பது உறுப்பினர்களில் தலைமை தாங்கும் உறுப்பினர் இத் தீர்மானத்திற்கு எதிராகவும் ஏனைய எட்டு உறுப்பினர்களும் நடுநிலை வகித்தனர். தேசிய மக்கள் சக்தியைத் தவிர தமிழ்க் கட்சிகள் அனைத்தினதும் ஆதரவுடன் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

# அவலத்தை அனுபவத்தவர்கள் அவலத்தின் வலி உணர்ந்து இலங்கை மக்களுக்கு அனுப்பிவைத்த நிவாரணப் பொருட்கள்!



டித்வா புயல் காலத்தில் இலங்கையில் ஏற்பட்ட வெள்ளத்தால் பாதிக்கப்பட்டவர்களுக்கு, தமிழ்நாட்டில் உள்ள மறுவாழ்வு முகாம்களில் வசிக்கும் ஈழ அகதிகள் இரண்டு கொள்கலன் நிவாரணப் பொருள்களையும், நிதி உதவியையும் வழங்கியுள்ளனர்.

இலங்கை மக்களுடன் தங்களின் வலுவான ஒற்றுமையை வெளிப்படுத்தும் விதமாக, தமிழ்நாட்டில் உள்ள மறுவாழ்வு முகாம்களில் வாழும் இலங்கையர்கள், டித்வா புயலைத் தொடர்ந்து ஏற்பட்ட வெள்ளம் மற்றும் நிலச்சரிவுகளால் பாதிக்கப்பட்ட சமூகங்களுக்கு, இரண்டு கொள்கலன்களில் அத்தியாவசிய நிவாரணப் பொருள்களையும், கணிசமான நிதி உதவியையும் நன்கொடையாக வழங்கியுள்ளனர்.



**To: All well-wishers and members of the Sri Lankan community.**

**Sourcing materials and funds for rescue and rehabilitation operations in Sri Lanka following catastrophic floods and landslides**

In the aftermath of the devastating impact of the *Ditwah Cyclone* on Sri Lanka, the country is experiencing widespread calamities, including severe flooding and catastrophic landslides. These events have displaced thousands of individuals and caused extensive damage to lives, infrastructure, and livelihoods.

In this urgent context, the Government of Sri Lanka appeals to the Sri Lankan community and all well-wishers for financial contributions to support ongoing rescue, relief, and rehabilitation efforts.

Donations may be made to the following bank account:

Name of the Account : Sri Lanka Deputy High Commission
Name of the Bank : Bank of Ceylon
Branch : Chennai
Account No : 7580004693
Swift Code : BCEYIN5M

A formal acknowledgement of each financial contribution will be issued by the Deputy High Commission of Sri Lanka, Chennai.

In addition to monetary assistance, donations of the following essential rescue materials will be greatly appreciated;

| No. | Item | Quantity |
|---|---|---|
| 1. | Mega Phone | 250 |
| 2. | Rescue Rope | 100 |
| 3. | Re Chargeable Torch | 750 |
| 4. | Rescue Tube | 350 |
| 5. | Search Light | 585 |
| 6. | Safety Helmet | 750 |
| 7. | Helmet with lamp | 625 |
| 8. | Head mount torch | 1,250 |
| 9. | Spine Board | 125 |
| 10. | Submersible Water Pump | 750 |
| 11. | Mobile Water Pump | 50 |
| 12. | Boat with Engine capacity exceeding 40HP | 50 |
| 13. | Chain Saw | 207 |
| 14. | Flash Light | 405 |
| 15. | Generators | 250 |
| 16. | Harness | 65 |
| 17. | Life Jackets | 1,435 |
| 18. | Gum Boot | 7,500 |
| 19. | Mobile Toilets | 500 |

இந்த நிவாரண உதவிகள், மீள்குடியேற்றப்பட்ட இலங்கை சமூகத்தின் பிரதிநிதிகளால் சென்னையில் உள்ள இலங்கை துணைத் தூதரகத்தில் முறையாகக் கையளிக்கப்பட்டது.

இந்த நிவாரண பொருள்கள் யாவும் சம்பந்தப்பட்ட திணைக்கள அதிகாரிகள் மூலம் பாதிக்கப்பட்ட பகுதிகளுக்கு விநியோகிக்கப்பட உள்ளன.

ஒவ்வொன்றும் 20 அடி கொள் அளவுடைய நிவாரணப் பொருள் உதவிகளுக்கு மேலதிகமாக, மறுவாழ்வு முகாம்களில் வசிக்கும் இலங்கையர்கள் தாங்களாக முன்வந்து, ஒருங்கிணைந்த முயற்சிகள் வாயினால் சேகரிக்கப்பட்ட 12 லட்சத்து 33 ஆயிரத்து 604 ரூபா இந்திய நாணய நிதிப் பங்களிப்பையும் வழங்கியுள்ளனர். இது இலங்கை நாயணத்தில் சுமார் 40 லட்சம் ரூபாவாகும்

நிவாரண பொருள்கள் கையளிக்கப்பட்டபோது, துணைத் தூதரகத்தில் பெருமளவிலான இலங்கை சமூகப் பிரதிநிதிகள் உடனிருந்தனர்.

இந்தச் சந்தர்ப்பத்தில், தங்களின் நிவாரண உதவிகளை இலங்கைக்கு ஒருங்கிணைத்து அனுப்புவதற்கு எடுத்த முயற்சிகளுக்காக துணைத் தூதரகத்திற்கு தங்கள் நெஞ்சார்ந்த நன்றியைத் தெரிவித்தனர்.

இந்தக் கடினமான காலகட்டத்தில் வெள்ளச் சூழ்நிலையைச் சமாளிக்கவும் பாதிக்கப்பட்ட மக்களுக்கு ஆதரவளிக்கவும் இலங்கை அரசாங்கம் எடுத்துள்ள உடனடி நடவடிக்கைகளுக்கு அவர்கள் தங்கள் பாராட்டுகளைத் தெரிவித்தனர்.

இந்த உதவிகள், பாதிக்கப்பட்ட சமூகங்களுக்கு முறையாகவும் வெளிப்படைத் தன்மையுடனும் சென்றடையும் என்பதில் இலங்கை அரசாங்கத்தின் மீது தங்களுக்கு நம்பிக்கை இருப்பதாகவும் பிரதிநிதிகள் மேலும் தெரிவித்தனர்.

தமிழ்நாடு முழுவதும் உள்ள 106 மறுவாழ்வு முகாம்களில் சுமார் 60 ஆயிரம் இலங்கையர்கள் வசிக்கின்றனர்.

மேலும் 40 ஆயிரம் மீள்குடியேற்றப்பட்ட இலங்கையர்கள் முகாம்களுக்கு வெளியே காவல்துறையில் பதிவு செய்துகொண்டு வாழ்கின்றனர்.

இடம் பெயர்வதால் ஏற்படும் சவால்கள் இருந்தபோதிலும், இந்தச் சமூகங்கள் இலங்கையில் பேரழிவால் பாதிக்கப்பட்டவர்களுக்காக கூட்டாக நிவாரண உதவிகளைத் திரட்டிய செயலானது, அனைவரின் மனதினை நெகிழச் செய்துள்ள.

# யாழ்ப்பாணத்தில் மீள் குடியேற்றம், காணி விடுவிப்பு குறித்து அரசாங்க அதிபருடன் இராணுவத் தரப்பு கலந்துரையாடல்!



யாழ்ப்பாண மாவட்டத்தின் பாதுகாப்பு படைகளின் கட்டளைத் தளபதியாக 27.01.2026 அன்று புதிதாக பொறுப்பேற்ற மேஜர் ஜெனரல் K.P.T. டி சில்வா, யாழ்ப்பாண மாவட்ட அரசாங்க அதிபர் திரு. மருதலிங்கம் பிரதீபனை 3ம் திகதி அன்றையதினம் செவ்வாய்க்கிழமை (03.02.2026) காலை 09.00 மணிக்கு மரியாதை நிமித்தம் அரசாங்க அதிபர் அலுவலகத்தில் சந்தித்து கலந்துரையாடினார்.

இக் கலந்துரையாடலில் யாழ்ப்பாண மாவட்டத்தின் மீள்குடியேற்றம், காணி விடுவிப்பு மற்றும் டித்வா அனர்த்தத்தின் பாதிப்புக்கள் தொடர்பாகவும் அரசாங்க அதிபருடன் விரிவாக கலந்துரையாடினார்.

இக் கலந்துரையாடலில் பலாலி பாதுகாப்பு படைகளின் தலைமைப்பீடத்தினைச் சேர்ந்த அதிகாரிகளான மேஜர் ஜெனரல் ராசிக் மற்றும் கேணல் நிஷங்க ஆகியோரும் பங்குபற்றினார்கள்.

மேலும், அரசாங்க அதிபருடனான சந்திப்பில் மேலதிக அரசாங்க அதிபர் திரு. கே. சிவகரன், மேலதிக அரசாங்க அதிபர் (காணி) திரு. பா. ஜெயகரன், பிரதம கணக்காளர் திரு. எஸ். கிருபாகரன், திட்டமிடல் பணிப்பாளர் திரு. இ. சுரேந்திரநாதன் மற்றும் உதவி மாவட்டச் செயலாளர் செல்வி உ.தர்சினி ஆகியோரும் உடனிருந்தார்கள்.



# தையல் கலையில் 15 நிமிடங்களில் உலக சாதனை படைத்த யாழ்ப்பாண மண்ணின் இளம் பெண் ஜெயந்தன் மேரி சுலக்சனா!

15 நிமிடங்களில் திறமைகளை வெளிக்காட்டிய இலங்கையை சேர்ந்த மகளிருக்குத் திறமைகளுக்கான விருது வழங்கும் நிகழ்வு கடந்த 1ம் திகதி ஞாயிற்றுக்கிழமை (01.02.2026) கொழும்பில் சிறப்பாக இடம்பெற்றது.

இதன்போது, யாழ்ப்பாணம் - வடமராட்சி கிழக்கு, கட்டைக்காடு, முள்ளியானைச் சேர்ந்த இளம் பெண்ணான ஜெயந்தன் மேரி சுலக்சனா என்பவர் வழங்கப்பட்ட சிறப்பு தையல் வேலைப்பாடு ஒன்றைப் பதினைந்து நிமிடங்களுக்குள் வெற்றிகரமாகச் செய்து முடித்து உலக சாதனை படைத்ததுடன், உலக சாதனைப் புத்தகத்தில் தனது பெயரையும் பதிவு செய்துள்ளார்.

அவருக்குப் பாராட்டுக்களும், வாழ்த்துக்களும் குவிந்து வருகின்றன.

# யாழ்ப்பாண பல்கலைக்கழக மாணவர்களின் எண்ணிக்கையில் இனப்பரம்பல் பற்றிய அதிர்ச்சியூட்டும் தரவுகள்

## சுய இனவழிப்பு செய்கின்றதா எமது ஈழ தமிழ் இனம்?



ஈழத்தில் குறிப்பாக யாழ்ப்பாணத்தைச் சேர்ந்தவர்கள், அல்லது வடக்கிலிருந்து உலகம் முழுவதும் பரவி வாழும் அனைவரும் முக்கியத்துவம் கொடுத்து கவனிக்க வேண்டிய விடயத்தினை நாம் இக்கட்டுரையில் ஆராய போகின்றோம்.

யாழ்ப்பாண பல்கலைக்கழகம் என்பது தமிழரின் கல்வி அடையாளமாகவும், கலாச்சார அடையாளமாகவும், இன அடையாளமாகவும் சிறந்து விளங்குகிறது. ஆரம்ப காலத்திலிருந்து இன்றுவரை யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தில் கல்வி கற்று வெளியேறியவர்களுக்கு சமூகத்தில் ஒரு நல்ல பெயர் இருந்து வருகிறது என்பது அனைவருக்கும் தெரிந்த உண்மை.

இந்நிலையில், யாழ்ப்பாண பல்கலைக்கழகம் வெளியிட்டுள்ள “பொன் விழா மலர் 2024” என்ற அறிக்கையூடாக தற்போது பேராசிரியர்கள், கல்வி சமூகம் சார்ந்தவர்கள் மற்றும் துறை சார்ந்த நிபுணர்கள் மத்தியில் விவாதத்திற்கு உட்படுத்தப்பட்டு வருகிறது. அந்த மலரில் இடம்பெற்றுள்ள புள்ளிவிபரங்கள் மற்றும் மாணவர் ஆய்வறிக்கைகளின் அடிப்படையில் இந்த விடயம் பேசப்படுகிறது.

இந்த பதிவு இனவாதப் பதிவு அல்ல. பல்கலைக்கழகத்தில் கல்வி கற்ற காலத்திலேயே உணரப்பட்ட சில உண்மைகளை அடிப்படையாகக் கொண்டும், பொன்விழா மலரினை அடிப்பட்.'.பையாகக் கொண்டும் சிந்தனை மற்றும் புத்திவாத நோக்கில் இந்த விடயம் ஆராயப்படுகிறது. இனத்தின் மீது பற்று கொண்டவர்கள், இனப்பரம்பல் மீது கவனம் செலுத்துவோர், தமிழ் மீது பற்று கொண்டவர்கள் அனைவரும் இந்த விடயத்தை கவனமாக பார்க்க வேண்டிய அவசியம் உள்ளது.

2023-2024 கல்வியாண்டுக்கான விஞ்ஞான பீட (Science Faculty) மாணவர் புள்ளிவிபரங்கள் பொன் விழா மலர் 2024-ல் வெளியிடப்பட்ட தகவல்களின் படி, விஞ்ஞான பீடத்தில் கல்வி கற்கும் மாணவர்களின் இனப்பரம்பல் பின்வருமாறு குறிப்பிடப்பட்டுள்ளது:

- முஸ்லிம்கள் - 11%
- தமிழர்கள் - 34%
- சிங்களவர்கள் - 55%

இங்கு குறிப்பிடப்படும் விஞ்ஞான பீடம் (Science Faculty) என்பது இயற்பியல் (Physics), வேதியியல் (Chemistry), தாவர அறிவியல் (Botany), மிருக அறிவியல் (Zoology), மீன் வள அறிவியல் (Fisheries), கணினி அறிவியல் (Computer Science), கணிதம் மற்றும் புள்ளிவிவரம் (Mathematics and Statistics) உள்ளிட்ட அனைத்து விஞ்ஞான கற்கைகளையும் உள்ளடக்கிய விஞ்ஞான பீடம் (Science Faculty) ஆகும். பொதுவான விஞ்ஞானப் பட்டம் - Bachelor of Science (General), முதன்மைப் படுத்தப்பட்ட விஞ்ஞானப் பட்டம் - Bachelor of Science (Honours), பயன்பாட்டு விஞ்ஞானப் பட்டம் - Bachelor of Science (Applied Science), கணினி அறிவியல் பட்டம் - Bachelor of Science in Computer Science ஆகிய பட்டங்களை வழங்கும் பிரதான பீடமாக இது செயல்படுகிறது.

உள்நாட்டு போர் காலங்களில், பல வெளிமாவட்ட மாணவர்கள் யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தில் கல்வி கற்க வர முடியாத சூழ்நிலை நிலவியது. குறிப்பாக முஸ்லிம்ம மாணவர்கள், சிங்கள மாணவர்கள் வர முடியாத நிலைக்கில் இருந்தனர். அக்காலத்தில் யாழ்ப்பாணம், கிளிநொச்சி. வவுனியா போன்ற பகுதிகளைச் சேர்ந்தவர்கள் குறிப்பாக யாழ்ப்பாண சமூகத்துக்குள் இருந்தவர்களே அதிகமாக கல்வி கற்றனர். ஆனால் தற்போதைய நிலைமை ஒரு பெரிய மாற்றத்தை காட்டுகிறது.

இந்த மாற்றம் இயல்பானதா அல்லது திட்டமிட்ட செயற்பாடுகளின் விளைவா? என்ற கேள்வி தற்போது எழுந்துள்ளது. இதனை “நாங்களே எங்களுக்கு வைத்த சொந்த சூனியம்” என சிலர் வர்ணிக்கின்றனர். இந்த ஆய்வில் தற்போது விஞ்ஞான பீடம் மட்டுமே எடுத்துக்கொள்ளப்பட்டுள்ளது.

இதனைத் தொடர்ந்து கலைப்பீடம், மருத்துவ பீடம், விவசாய பீடம் உள்ளிட்ட பிற பீடங்களையும் தனித்தனியாக ஆய்வுக்கு உட்படுத்த வேண்டும்.

யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தின் விஞ்ஞான பீடத்தில் 2023-2024 கல்வியாண்டுக்கான புள்ளிவிவரங்களை ஆய்வு செய்தபோது, சிங்கள மாணவர்கள் 55 வீதமாக, அதாவது 50 வீதத்தைத் தாண்டி இருப்பதாகக் காணப்படுகிறது. இந்த தகவல் இனவாதக் கருத்தாக அல்ல் சிந்தனைவாதம் மற்றும் புத்திவாத அடிப்படையிலான விவாதத்திற்காக முன்வைக்கப்படுகிறது. தொடர்ந்து இந்த பதிவை கவனமாகப் பார்க்க வேண்டிய அவசியம் உள்ளது.

மாகாண அடிப்படையிலான மாணவர் வருகை (Provoncial-wise Student Population):

- வடமாகாணம் (முல்லைத்தீவு, கிளிநொச்சி, வவுனியா, மன்னார், யாழ்ப்பாணம்) - 26%
- கிழக்கு மாகாணம் - 8%
- வடமேற்கு மாகாணம் - 15%
- வடமத்திய மாகாணம் - 14%
- ஊவா மாகாணம் - 9%
- சப்ரகமுவா மாகாணம் - 6%
- மேற்கு மாகாணம் - 7%
- மத்திய மாகாணம் - 14%
- தென் மாகாணம் - 1%

(தென் மாகாணத்தில் பல பல்கலைக்கழகங்கள் உள்ளதால் அங்குள்ள மாணவர்கள் அப்பகுதியில் கல்வி கற்கின்றனர்.) ஆக 1மூ என்றவாறு தற்போது காணப்படுகிறது.

விஞ்ஞான பீடத்தில் சிங்கள மாணவர்கள் 55 வீதமாக உள்ளனர். ஆகவே, இந்த மாணவர்களே எதிர்காலத்தில் இளநிலை (Junior President) அதன் பின்னர் பல்கலைக்கழக தலைவர் (University President) போன்ற பொறுப்புகளுக்கு வரக்கூடிய சூழ்நிலை உள்ளது. இதனை அடிப்படையாகக் கொண்டு, “இது அரச இயந்திரத்தின் பிழையா?, “அரசு திட்டமிட்டு மாணவர்களை இங்கே அனுப்புகிறதா?” போன்ற வாதங்கள் முன்வைக்கப்படுகின்றன. ஆனால் அந்த வகையான சிந்தனை இனவாதச் சிந்தனைக்குள் செல்வதாகவும் கருதப்பட்டுவிடும். ஆகவே இந்த விடயத்தை தெளிவாகவும் ஆழமாகவும் புரிந்துகொள்ள வேண்டிய தேவை உள்ளது.

கல்வி குறித்த சமூக மனநிலை பற்றியும் இங்கு கேள்விகள் எழுப்பப்படுகின்றன. “படித்தால் வைத்தியர் ஆகவேண்டும், பொறியாளர் ஆக வேண்டும்” என்ற எண்ணம் தான் யாழ்பாண மையவாத மக்களிடம் ஆண்று தொட்ட்டு இன்றுவரை அதாவது 1978ஆம் ஆண்டில் A/L எடுத்தவர்களிடமும் இருந்தது; அதன்பின்னர் புலமைப் பரீட்சை (Scholarship) தேர்வுகளை கடந்தவர்களிடமும் அதே சிந்தனையே தொடர்ந்தது. ஆனால் 2025ஆம் ஆண்டில் உலகம் இணைய யுகத்தைத் தாண்டி, Artificial Intelligence (AI) யுகத்துக்குள் சென்றுவிட்ட நிலையில், இன்னும் அதே வரையறுக்கப்பட்ட குறுக்கிப்போபன எகல்லைக்குள் இருந்தே வடமாகண தமிழ் மாணவர்கள் கல்வியைப் பார்க்கிறார்கள். என்ற விமர்சனம் முன்வைக்கப்படுகிறது.

இன்றைய உலகில் எண்ணற்ற துறைகள், பதவிகள் மற்றும் வாய்ப்புகள் இருக்கும்போது, “நான் வைத்தியர் ஆவேன்“, “நான் பொறியாளர் ஆவேன்“ என்பதே தொடர்ந்தும் முதன்மை கனவாகக் கூறப்படுவது ஒரு சமூகப் இன்றைய பல் வேறு துறைகள் மிகுந்த உலகில் குறைபாடான ஒன்றாக பார்க்கப்படுகிறது. பொறியியல் என்றாலே ஒரே பாதை என்ற புரிதல் இன்னும் நிலவி வருகிறது.

இது யாரையும் நகைச்சுவைக்கு உட்படுத்தும் பதிவு அல்ல. ஆனால் யாழ்ப்பாண சமூகமும், வடக்கு சமூகமும், பெற்றோர்களும் குழந்தைகளை மிக அதிக எதிர்பார்ப்புகளுடன் வளர்த்து, அவர்களை ஒரு குறிப்பிட்ட கனவுக்குள் மட்டும் கட்டுப்படுத்தி விடுகிறார்களா? என்ற கேள்வி இங்கு முன்வைக்கப்படுகிறது. அந்தக் குழந்தைகள் “ஏதோ பிரபஞ்சத்தை ஆளப் போகிறோம்“ என்ற அளவுக்கு அழுத்தத்துடன் வளர்க்கப்படுகிறார்களா? என்பதும் சிந்திக்க வேண்டியதாக வைக்கப்படுகிறது.

கல்வி என்பது பிள்ளைகளை “ஏற்றி இறக்கி“ கட்டாயப்படுத்துவதால் உருவாகும் ஒன்று அல்ல் அது மனநிலை, ஆர்வம் மற்றும் விடாமுயற்சியிலிருந்து உருவாகும் ஒன்று என்பதைக் காட்டுவதற்காக தாமஸ் அல்வா எடிசன் தொடர்பான ஒரு எடுத்துக்காட்டு. பள்ளிக்கூட ஆசிரியரினால் எடிசன்8இன் அம்மாவிற்கு எழுதப்பட்ட கடிதத்தில், “உங்கள் மகன் மனவளர்ச்சி குன்றியவராக இருகிறார் போலும் இந்த மாணவனால் (எடிசன்) இப்பள்ளியில் கல்வி கற்க இயலாது“ என குறிப்பிடப்பட்ட கடிதத்தினை தாயார் மறைத்து வைத்து மகனை வீட்டிலேயே வளர்த்து கல்வி கற்பித்ததாகக் கூறப்படுகிறது. எடிசன் எந்தப் பள்ளியிலும், கல்லூரியிலும், பல்கலைக்கழகத்திலும் அல்லது PHD போன்ற பட்டங்களிலும் பயின்றவர் அல்ல. இருந்தபோதும், உலகம் இருளிலிருந்து வெளிச்சத்துக்குள் வர காரணமான மின்குமிழ் கண்டுபிடிப்பை அவர் உருவாக்கினார்.

அவர் நூற்றுக்கணக்கான உலோகங்களைப் பரிசோதித்து, தோல்வியடைந்தாலும் முயற்சியை கைவிடவில்லை. ஒவ்வொரு தோல்வியையும் கற்றலாக எடுத்துக் கொண்டு தொடர்ந்து ஆய்வில் ஈடுபட்டார். அந்த முயற்சியின் இறுதியில் மின்குமிழ் வெற்றிகரமாக ஒளிர்ந்தது. இதன் மூலம் சொல்லப்படுவது, தோல்வி என்பது முடிவு அல்ல் முயற்சியின் ஒரு கட்டமே. “நான் நூறு முறை தோல்வியடைந்தேன் என்பதற்காக அல்ல, நூறு வழிகள் வேலை செய்யாது என்பதைக் கண்டறிந்ததால்தான் வெற்றி கிடைத்தது“ என்ற எடிசனின் கருத்தும் இங்கு நினைவூட்டப்படுகிறது.

இந்த எடுத்துக்காட்டின் மூலம், இன்றைய சமூகத்தில் “வைத்தியர் ஆக வேண்டும், பொறியாளர் ஆக வேண்டும்“ என்ற ஒரே பாதையில் குழந்தைகளை கட்டாயப்படுத்தும் மனநிலையை மீள சிந்திக்க வேண்டிய அவசியம் வலியுறுத்தப்படுகிறது. உலகம் இணைய யுகத்தையும் AI யுகத்தையும் எட்டியுள்ள நிலையில், கல்வி மற்றும் திறமை குறித்து விரிவான பார்வை தேவை என்பதே இந்த எடுத்துக்காட்டின் மைய கருத்தாகும்.

இன்றைய சமூகத்தில் “படித்தால் மருத்துவம் (Medicine), பொறியியல் (Engineering), நிர்வாகம் மற்றும் வணிகம் (Management Studies Commerce) ஆகிய துறைகளில் மட்டுமே“ என்ற குறுகிய கல்வி மனநிலையின் விளைவுகள் யாழ் மாவட்டத்திலும், யாழ்ப்பாண பல்கலைக்கழகத்திலும், வடமாகாணத்தின் இனப்பரம்பல் மாற்றத்திலும் பிரதிபலிப்பதாக சுட்டிக்காட்டப்படுகிறது. இதனை திட்டமிட்ட இன அழிப்பாக புரிந்து கொள்ள வேண்டாம். முன்னர் இருந்த கல்விக் கொள்கைகள், கோட்டா முறைகள் மூலம் நடந்த இன பரம்பல் மாற்றங்கள் வேறு விடயம் தற்போதைய நிலைமை அதிலிருந்து வேறுபட்டதாகக் காணப்படுகிறது.

மருத்துவம் (Medicine) அல்லது பொறியியல் (Engineering) கிடைக்காவிட்டால் வேறு துறைகளில் படிக்க மாட்டோம் என்ற மனநிலை ஒரு சில வட பகுதியிலுள்ள மாணவர்கள் மத்தியில் உருவாகியுள்ளது. அதை விட விஞ்ஞான பீடம் கிடைதால் கூட செல்லாமல் குடும்ப ஆதரவுடன், புலம்பெயர் சொந்தங்களின் நிதி ஆதரவுடன் தனியார் கல்லூரிகளில் படிப்பது, கொழும்பு போன்ற நகரங்களுக்கு சென்று அதிக செலவில் கல்வி கற்பது, அல்லது வெளிநாடுகளுக்குச் செல்வது போன்ற தேர்வுகள் மேற்கொள்ளப்படுகின்றன. இதனால் உள்ளூர் பல்கலைக்கழகங்களில், குறிப்பாக விஞ்ஞான பீடங்களில் விண்ணப்பிக்கும் மாணவர்கள் குறைந்துள்ளதாக காணப்படுகிறது.

இதன் காரணமாக, யாழ்ப்பாண மானவ சமூகத்தில் (எல்லோருமல்ல) விஞ்ஞான பீடம் ஒரு “தொடக் கூடாத“ துறையாக பார்க்கப்படும் மனநிலை உருவாகியுள்ளது. சித்த மருத்துவம் அல்லது விஞ்ஞான பீடம் கிடைத்தால் செல்ல மாட்டோம் ஆனால் வேறு நகரங்களில் அல்லது வெளிநாடுகளில் வேறு பாடநெறிகள் படிப்போம் என்ற அணுகுமுறையே மேலோங்கி வருகிறது.

(தொடர்ச்சி 15 பக்கம்)

# கிவுல் ஓயாவின் நீர்வளத்தை பயன்படுத்தி வவுனியா, முல்லைத்தீவு மாவட்டங்களின் நீர்ப் பற்றாக்குறை, வறுமை போன்ற பிரச்சினைகளுக்குத் தீர்வு எனக் கூறும் அரசாங்கம்!

## வன்னியின் இனப்பரம்பலை மாற்ற முயலும் “கிவுல் ஓயா திட்டம்” என தமிழ்க் கட்சிகள் கடும் எதிர்ப்பு

**கிவுல் ஓயா அபிவிருத்தித்திட்டத்தை மீண்டும் ஆரம்பிப்பதற்கு 2026 ஜனவரி 19 ஆம் திகதி நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் அங்கீகாரம் வழங்கப்பட்டிருந்தது. தமிழ் தேசிய மக்கள் முன்னணி மற்றும் இலங்கைத் தமிழரசுக் கட்சி ஆகிய இரு கட்சிகளும் அத்திட்டத்துக்கு கடும் எதிர்ப்பைத் தெரிவித்துள்ளன. இத்திட்டம் அப்பகுதியின் இனப்பரம்பலை மாற்றியமைக்கும் நோக்கில் திட்டமிடப்பட்ட ஒன்று என அவை குற்றம் சுமத்தியுள்ளன.**

யுத்தத்தால் பாதிப்புக்குள்ளான வன்னிப்பகுதியில் இரு மாவட்டங்களின் குடிநீர் மற்றும் ஏனைய தேவைகளுக்கான நீர் பற்றாக்குறைக்குத் தீர்வு காண்பதற்கான திட்டம் எனக்கூறி அரசாங்கத்தினால் முன்னெடுக்கப்படவுள்ள நீர்ப்பாசன அபிவிருத்தித் திட்டத்துக்கு வடக்கின் இரு பிரதான தமிழ் அரசியல் சக்திகள் கடும் எதிர்ப்பை தெரிவித்துள்ளன.

கிவுல் ஓயா அபிவிருத்தித்திட்டத்தை மீண்டும் ஆரம்பிப்பதற்கு 2026 ஜனவரி 19 ஆம் திகதி நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் அங்கீகாரம் வழங்கப்பட்டிருந்தது. தமிழ் தேசிய மக்கள் முன்னணி மற்றும் இலங்கைத் தமிழரசுக் கட்சி ஆகிய இரு கட்சிகளும் அத்திட்டத்துக்கு கடும் எதிர்ப்பைத் தெரிவித்துள்ளன. இத்திட்டம் அப்பகுதியின் இனப்பரம்பலை மாற்றியமைக்கும் நோக்கில் திட்டமிடப்பட்ட ஒன்று என அவை குற்றம் சுமத்தியுள்ளன.

கிவுல் ஓயாவின் நீர்வளத்தை வினைத்திறனாகவும் விளைதிறனாகவும் பயன்படுத்தி வவுனியா மற்றும் முல்லைத்தீவு மாவட்டங்களின் நீர்ப் பற்றாக்குறை, வறுமை மற்றும் குறைந்த விவசாய உற்பத்தித்திறன் போன்ற பிரதான பிரச்சினைகளுக்குத் தீர்வு காணவும், பிராந்திய பொருளாதாரத்தை அபிவிருத்தி செய்யவும் கிவுல் ஓயா நீர்த்தேக்க அபிவிருத்தித்திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்கு 2011-09-28ஆம் திகதி நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் அனுமதி வழங்கப்பட்டதாக அரசாங்கம் கூறுகிறது.

“அக்காலத்தில் மதிப்பிடப்பட்ட செலவு 4,170 மில்லியன் ரூபாவாக காணப்பட்ட அத்திட்டம் மகாவலி நீர்த்தேக்க அபிவிருத்தி கட்டமைப்பின் ‘L’ வலயத்தில் நான்காண்டு காலப்பகுதிக்குள் நடைமுறைப்படுத்தத் திட்டமிடப்பட்டிருந்தது. எனினும், 2022 ஆம் ஆண்டு நாட்டில் ஏற்பட்ட பொருளாதார வீழ்ச்சி காரணமாக அத்திட்டத்தை 2023-12-31 முதல் தற்காலிகமாக நிறுத்துவதற்கு பின்னர் தீர்மானிக்கப்பட்டது.”


திட்டம் நடைமுறைப்படுத்தப்படும் பகுதிகளில் நிலவும் குடிநீர் மற்றும் ஏனைய தேவைகளுக்கான நீர்ப்பற்றாக்குறைக்குத் தீர்வாக முன்மொழியப்பட்ட திட்டத்தை விரைவாக முன்னெடுப்பதன் அவசியத்தைக் கருத்திற்கொண்டு, தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டுள்ள கிவுல் ஓயா அபிவிருத்தித் திட்டத்தை மீண்டும் ஆரம்பிப்பதற்கும், உள்நாட்டு நிதியைப் பயன்படுத்தி 2031 ஆம் ஆண்டு இறுதிக்குள் திட்டத்தை நிறைவு செய்வதற்கும், திட்டத்தின் மொத்த மதிப்பீட்டுச் செலவை ரூ. 23,456 மில்லியனாக உயர்த்துவதற்கும் விவசாயம், கால்நடை, காணி மற்றும் நீர்ப்பாசன அமைச்சரினால் முன்வைக்கப்பட்ட முன்மொழிவுக்கு அமைச்சரவை அண்மையில் அங்கீகாரம் வழங்கியிருந்தது.

கிவுல் ஓயா திட்டத்தினூடாக தற்போது உள்ள 700 ஹெக்டேயர் காணிகளுக்கு இரு போகங்களுக்கும் நீர் வழங்கப்படுவதுடன், புதிதாக 1,700 ஹெக்டேயர் காணிகளைப் பெற்று அவற்றை வயல் நிலங்களாக மாற்றி, மீண்டும் புதிய குடியேற்றங்களை மேற்கொள்வது குறித்து இத்திட்ட முன்மொழிவில் குறிப்பிடப்பட்டுள்ளதாக இலங்கைத் தமிழரசுக் கட்சியின் தேசியப் பட்டியல் நாடாளுமன்ற உறுப்பினர் வைத்தியர் பத்மநாதன் சத்தியலிங்கம் அண்மையில் நாடாளுமன்றத்தில் தெரிவித்தார்.

முன்மொழியப்பட்ட இத்திட்டம் நடைமுறைப் படுத்தப்பட்டால் வன்னி மாவட்டத்தில் பாரிய சிக்கல்கள் ஏற்படும் எனக் குறிப்பிட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சத்தியலிங்கம் கிவுல் ஓயா திட்டத்தின் நீரேந்து பகுதி வவுனியா வடக்கு பிரதேச செயலகப் பிரிவிற்கு உட்பட்டது எனவும், அதற்காக 2021 ஆம் ஆண்டில் மகாவலி ‘L’ வலயத்திற்கு ஏற்கனவே ஒதுக்கப்பட்ட காணிகளுக்கு மேலதிகமாக, 6,000 ஹெக்டேயர் வனப்பகுதிக் காணிகள் வனப்பாதுகாப்புத் திணைக்களத்தினால் மகாவலி அதிகார சபைக்கு விடுவிக்கப்பட்டுள்ளதாகவும் சுட்டிக்காட்டினார்.

இத்திட்டத்தை நடைமுறைப்படுத்துவதன் மூலம் அப்பகுதியின் பாரம்பரிய தமிழ் மக்களுக்கு எதிராகப் பாரபட்சம் காட்டப்படுவதால் பாரிய அளவில் இழப்புகள் ஏற்படும் என்பதையும் அவர் மேலும் சுட்டிக்காட்டினார்.

“அப்பகுதிகளில் பாரம்பரியமாக வாழும் மக்கள் தமது காணிகளுக்குச் செல்வதற்குத்



தடையாக இருக்கும் மகாவலி அதிகார சபையும், வனப் பாதுகாப்புத் திணைக்களமும் - அதாவது 2014ஆம் ஆண்டு கூகள் வரைபடத்தின் ஊடாக வனப்பிரதேசமாக ஒதுக்கப்பட்ட காணிகள் எனப் பெயரிடப்பட்ட மக்களின் பாரம்பரியக் காணிகளில் ஒரு ஏக்கரைக்கூட துப்புரவு செய்ய அனுமதிக்காத இத்திணைக்களம், எவருமே கைவைக்காத 13,000 ஏக்கர் வனப்பகுதியை இந்த கிவுல் ஓயா திட்டத்துக்காக வழங்கியுள்ளது. எனவே இங்கு பாரிய பாரபட்சம் காட்டப்படுகிறது. இந்த கிவுல் ஓயா திட்டத்தின் நீரேந்துப்பகுதி காரணமாக வவுனியா வடக்கிலுள்ள பாரம்பரிய காணிகள், குளங்கள் மற்றும் வயல்கள் பலவற்றை இழக்க வேண்டியேற்படும். ஆனால் இதன் நன்மைகளை புதிதாக குடியேற்றப்படும் குடியேற்றவாசிகள் மட்டுமே பெற்றுக்கொள்வர். அதேபோல் வவுனியா மற்றும் முல்லைத்தீவு மாவட்டங்களில் இந்த மகாவலி ‘L’ வலயத்துக்கு மட்டுமே நீர்ப் பிரச்சினையும் மேலதிக நீருக்கான தேவையும் இருப்பதாக அவர்கள் கூறுகிறார்கள். ஆனால் பாரம்பரியமாக வாழும் மக்களுக்குத் தண்ணீர் இல்லை. அது குறித்து ஆராய்வதற்கு யாருக்குமே ஆர்வமில்லை.”

தேர்தல் காலத்தில் வழங்கப்பட்ட வாக்குறுதிகளைத் தூக்கியெறிந்துவிட்டு, சிறுபான்மை மக்களைப் புறக்கணித்து, சிங்கள மக்களைக் குடியேற்றும் நோக்கில் இத்திட்டம் முன்னெடுக்கப்படுகிறதா எனவும் சத்தியலிங்கம் ஜனாதிபதியிடம் கேள்வி எழுப்பினார்.

“ஆகவேதான் நான் இந்த அரசாங்கத்திடம் சில கேள்விகளைக் கேட்க விரும்புகிறேன். ஜனாதிபதித் தேர்தலின் போது நீங்கள் முன்வைத்த அறிக்கையில் இனப்பரம்பலை மாற்றும் நடவடிக்கைகளை நிறுத்துவதாக வழங்கிய வாக்குறுதியை தற்போது மீறுகிறீர்களா? முந்தைய அரசாங்கங்கள் சிறுபான்மை மக்களின் வாழ்வுரிமையைப் பறிப்பதற்காகச் செய்த அதே காரியங்களை நீங்களும் தொடரப் போகிறீர்களா? நாட்டின் உற்பத்திப் பொருளாதாரத்துக்கு சிறுபான்மை மக்களின் பங்களிப்பு தேவையில்லை என நினைக்கிறீர்களா? பாரிய நீர்ப்பாசனத் திட்டங்களை முன்னெடுக்கும்போது சிறுபான்மை மக்களைப் புறக்கணித்து, சிங்கள மக்களை மாத்திரம் குடியேற்றுவதை நீங்களும் தொடரப் போகிறீர்களா?”

இலங்கைத் தமிழரசுக் கட்சியின் (ITAK) செயலாளர் ஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ. சுமந்திரனும் ஜனவரி 22ஆம் திகதி ஜனாதிபதி அனுர குமார திசாநாயக்கவுக்கு கடிதம் ஒன்றை அனுப்பி கிவுல் ஓயா அபிவிருத்தித் திட்டத்துக்கு தமது கட்சி கடும் எதிர்ப்பைத் தெரிவிப்பதாகவும், இத்திட்டத்தை நடைமுறைப்படுத்துவதைத் தடுப்பதற்காக எதிர்காலத்தில் பாரிய போராட்டங்களை முன்னெடுக்கவுள்ளதாகவும் அறிவித்திருந்தார்.

தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் தலைவர் நாடாளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் பொன்னம்பலமும் அண்மையில் நாடாளுமன்றத்தில் கிவுல் ஓயா திட்டத்துக்கு கடும் எதிர்ப்பை வெளியிட்டதுடன், யுத்தம் முடிவடைந்த கையோடு நடைபெற்றதைப் போல, 2013ஆம் ஆண்டு கிவுல் ஓயா திட்டம் குடியேற்றங்களை உருவாக்கும் வகையில் திட்டமிடப்பட்டதாகச் சுட்டிக்காட்டினார்.

“இதன் கீழ் 6,000 சிங்களக் குடும்பங்களைக் குடியேற்றுவதற்குத் திட்டமிடப்பட்டிருந்தது. அக்காலப்பகுதியிலேயே 3,000 இற்கும் மேற்பட்ட - அண்ணளவாக 4,000 குடும்பங்கள் குடியேற்றப்பட்டிருந்தன.”

திட்டமிட்ட முறையில் முன்னெடுக்கப்பட்ட இராணுவ நடவடிக்கைகளின் மூலம் முல்லைத்தீவு கிழக்கு மற்றும் வவுனியா வடக்குப் பிரதேசங்களில் பல நூற்றாண்டுகளாக வாழ்ந்த தமிழ் மக்கள் திட்டமிட்ட வகையில் துரத்தியடிக்கப் பட்டதாக தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் தலைவர் குற்றஞ்சாட்டினார்.

“1984 ஆம் ஆண்டு திட்டமிட்ட முறையில் முன்னெடுக்கப்பட்ட இராணுவ நடவடிக்கைகளின் ஊடாக முல்லைத்தீவு கிழக்கு மற்றும் வவுனியா வடக்கு பிரதேசங்களின் தமிழ் மக்கள் பல நூற்றாண்டுகளாக வாழ்ந்த பகுதிகளிலிருந்து படிப்படியாக வெளியேற்றப்பட்டனர். அவர்களது வசிப்பிடங்கள் அழிக்கப்பட்டன. அவர்கள் மீண்டும் வருவதற்கு முன்பே சிங்களக் குடியேற்றங்கள் உருவாக்கப்பட்டன. இது நீண்டகாலமாக துன்புறுத்தலாக இருந்து வரக்கூடிய ஒரு விடயமாகும். இது நாம் அவ்வப்போது கேள்வி எழுப்பி வருகின்ற ஒரு பிரச்சினை ஆகும். யுத்தம் காரணமாக மக்கள் இடம்பெயர்ந்தனர். யுத்தம் முடிவடைந்து நாம் மீண்டும் வர முயன்றபோது, முன்னர் வாழ்ந்த இடங்களுக்கு வர வழியில்லாமல் போனது: ஒன்றில் வனப் பாதுகாப்புத் திணைக்களம் அவற்றை அடர்ந்த காடுகளாகப் பிரகடனப் படுத்தியுள்ளது; அன்றேல், யாராவது வந்து குடியேறியுள்ளார்கள். அவர்களோ அந்த மாவட்டத்தைச் சேராதவர்கள்.”

கிவுல் ஓயா அபிவிருத்தித் திட்டம் வட மாகாணத்தில் பிரச்சினைகளை உருவாக்கக் காரணமாக அமையும் எனச் சுட்டிக்காட்டிய தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் தலைவர், அதனூடாக அமைக்கப்படவுள்ள குடியேற்றங்கள் முழுமையாகச் சிங்களக் குடியேற்றங்கள் எனத் திட்டவட்டமாகக் கூறினார்.

“இப்போது இந்தத் திட்டத்தை எடுத்து நோக்கினால் அதுவே இந்தத் திட்டத்தின் உத்தியோகபூர்வக் கொள்கையாகும். இதில் அமைக்கப்படவுள்ள குடியேற்றங்கள் முழுமையாகச் சிங்களக் குடியேற்றங்களாகும். இது சுற்றாடல் திணைக்களத்திலிருந்தும் வந்த ஒரு முறைப்பாடாகும். அவர்கள் முன்வைத்த சாத்தியக்கூறு ஆய்வில் இந்தக் குடியேற்றத் திட்டத்தை நடைமுறைப்படுத்துவது அரசியலமைப்புக்கு முரணானது என வலியுறுத்தியுள்ளனர். இருப்பினும் அதுவே இத்திட்டத்தின் நோக்கமாக உள்ளது.”

ராஜபக்ச ஆட்சிக் காலத்தின் கீழ் இவ்வாறானதொரு திட்டம் ஆரம்பிக்கப்படுவதைப் புரிந்துகொள்ள முடியும். ஆனால் இந்தத் திட்டத்துக்காக மேலதிகமாகப் பணத்தைச் செலவழித்து தற்போதைய அரசாங்கத்தின் கீழ் மீண்டும் ஆரம்பிப்பதன் நோக்கம் என்னவென்று தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் தலைவர் பாராளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் நாடாளுமன்றத்தில் கடுமையாகக் கேள்வி எழுப்பினார்.

“இப்போது இவ்வகையான திட்டம் ராஜபக்சவின் கீழ் நடைமுறைப்படுத்தப் படுவதை எம்மால் புரிந்துகொள்ள முடிகிறது - நாம் அதனை ஏற்றுக் கொள்கிறோம் என்பதல்ல - நாம் அதனை எதிர்த்தோம், ஆனால் அதனைப் புரிந்துகொள்ள முடியும். ஆனால், இது உங்கள் அரசாங்கத்தின் கீழ் நடைபெறுகிறது! நீங்கள் ராஜபக்சவினரை இனவாதிகள் எனக் கூறிவிட்டு அதையே செய்கிறீர்கள். அதுமட்டுமல்ல, ராஜபக்சவினர் இத்திட்டத்தை முன்னெடுக்க ஏழு பில்லியன் ரூபாயை ஒதுக்கினார்கள், நீங்கள் அதனை இன்னும் இரண்டு பில்லியனால் அதிகரித்துள்ளீர்கள். நாம் எவ்வாறு இதற்கு இணங்குவோம் என எதிர்பார்க்கிறீர்கள்? இது அப்பட்டமான இனவாதம் அல்லவா? நீங்கள் எமக்குத் தரும் செய்தி என்ன? நாம் இந்தக் கேள்வியை எழுப்பும்போது எங்களைத் தாக்குகிறார்கள்.”

தற்போதைய அரசாங்கம் கடந்த அரசாங்கத்தைப் போல் இனவாதம் கொண்டதல்ல என்பதைச் செயலில் நிரூபித்துக் காட்டுமாறு கஜேந்திரகுமார் பொன்னம்பலம் பிரதமருக்கு சவால் விடுத்திருந்தார்.

“நான் பிரதமரிடம் கேட்டுக்கொள்கிறேன் - இந்த அரசாங்கம் மற்ற அரசாங்கங்களை விட வேறுபட்டது என்றால் - வடக்கு கிழக்கு மக்களை அரசாங்கம் கையாளும் விதத்தில் ஒரு கட்டமைப்பு ரீதியான மாற்றம் ஏற்பட வேண்டும். முந்தைய அரசாங்கங்கள் ஆண்டுக்கு ஆண்டு செய்த அதே காரியங்களை உங்களால் செய்ய முடியாது. அதே வேலையைச் செய்துவிட்டு, அவர்கள் இனவாதிகள் என்றும் நீங்கள் இனவாதிகள் இல்லை என்றும் சொல்ல முடியாது.”




## Carefirst Family Health Team

**Accepting New Patients**
**புதிய நோயாளர்கள் ஏற்றுக் கொள்ளப்படுகின்றனர்**

- அனுபவமுள்ள தமிழ் பேசும் பெண் குடும்ப மருத்துவர் எங்களது ஸ்கார்பரோ கிளினிக்கில் இணைந்துள்ளார். (Scarborough Clinic)
- உங்களது சுகாதார சேவைகளைப்பூர்த்தி செய்ய கார்த்திருக்கிறார்.
- நீரழிவு இருப்பின் அது சம்பந்தமான கல்வித்திட்டமும் அவரால் ஒழுங்கு செய்து தரப்படும்.
- நாள்பட்ட நோய்க்கான கல்வியும் (chronic disease), மேலாண்மை திட்டங்களும் அவரால் வழங்கப்படும்.



அவர் விபரம்:

டாக்டர் அஞ்சலின் ராஜரத்தினம் (Scarborough Clinic)


டாக்டர். ராஜரத்தினம் அக்கறையும் அர்ப்பணிப்பும் கொண்ட குடும்ப மருத்துவர் ஆவர்.

**உங்கள் குடும்ப மருத்துவத்தேவை, மற்றும் டாக்டர் ராஜரத்தினத்தின் நோயாளியாக பதிவு செய்ய விரும்பினால், கீழே உள்ள QR குறியீட்டை ஸ்கேன் செய்யவும் அல்லது https://forms.office.com/r/upqD0q5TGL க்குச் சென்று படிவத்தை நிரப்பவும் உங்கள் சுயவிவரத்தை உருவாக்க எங்களுக்கு உதவ, உங்கள் விபரங்களை பதிவு செய்யுங்கள்.**

Availability of New Family Doctor at Carefirst Family Health Team - Dr. Rajaratnam

**Clinic Location:**
Carefirst One-Stop Multi-Services Centre
300 Silver Star Blvd., 2/F
Scarborough, ON M1V 0G2
Tel: (416)502-2029
www.carefirstontario.ca

11/24






# MORTGAGE
## FINANCIAL SOLUTIONS

COMMERCIAL RESIDENTIAL VACANT LAND

INDUSTRIAL CONSTRUCTION



## OUR SERVICE



- Purchase
  - Builder Purchase
  - MLS Purchase
  - Private Purchase
- Equity line of Credit
- Refinance
- Renewal

CALL US

# NESAN
## 416-908-5656

Office: 416-660-5656
Fax: 647-351-3099
Toll: 1-844-878-2721

www.nesan.ca

**WE DEAL WITH ALL BANKS**

CityCan Financial Corporation
NESAN SUBRAMANIAM
Mortgage Agent level 1 Licence # M15001465
CityCan Financial Corporation, Brokerage #10332

Scotiabank | TD Canada Trust | NATIONAL BANK | RFA
FIRST NATIONAL FINANCIAL LP | Manulife | Desjardins
MCAP | HOME TRUST | EQUITABLE BANK | radius financial | RMG mortgages

**55 EGLINTON AVE E SUITE 604, TORONTO, ON M4P 1G8**

இலங்கை செய்திகள்
Sri Lanka News

கனகராசா சரவணன்

# காத்தான்குடி யுவதி பாலியல் துஷ்பிரயோகம் சம்பவத்தில் கைது செய்யப்பட்ட சட்டத்தரணிக்கு 17 வரை விளக்கமறியல்!

## வழக்கு விசாரணைகளில் ஒத்துழைக்க மறுத்த பிரதேச செயலாளர் உட்பட இருவரை கைது செய்யுமாறும் நீதிமன்றம் உத்தரவு!

காத்தான்குடி பொலிஸ் பிரிவில் உள்ள பிரதேசம் ஒன்றில் இளம் யுவதி ஒருவரை பாலியல் துஷ்பிரயோகம் செய்து 3 மாத கர்ப்பிணியாக்கிய சம்பவம் தொடர்பாக சந்தேகத்தின் அடிப்படையில் கைது செய்யப்பட்பட்ட சட்டத்தரணியை தொடர்ந்து எதிர்வரும் 17ம் திகதி வரை தொடர்ந்து விளக்கமறியலில் வைக்குமாறு மட்டக்களப்பு நீதவான் நீதிமன்ற நீதவான் 3ம் திகதி அன்று செவ்வாய்க்கிழமை (03-02-2026) உத்தரவிட்டு பிரதேச செயலாளர் மற்றும் சேவை நாடும் மகளீர் உத்தியோகத்தர் ஆகிய இருவரையும் கைது செய்யுமாறும் உதவி பொலிஸ் அத்தியட்சகர் தலைமையில் குழு அமைத்து விசாரணை செய்யுமாறு கட்டளை பிறப்பித்தார்.

குறித்த பொலிஸ் பிரிவிலுள்ள பிரதேசம் ஒன்றைச் சேர்ந்தவரான வரும் மட்டு நீதிமன்ற கட்டிட தொகுதியில் சட்டத்தரணியாக செயல்பட்டு வரும் சட்டத்தரணி ஒருவர் தனது பிரதேசத்தில் அமைந்துள்ள காரியாலயத்தில் கடமையாற்றி வந்த அந்த பகுதியைச் சேர்ந்த 24 வயதுடைய யுவதி ஒருவருக்கு உணவில் மயக்க மருந்து கலந்து கொடுத்து அவரை பலாத்காரமாக கற்பழித்து 3 மாத கர்ப்பிணியாக்கிய குற்றச்சாட்டில் சட்டத்தரணியை கடந்த மாதம் ஜனவரி (30) திகதி சந்தேகத்தின் அடிப்படையில் கைது செய்து நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டு அவரை 3ம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதவான் உத்தரவிட்டார்.

இந்த நிலையில் குறித்த சட்டத்தரணியை 3ம் திகதி அன்று செவ்வாய்க்கிழமை மட்டக்களப்பு நீதவான் நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்ட நிலையில் வழக்கை விசாரணைக்கு நீதவான் எடுத்துக் கொண்ட போது சட்டத்தரணி சார்பாக சிரேஷ்ட சட்டத்தரணி பிரேம்நாத் தலைமையில் சட்டத்தரணிகள் ஆஜராகியதுடன் வழக்காளி சார்பில் சட்டத்தரணி றிஸ்வி தலைமையிலான சட்டத்தரணிகளான யோகேஸ்வரன், உவைஸ், ரூபி, உதயாகரன், சுதர்சன், கமலதாசன், நஜீபா, ரம்சீயா, தவராசா, சசிதரன், ஆஜராகி சமர்ப்பனங்கள் முன்வைத்தனர்.

இதன் போது பொலிசார் பிரதேச செயலாளர் மற்றும் சேவை நாடும் மகளீர் பிரிவு அபிவிருத்தி உத்தியோகத்தர் பொலிசாரின் விசாரணைக்கு ஒத்துழைக்க முடியாது என தெரிவித்து விசாரணைக்கு ஒத்துழைப்பு வழங்கவில்லை அதனால் விசாரணை முடியவில்லை என நீதவானிடம் தெரிவித்ததையடுத்து குறித்த சட்டத்தரணியை தொடர்ந்து எதிர்வரும் 17ம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதவான் உத்தரவிட்டதுடன் விசாரணைக்கு ஒத்துழைப்பு வழங்காத பிரதேச செயலாளர் மற்றும் சேவை நாடும் மகளீர் பிரிவு அபிவிருத்தி உத்தியோகத்தர் ஆகிய இருவரையும் கைது செய்யுமாறும் உதவி பொலிஸ் அத்தியட்சகர் தலைமையில் குழு ஒன்றை அமைத்து விசாரணை செய்யுமாறு மாவட்ட சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகருக்கு நீதவான் கட்டளை பிறப்பித்தார்.



# மட்டக்களப்பில் வாகன தரிப்பிடம் விஸ்தரிப்பு என்ற போர்வையில் ஏழை மக்களை அடக்கி ஒடுக்கும் மாநகரசபை

## சமூக செயற்பாட்டாளர் நாகையா ரதி கண்டனம்

மட்டக்களப்பு மத்தியஸ்தர் வீதியில் கொட்டகை அமைந்துள்ள வாகன தரிப்பிடத்தை மாநகரசபை மேலும் விஸ்தரிப்பு செய்யும் நடவடிக்கை என்பது நாங்கள் படிப்பு அறிவு இல்லாத தாழ்த்தப்பட்ட சாதியினர் என எங்களை அடக்கி சுதந்திரமாக வாழ விடாது செய்யும் அதிகாரிகளின் செயலினால் எமது எதிர்கால சந்ததியினர் அந்த வீதியால் பயணி முடியாது என தெரிவித்தார்.

மட்டக்களப்பு வொய்ஸ் ஒப் மீடியா கற்கை நிலையத்தில் 5ம் திகதி அன்று வியாழக்கிழமை இடம்பெற்ற ஊடக மாநாட்டில் அவர் இவ்வாறு தெரிவித்தார்.

மட்டக்களப்பு போதனா வைத்தியசாலைக்கு வாகனங்களில் வருபவர்களின் வாகனங்கள் நிறுத்துவதற்காக நீண்ட காலமாக மத்தியஸ்தர் வீதியில் வைத்தியசாலை மதில் ஓரமாக மாநகர சபை தற்காலிக கொட்டகை அமைத்து வாகன தரிப்பிடமாக்கி அதனை குத்தகைக்கு வழங்கி வந்தனர்.

இந்த நிலையில் குறித்த வாகன தரிப்பிடம் இந்த வருடம் 75 இலட்சத்துக்கு குத்தகைக்கு வழங்கப்பட்ட நிலையில் அந்த வாகன தரிப்பிடத்தை மேலும் விஸ்தரிப்பு நடவடிக்கையினை மாநகரசபை மேற்கொண்டு வருகிறது இந்த விஸ்தரிப்பினால் அந்த வீதியில் உள்ள குடியிருப்பாளர்கள் மற்றும் பாடசாலை மாணவர்கள், பெண்கள் உட்பட பொதுமக்கள் பிரயாணிக்க முடியாது பல்வேறு அசௌகரியங்களை எதிர் நோக்க வேண்டியுள்ளது.

ஏற்கனவே இந்த வீதியில் அமைக்கப்பட்ட இந்த வாகன தரிப்பிடத்தால் பல அசௌகரியங்களை எதிர்நோக்கி வரும் நிலையில் மீண்டும் இந்த வாகன தரிப்பிடத்தை விஸ்தரிப்பது இந்த வீதியில் சுதந்திரமாக குடியிருந்து வரும் எங்களை எடுக்கும் செயலாகும்.

ஏசி அறையில் இருந்து கொண்டு முடிவெடுத்த அதிகாரிகள் எவரும் இந்த வீதியில் வசிப்பவர்கள் அல்ல அவர்கள் வேறு பகுதிகளில் பெரிய வீடுகள் கட்டி சுகமாக இருப்பவர்களுக்கு நாங்கள் ஒரு சிறிய பகுதியில் சிறிய வீடுகளை கட்டி அதில் 3 குடும்பங்கள் என பல்வேறு கஷ்டத்துக்கு மத்தியில் வாழ்ந்து வரும் ஏழைகள்.



எனவே குறித்த வாகன தரிப்பிடத்தை தற்காலிக கொட்டகை அமைத்து விஸ்தரிப்பதை நிறுத்தி எங்களை சுதந்திரமாக வாழ வழி செய்யவும் என அவர் தெரிவித்தார்.

# இலங்கையின் பெரும்பான்மையினரிடம் நாட்டை பிரித்தானியர் கையளித்த நாட்தொடக்கம் அது தமிழருக்கு கரிநாள் என்கிறார் தமிழ் தேசிய மக்கள் முன்னணி கட்சி அமைப்பாளர்

இந்த நாட்டை பிரித்தானியர்கள் பெரும்பான்மையினரிடம் கையளித்ததில் இருந்து தொடர்ச்சியாக தமிழர்கள் இந்த நாளை கரிநாளாக அனுஷ்டித்து வருகின்றனர். எனவே நாளை பல்கலைக்கழக மாணவர்கள் காணாமல் போன உறவுகள் , மற்றும் பொது அமைப்புக்கள் முன்னெடுத்து வரும் இந்த கரிநாள் போராட்டத்திற்கு மக்கள் வலுச்சேர்க்க வேண்டும் என தமிழ் தேசிய மக்கள் முன்னணி கட்சி தேசிய அமைப்பாளர் தர்மலிங்கம் சுரேஸ் கோரிக்கை விடுத்துள்ளார்.

மட்டக்களப்பு வொய்ஸ் ஒப் மீடியா கற்கை நிலையத்தில் 3ம் திகதி அன்று செவ்வாய்க்கிழமை (03-02-2026) இடம்பெற்ற ஊடக மாநாட்டில் அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இந்த நாட்டிலே தமிழர் தாயகம் எங்கும் இந்த நாளை ஒரு கரிநாளாக பிரகடனப்படுத்தி பல போராட்டங்கள் நடைபெறவுள்ளது அதனடிப்படையில் வடக்கில் கிளிநொச்சியிலும் கிழக்கில் மட்டக்களப்பிலும் கரிநாள் எதிர்ப்பு போராட்டம் இடம்பெறவுள்ளது.

பிரித்தானியர்கள் 1948 பெப்பிரவரி 4ம் திகதி இந்த நாட்டை ஒரு சிங்கள தேசிய வாதத்திடம் கையளித்ததில் இருந்து தமிழர்களை பொறுத்தமட்டில் இந்த நாளை தொடர்ச்சியாக ஒரு கரிநாளாக அனுஷ்டித்து வருகின்றனர்.

பல்லின மக்கள் வாழுகின்ற சூழ்நிலையில் நாட்டினுடைய சிங்கள தேசியவாதிகளான ஆட்சியாளர்கள் பிரித்தானியர்கள் கையளித்தில் இருந்து ஏனைய மக்களை அடக்கி ஒடுக்கி அடிமைப்படுத்தி வருகின்ற நிலமையினால் இந்த நாளை சிறுபான்மை மக்கள் கரிநாளாக அனுஷ்டிக்கின்றனர்.

இந்த நாடு தெற்கு ஆசிய பிராந்தியத்தில் ஒரு முன்னிலையாக வரவேண்டிய நாடு துரதிர்ஷ்டவசமாக இந்த சிங்கள தேசிய ஆட்சியாளர்கள் தங்களுடைய நலனுக்காக முன்னிலைப்படுத்தி கொண்டு செல்வதால் இந்த நாடு வளர்ச்சி பாதையில் இருந்து பின்தங்கிய நிலையில் காணப்படுகின்றது.

தமிழர்கள் அடிமைப்படுத்தப்பட்டு வருகின்ற இந்த நிலைமையிலே பெரும்பான்மையாக இருக்கும் சிங்கள மக்கள் இந்த நாளை சுதந்திர நாளாக கருதி அவர்கள் கொண்டாடினாலும் எமது மக்கள் இந்த நாளை கரிநாளாக அனுஷ்டித்துக் கொண்டிருக்கின்றனர்.

ஏன் என்றால் இந்த வளர்ச்சி பாதையை தடுப்பது சிங்கள தேசியவாதம் இந்த நாட்டின் அரசியல் அமைப்பு 1948 பிற்பாடு ஒரு ஒட்சியாட்சி அரசியல் அமைப்பாக ஒரு அடிமை சாசனமாக இருப்பதால் இந்த அரசியல் அமைப்பில் உள்ள சட்டங்கள் ஒரு இனத்தை அடக்கி ஒடுகின்றது அந்த அடக்குமுறை என்பது சிங்கள மக்களையும் முழுமையாக பாதிக்கின்றது.



எனவே வடக்கு கிழக்கில் நடக்கும் கரிநாள் நிகழ்வு சிங்கள மக்களுக்கு பொருத்தமாக அமைகிறது எனவே இந்த நிலைமைகளை சிங்கள தேசம் விளங்கி கொண்டு அடிப்படை பிரச்சனைக்கு காரணமாக இருக்கின்ற ஒற்றையாட்சி அரசியல் அமைப்பை மாற்றி அதனை ஒரு சமஷ்டி கட்டமைப்பாக மாற்றி இந்த நாட்டிலே இருக்கின்ற பல்லின மக்கள் சம உரிமையுடன் சுயநிர்ணயத்துடன் அவர் அவர் அனுபவிக்க கூடிய அந்த சட்டத்தை மாற்றுவதற்கு ஆட்சியாளர்கள் முன்வரவேண்டும்.

அவ்வாறு முன் வருகின்ற பட்சத்தில் மட்டும் தான் இந்த நாட்டை கட்டியெழுப்பலாம் இங்கே அடிப்படை காரணமாக இருப்பது இந்த அடிமை சாசனம் தமிழர்கள் தான் நசுக்கப்படுகிறார்கள் என்ற மமதையில் இந்த ஆட்சியாளர்கள் இருப்பார்களாக இருந்தால் இந்த நாடு மீண்டும் ஒரு படுகுழியில் தள்ளப்படும் ஆகவே இந்த நிலைமைகளை ஆட்சியாளர்கள் உணரவேண்டும்.

1949 கல்லோயா திட்டம் தொடக்கம் 2009 கிபிலோயா திட்டம் வரைக்கும் தமிழ் மக்களுடைய தேசம் குறிவைக்கப்பட்டு அடிமைப்படுத்தப்பட்டு அந்த தேசம் அழிக்கப்படுகின்றது ஒற்றையாட்சி கட்டமைப்பு தான் தமிழ் தேசத்தை அழிக்கின்றது எனவே இந்த கட்டமைப்பை மாற்றுவதற்கு ஆட்சியாளர்கள் முன்வரவேண்டும் சர்வதேச நாடுகளும் அழுத்தம் கொடுக்க வேண்டும்.

பெரும்பான்மையினரான சிங்களவர்களிடம் இந்த நாட்டை பிரித்தானியர் கையளித்ததில் இருந்து தொடர்ச்சியாக தமிழர்கள் இந்த நாளை கரிநாளாக அனுஷ்டித்து வருகின்றனர் அதன் அடிப்படையில் வடக்கிலும் கிழக்கிலும் கரிநாள் அனுஷ்டிக்கப்படுகின்றது வடக்கில் பல வர்த்தக அமைப்புகள் பொது அமைப்புகள் முழுமையான ஆதரவு வழங்குவதாக கூறியுள்ளனர்.

(10ம் பக்கத் தொடர்ச்சி)

## யாழ்ப்பாண பல்கலைக்கழக மாணவர்களின் எண்ணிக்கையில் இனப்பரம்பல் பற்றிய அதிர்ச்சியூட்டும் தரவுகள்

இந்தச் சூழ்நிலையின் விளைவாக, யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தின் விஞ்ஞான பீடத்தில் இனப்பரம்பல் மாற்றம் ஏற்பட்டுள்ளமை தெளிவாகிறது. தற்போதைய நிலவரப்படி முஸ்லிம்கள் 11 வீதம், தமிழர்கள் 34 வீதம், சிங்கள மாணவர்கள் 55 வீதம் என மாணவர் விகிதம் காணப்படுகிறது. கல்வி வாய்ப்புகள் குறைந்த நிலையிலும் சிங்கள மாணவர்கள் மற்றும் முஸ்லிம் மாணவர்கள் தொடர்ந்து முயன்று கல்வியை கைப்பற்றியுள்ளனர் இதற்காக அவர்களையும், அவர்களை ஊக்குவித்த பெற்றோர்களையும் பாராட்ட வேண்டும்.

இதற்கு மாறாக, கல்வி ஒடுக்குமுறை என்ற பெயரில் ஆயுதம் எடுத்த ஒரு தலைமுறையின் பின், இன்றைய தமிழர் சமூகம் பெட்டிப் படிக்கைகளுடன் வெளிமாவட்டங்களுக்கும் வெளிநாடுகளுக்கும் செல்லும் நிலை அதிகரித்துள்ளதாகவும் விமர்சனம் முன்வைக்கப்படுகிறது. இதன் மூலம் யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தை யாரும் திட்டமிட்டு இனப்பரம்பலை மாற்றவில்லை மாறாக வடக்கு சமூக மனநிலையும் கல்வி தேர்வுகளுமே இந்நிலைக்கு காரணமாக அமைந்துள்ளன.

இன்றைய காலத்தில் மிகுந்த கவலைக்குரிய ஒரு சமூக நிலைமை குறித்து பேச வேண்டிய கட்டாயத்தில் நாங்கள் இருக்கிறோம். தாதியர் (Nursing) கல்வி தொடர்பான தமிழ் சமூகத்தின் பார்வை மற்றும் அதனால் உருவான விளைவுகள் தற்போது வெளிப்படையாகத் தெரிகின்றன.

தாதியர் (Nursing) என்ற தொழில், பல ஆண்டுகளாக "தீண்டத் தகாதது", "கீழ்த்தரமான வேலை" என்ற தவறான மனப்பாங்கில் பார்க்கப்பட்டு வந்தது. (எல்லோராலும் அல்ல) அவமதிக்கும் அளவிற்கு தாதியர் தொழிலை இழிவுபடுத்தியதன் விளைவு தான், இன்றைக்கு படித்த சமூகமே தாதியர் படிப்பை மேற்கொள்ளாமல் வெறுக்கும் நிலைக்கு வந்துள்ளது.

ஆனால் உண்மை நிலை வேறு. இன்றைய மருத்துவ அமைப்பில், பல முக்கிய பணிகளை தாதியர்களே செய்கிறார்கள். நோயாளிகளுக்கான மருந்தளிப்பு, உடல் நிலை கண்காணிப்பு, அளவீடுகள், பராமரிப்பு உள்ளிட்ட அடிப்படை முதல் உயர் நிலை பணிகள் வரை தாதியர்களின் பொறுப்பில் உள்ளது. பல சந்தர்ப்பங்களில் வைத்தியர் வந்து குறிப்பெழுதி செல்லும் அளவிற்கு மட்டுமே இருப்பதாகவும், நேரடி பராமரிப்பு முழுவதும் தாதியர்களால் மேற்கொள்ளப்படுவதாகவும் காணப்படுகிறது. இதற்கு தாதியர் கல்வியில் அவர்கள் பெறும் உயர்ந்த பயிற்சியே காரணம். எனவே தாதியர் தொழிலுக்கு உரிய மரியாதை வழங்கப்பட வேண்டும்.

தாதியர் பயிற்சி துறைகளுக்கு வடக்கு மாணவர்கள் பலர் விரும்பாததன் காரணமாக இன்று யாழ்ப்பாண போதனா வைத்தியசாலை முதல் மாவட்ட மற்றும் பிரதேச வைத்தியசாலைகள் வரை ஒரு பெரிய மாற்றம் நிகழ்ந்துள்ளது. தமிழ் சமூக தாதியர்களின் எண்ணிக்கை குறைந்து, அவர்களுக்குப் பதிலாக சிங்கள தாதியர்கள் பெருமளவில் சேவையில் ஈடுபட்டுள்ளனர். அவர்கள் இன்முகத்தோடு நோயாளிகளை வரவேற்று, நல்ல சேவையையும் பராமரிப்பையும் வழங்கி வருகின்றனர்.

வவுனியாவின் தாதியர் பாடசாலைகளிலும், யாழ்ப்பாணத்தின் தாதியர் பாடசாலைகளிலும் மாணவர் சேர்க்கை விகிதங்களைப் பார்த்தால் பெரும்பாலானோர் சிங்கள மற்றும் முஸ்லிம் மாணவர்கள் என்பதும், தமிழ்மாணவர்களின் பங்கேற்பு மிகக் குறைவாக இருப்பதும் தெளிவாகத் தெரிகிறது. அவர்கள் தாதியர் கல்வியை முழுமையாகப் பயின்று, உத்தியோகம் செய்து, விடுதிகளில் தங்கி பின்னர் குடும்பங்களை கொண்டு வந்து இங்கேயே நிரந்தரமாக வாழும் நிலையும் உருவாகியுள்ளது. வீடு, காணி, பள்ளிக்கூடம், விகாரைகள் போன்ற அமைப்புகள் உருவாகி, அந்த சமூகங்கள் இயல்பாகவே வேரூன்றி வளர்ந்து வருகின்றன.

இதன் பின்னர் சிலர் கொடி பிடித்து, "விகாரை கட்டக்கூடாது", "பள்ளிக்கூடம் வரக்கூடாது" என போராடுவதில் அர்த்தமில்லை. இவ்வாறு போராடுவதற்குப் பதிலாக, இந்த விடயங்களைப் பற்றி பாராளுமன்றத்தில் பேச வேண்டியவர்கள், புத்திஜீவிகள், அரசியல்வாதிகள், சமூக தலைவர்கள் என்ன செய்தனர் என்ற கேள்வி எழுகிறது. யாழ்ப்பாண பல்கலைக்கழகத்திற்கு விண்ணப்பிக்கவும், தாதியர் போன்ற அவசியமான துறைகளில் சேரவும் தமிழ் மாணவர்களை ஊக்குவிக்கும் புத்திசார்ந்த பதிவுகளோ, முயற்சிகளோ மேற்கொள்ளப்படவில்லை.

இன்றைய நிலையில், "மலையக மக்கள் வடக்கு வர வேண்டும், அவர்கள் இங்கு வேலை செய்ய வேண்டும்" என்ற பேச்சுகள் அதிகரிக்கின்றன. ஆனால் அதே நேரத்தில், உள்ளூர் இளைஞர்கள் வேலைக்கு செல்ல விருப்பமில்லாமல், டிக்டாக் (Tiktok) சமூக ஊடகங்கள் (Social Media's) போன்றவற்றில் நேரத்தை கழிக்கும் நிலையும் காணப்படுகிறது. வேலை வாய்ப்புகள் இருந்தும், அதை பயன்படுத்தாமல் இருப்பதே இந்த பிரச்சினையின் மையம்.

இதன் விளைவாக, ஒரு இனப்பரம்பல் மாற்றம் மெதுவாக துரிதமாக வடக்கில் கிழக்கில் நடைபெறுகிறது. இந்த நிலையைப் பார்த்தால், தமிழினத்தை திட்டமிட்டு அழிப்பது சிங்களவர்கள் மட்டும் அல்ல் நமது தவறான பார்வை, அலட்சியம், தொலைநோக்கு பார்வையற்ற நிலை மற்றும் செயல் இன்றிய நிலை மூலமாக நாமே நம்மை அழித்துக் கொண்டிருக்கிறோம் என்பதே கடுமையான உண்மை.

இறுதியாக துரித கதியில் "இனத்தை திட்டமிட்டு அழிப்பது தமிழர்கள் ஆகிய நாங்களே" இந்த உண்மையை முதலில் நாம் ஏற்றுக்கொள்ள வேண்டும். இன்று ஈழத் தமிழினம் எதிர்கொள்கின்ற மிகப்பெரிய அபாயம், வெளியில் இருந்து வரும் நேரடி ஒடுக்குமுறை அல்ல் தமிழர்களை தமிழர்களே மெதுவாக அழித்துக் கொண்டிருக்கும் நவீன சுய இன அழிப்பு செயற்பாடே.

மற்றவர்களை விரல் நீட்டி குற்றம் சாட்டுவதில் எந்த அர்த்தமும் இல்லை. இன உரிமைக்காக, இன அடையாளத்திற்காக போராடிய ஒரு இனம் இன்று இனப்பற்றுமில்லாமல், தன் தலைமுறையின் எதிர்காலம் குறித்து சிந்திக்காத, தொலைநோக்கு பார்வையற்ற இனமாக உலக வரைபடத்தில் மாறி நிற்கிறது. அதுதான் ஈழத் தமிழ் இனம் எதிர்கொள்ளும் மிகப் பெரிய வீழ்ச்சி.

இந்த நிலைக்கு அரசியல்வாதிகளும் பொறுப்பானவர்கள். எந்த நீண்டகாலத் திட்டமும் இல்லை, எந்த தலைமுறை கொள்கைகளும் இல்லை. அரசியல் என்பது சுயநல அரசியலாக மட்டுமே மாறி, இனத்தின் எதிர்காலம் பற்றிய சிந்தனை எங்கும் காணப்படவில்லை. அதேபோல் சில மதஜீவிகள் மற்றும் புத்திஜீவிகளும் தனிப்பட்ட மேடைகளில் மட்டுமே தங்களை வெளிப்படுத்திக் கொண்டு, உண்மையான வழிகாட்டுதலையும் சமூக பொறுப்பையும் தவிர்த்து வருகிறார்கள்.

"என் உழைப்பை காப்பாற்றினால் போதும்" என்ற சிந்தனையோடு வாழும் இந்த தலைமுறை, பிள்ளைகளுக்கு எத்தகைய கொள்கைகளை எடுத்துச் செல்ல வேண்டும், எந்த துறைகளில் படிக்க வேண்டும், சமூகத்திற்கு என்ன தேவை என்பதைக் குறித்து யாரும் சிந்திப்பதில்லை. இதன் விளைவாக உருவாகும் நிலையை விளக்கும் ஒரு சிறிய எடுத்துக்காட்டே யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தின் விஞ்ஞான பீட மாணவர் இனப்பரம்பல்.

"ஒரு பானை சோற்றுக்கு ஒரு சோறு" என்பதுபோல், இந்த புள்ளி விபரம் முழு சமூக நிலையை வெளிப்படுத்துகிறது. இது மாணவர்களுடன் மட்டும் நிற்கவில்லை. அதேபோல் ஊழியர் நியமனங்களிலும் தேசிய கொள்கை என்ற பெயரில் சமநிலை குறித்து பேச இயலாத நிலை உருவாகியுள்ளது. சிங்கள ஊழியர்கள் அதிகரித்து, அவர்கள் குடும்பங்களுடன் வந்து குடியேறுகிறார்கள் பிள்ளைகள் பிறக்கிறார்கள் பள்ளிக்கூடங்கள் உருவாகின்றன் சமூக அமைப்புகள் வேரூன்றி வளர்கின்றன. இதைத் தடுக்க இயலாத நிலையே இன்றைய உண்மை.

ஈழத்தின் வரைபடம் ஏற்கனவே மாறிவிட்டது. இந்த மாற்றம் 2025-2035 காலப்பகுதியில் எவ்வாறு வேகமாக மாறும் என்பதை, வேறு பதிவுகளில் விரிவாக சந்திப்போம்.

இன்றைக்கு சொல்ல வேண்டிய ஒரே செய்தி: தமிழினத்தை அதிக வேகத்தில் அழிப்பது பிறர் அல்ல - தமிழர்கள் ஆகிய நாங்களே. இந்த உண்மையை ஏற்றுக்கொள்ளாமல், எந்த அரசியல் தீர்வும், எந்த சமூக மாற்றமும் சாத்தியமில்லை.

**கு.மதுசுதன்**
B.Sc(Hons), M.Sc
**அரசியல் ஆய்வாளர்**

## சுருவில் மக்கள் மன்றம் — கனடா" நடத்திய வருடாந்த "நத்தார் தின விழா" சிறப்பாக ஏற்பாடு செய்யப்பெற்றிருந்தது!











கடந்த 34 வருடங்களுக்கு மேலாக கனடாவில் இயங்கிவரும் சுருவில் மக்கள் மன்றம்" தங்கள் ஊரில் கல்வி- சமூகம்- சமயம் சார்ந்த பணிகளுக்கு வருடாந்த உதவிகள் செய்து வருகின்றது. இந்த நற்பணிகளால் பயன்பெற்றவர்கள் நூற்றுக்கணக்கானவர்கள் என்றால் அது மிகையாகாது.

இவ்வாறாக பல்வேறு நிர்வாக சபைகளுக்கு கீழ் பல ஆண்டுகளாக மன்றம் நடத்திய நத்தார் கொண்டாட்டங்களைப் போன்று 2025ம் ஆண்டுக்குரிய வருடாந்த "நத்தார் தின விழா" கடந்த 31ம் திகதி ஸ்காபுறோ நகரில் அமைந்துள்ள அழகிய மண்டபம் ஒன்றில் சிறப்பாக ஏற்பாடு செய்யப்பெற்றிருந்தது!

நிகழ்வில் முதலில் தற்போதைய தலைவர் ஜெயச்செல்வன் பற்குணம் அவர்கள் தலைமையுரையில் பல்வேறு முக்கிய விடயங்களைப் பகிர்ந்து கொண்டு அவைகளில் சிலவற்றுக்கு அங்கத்தவர்களின் கருத்துக்களைக் கேட்டறிந்து கொண்டார்.

தொடர்ந்து சுருவில் கிராம மக்களால் நேசிக்கப்படுபவரான திருவருள் அவர்கள் தனது கருத்துக்களை சிறப்புரையொன்றின் ஊடாகப் பகிர்ந்து கொண்டார்.

தொடர்ந்து உதயன் பத்திரிகையின் பிரதம ஆசிரியர் லோகேந்திரலிங்கமும் ஊர் பற்றிய தனது கருத்துக்களை ஆர்வத்துடன் பகிர்ந்து கொண்டார்.

சிறுவர் சிறுமிகளுக்கு உரிய பொழுதுபோக்கு நிகழ்ச்சிகள் மற்றும் நடனங்கள் ஆகியவை இடம்பெற்றன. கலை நிகழ்ச்சிகளில் பங்குபற்றியவர்களுக்கு சன்மானங்களும் வழங்கப்பெற்றன.

அன்றைய மக்கள் சந்திப்பு பயனுள்ள வகையிலும் தங்கள் ஊர்பற்றிய தகவல்களைப் பகிர்ந்து கொண்டதுமாக தொடர்ந்து இராப்போசனத்தோடு விழா நிறைவு பெற்றது.




# தமிழ் மக்கள் எழுச்சியும் மாகாணசபைத் தேர்தலும்

**"தென்னிலங்கையில் மட்டுமன்றி வடக்கு, கிழக்கு மாகாணங்களில் தொடரும் தமிழர் விரோத செயற்பாடுகள், சிங்களக் குடியேற்றங்கள் போன்றவற்றினால் ஜே.வி.பி.-தேசிய மக்கள் சக்தி அரசுக்கு எதிரான தமிழ் மக்களின் உணர்வலைகள் அதிகரித்துள்ள நிலையில் மாகாண சபைகளுக்கான தேர்தலை இவ்வருடமும் நடத்தாதிருப்பதற்கான காய்களை அநுரகுமார அரசு நகர்த்தத் தொடங்கியுள்ளது."**

**------------------------------------------------------------ கே.பாலா -**

கடந்த ஒரு வார காலத்திற்குள் ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க தலைமையிலான ஜே.வி.பி.-தேசிய மக்கள் சக்தி அரசு தமிழர் தாயகமான வடக்கு, கிழக்கு தழுவிய ரீதியில் "கிவுல் ஓயா எதிர்ப்பு", "இலங்கையின் சுதந்திர நாள் தமிழருக்கு கரிநாள்" என்ற இரு பெரும் எதிர்ப்பு போராட்டங்களை சந்தித்துள்ள நிலையில் அந்த இரு போராட்டங்களிலும் எதிர்பார்த்ததை விடவும் தமிழ் மக்களின் பங்களிப்பு அதிகம் இருந்தமையும் தமிழ் தேசியக் கட்சிகள் ஒன்றுபட்டு ஓரணியில் நின்றமையும் தமிழ் தேசிய உணர்வாளர்களுக்கு ஒரு உந்து சக்தியைக் கொடுத்துள்ள அதேவேளை வடக்கு, கிழக்கிலும் நாம் தான் தமிழ் மக்களின் பிரதிநிதிகள் என மார் தட்டிய அநுரகுமார அரசையும் கொஞ்சம் ஆட்டம் காண வைத்துள்ளது.

ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க தலைமையிலான ஜே.வி.பி.-தேசிய மக்கள் சக்தி அரசு ஆட்சி பீடம் ஏறிய இதுவரையிலான காலப்பகுதியில் தென்னிலங்கையில் மட்டுமே சர்ச்சைகள், குற்ச்சாட்டுக்களில் சிக்கி சவால்களையும் எதிர்ப்புகளையும், கடும் விமர்சனங்களையும் எதிர்கொண்டுவந்த நிலையில் தற்போது தமிழர் தாயகமான வடக்கு, கிழக்கு மாகாணங்களில் குறிப்பாக வடக்கு மாகாணத்திலும் மக்கள் போராட்ட வடிவில் நெருக்கடிகளை எதிர்கொள்ளத் தொடங்கியுள்ளது.

மக்கள் விடுதலை முன்னணி (ஜே.வி.பி. மீதான "தமிழர்களின் விடுதலைப் போராட்டத்திற்கு எதிரான செயற்பட்டவர்கள், நோர்வே மத்தியஸ்தத்துடனான விடுதலைப்புலிகளுடனான சமாதான பேச்சு வார்த்தையை முறியடித்து மீண்டும் போரை ஆரம்பிக்கத் தூண்டியவர்கள் , தமிழர்களுக்கு எதிரான போரை நடத்த இராணுவத்திற்கு 50000 பேரை இணைத்துக் கொடுத்தவர்கள், சந்திரிகா அரசுக்கும் விடுதலைப்புலிகளுக்கும் இடையிலான சுனாமி பொதுக்கட்டமைப்பை சிதைத்தவர்கள், தமிழர்களின் தாயகமான வடக்கு, கிழக்கு இணைப்பை உயர்நீதிமன்றத்தின் ஊடாக பிரித்து தமிழர் தாயகத்தை துண்டாடியவர்கள் என்ற குற்றச் சாட்டுக்கள் தமிழ்த்தரப்பால் தொடர்ந்து சுமத்தப்பட்டு வருகிறது.

இவ்வாறான நிலையில் கூட தமிழ் மக்கள் மத்தியில் ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்கவுக்கு மதிப்பும் வரவேற்பும் இருந்தாலும் அவர் ஜே.வி.பி. கட்சித்தலைமை அலுவலகத்திற்கு கட்டுப்பட்டு முன்னெடுத்துவரும் தமிழர் விரோத நிகழ்ச்சி நிரல்களே இன்று வடக்கு, கிழக்கு தமிழர் தாயகப்பகுதியில் ஒரு எதிர்ப்பலையையும் ஜே.வி.பி. இன்னும் இனவாதக்கட்சிதான், தமிழர்களுக்கு எதிரான கட்சிதான் என்ற தமிழ் மக்களின் நிலைப்பாட்டையும் அதிகரித்து வருகின்றது.

அநுரகுமார அரசுக்கு இவ்வாறானதொரு நெருக்கடி ஒருபுறத்தில் அதிகரித்துவரும் நிலையில் மறு புறத்தில் மாகாண சபைகளுக்கான தேர்தலையும் நடந்த வேண்டும் என்ற நேருக்கு வாரங்களும் அதிகரித்துள்ளன. மாகாண சபைகளின் ஆயுட்காலம் முடிவடைந்த போதும் இதுவரையில் இந்த மாகாணசபைகளுக்கான தேர்தல்கள் நடத்தப்படவில்லை. மாகாணசபைத் தேர்தல்கள் சட்டத்தின் பத்தாம் சரத்து மற்றும் அரசமைப்பின் *154 ஈ* உறுப்புரை ஆகியனவற்றின்படி, மாகாண சபையொன்றின் பதவிக்காலம் நிறைவடைந்து, அந்த மாகாணசபை கலைந்த நாளிலிருந்து, நான்கு வார காலத்துக்குள், குறித்த மாகாணசபைத் தேர்தலை நடத்துவதற்கான அறிவித்தலை, தேர்தல் ஆணைக்குழு விடுக்க வேண்டும். ஆனால், மாகாண சபைகள் கலைந்து பல வருடங்களுக்கு மேலாகியும் இன்றுவரை மாகாண சபைத் தேர்தலுக்கான அறிவித்தல் விடுக்கப்படவில்லை.

இவ்வாறு எந்தவொரு மாகாண சபைகளுக்கும் தேர்தல்கள் நடத்தப்படாத நிலையில் மாகாணசபைகள் ஆளுநர்களின் கட்டுப்பாட்டிலேயே இருந்து வருகின்றன. இதனைப் பயன் படுத்தி ஆட்சிக்கு வரும் ஒவ்வொரு அரசும் தமக்கு விசுவாசிகளான ஆளுநர்களை ஒவ்வொரு மாகாணங்களுக்கும் நியமித்து தமது நோக்கங்கள், தேவைகள், திட்டங்கள், இலக்குகளை இலகுவாக அடைந்து கொள்ளும் நிலையே கடந்த பல வருடங்களுக்கும் மேலாக இடம்பெற்று வருகின்றன. ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க தலைமையிலான தற்போதைய ஜே.வி.பி.-தேசியமக்கள் சக்தி ஆட்சியிலும் இதுவே நடைபெறுகின்றது. இவ்வாறான நிலையில்தான் மாகாணசபை முறைமையை முற்றாக இல்லாமல் செய்வதற்கே சிங்கள தேசியக் கட்சிகள் விரும்பும்புவதாகச் சுட்டிக்காட்டிய தமிழ்த்தேசிய அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகள், அதற்கு இடமளிக்காமல் மாகாணசபைத்தேர்தல்களை உடனடியாக நடத்துமாறு தொடர்ந்து அழுத்தம் பிரயோகிக்கத் தொடங்கியுள்ளன.

ஆனால் இலங்கை-இந்திய ஒப்பந்தத்தை கடுமையாக எதிர்த்து கிளர்ச்சியில் ஈடுபட்ட, அந்த ஒப்பந்தத்தின் பயனாக இணைக்கப்பட்ட வடக்கு, கிழக்கு மாகாணங்களின் இணைப்பை நீதிமன்றத்தை நாடி துண்டித்த, மாகாணசபைகளுக்கு அதிகாரங்கள் வழங்கப்படக்கூடாது என்ற கொள்கையை வரித்துக்கொண்ட இந்த அநுரகுமார திசாநாயக்க தலைமையிலான ஆட்சியாளர்கள் மாகாணசபைகளுக்கான தேர்தலை நடத்துவதற்கு எந்தளவுக்கு ஆர்வம் காட்டுவார்கள் அல்லது நடவடிக்கை எடுப்பார்கள் என்ற கேள்வி பலதரப்பினரிடமும் எழுந்திருந்தது.

மைத்திரி-ரணில் நல்லாட்சியில் மாகாணசபைகளுக்கான தேர்தலை நடத்த நடவடிக்கைகள் எடுக்க முற்பட்டபோது எதிர்த்தவர்கள், கோத்தபாய ஆட்சியில் மாகாணசபைகளுக்கு தேர்தலுக்கான முயற்சிகள் என்ற நாடகம் நடத்தப்பட்டபோதுகூட அந்த நாடகத்தையே முழு மூச்சாக எதிர்த்தவர்கள் இன்று மூன்றில் இரண்டு பெரும்பான்மை பலத்துடன் ஆட்சியில் இருக்கும்போது அதனை நடத்த விரும்புவார்களா? அல்லது தமது இனவாத அரசியலை முன்னெடுக்க சந்தர்ப்பம் பார்த்து காத்திருக்கும் விமல் வீரவன்ச, உதய கம்மன்பில, சரத் வீரசேகர மற்றும் மகாசங்கத்தினர் தான் மாகாண சபைகளுக்கான தேர்தலை நடத்த விடுவார்களா?

அதுமட்டுமல்ல ஜனாதிபதித்தேர்தலிலும் பாராளுமன்றத்தேர்தலிலும் பெரு வெற்றி பெற்ற அநுரகுமார தலைமையிலான ஜே.வி.பி.-தேசிய மக்கள் சக்தியினர் சில மாதங்களில் நடந்த உள்ளூராட்சி சபைகளுக்கான தேர்தலில் மக்களின் ஆதரவை கணிசமானளவு இழந்து தோல்விப் பாதையில் சென்றுகொண்டிருக்கும் நிலையில் மாகாணசபைகளுக்கான தேர்தலை நடத்தி மீண்டுமொரு படுதோல்வியை சந்திக்க விரும்பமாட்டார்கள். ஆகவே மாகாண சபைக்களுக்கான தேர்தல் சட்டத் திருத்தத்தை "துருப்பு சீட்டாக" பயன்படுத்தி மாகாண சபைகளுக்கான தேர்தலை நடத்தாது இழுத்தடிக்கவே முடிந்தளவுக்கு முயற்சிப்பார்கள். எனவே மாகாணசபைகளுக்கான தேர்தல் நடக்கும் ஆனால் நடக்காது என்ற இழுபறி நிலையையே அநுர அரசு தொடரும் என்ற எதிர்வு கூறல்கள் முன்வைக்கப்பட்டன.

இதனை நிரூபிக்கும் வகையில்தான் தற்போது மாகாணசபைத் தேர்தலை எந்த முறையில் நடத்துவது என்று ஆராய்ந்து விதப்புரைகள் மற்றும் அறிக்கைகளை முன்வைப்பதற்காக நியமிக்க உத்தேசிக்கப்பட்டுள்ள பாராளுமன்ற தெரிவுக் குழுவுக்கு ஆளும் தரப்பில் பெயர் முன்மொழிவுகளை செய்வதில் இனவாதிகளான ஜே.வி.பி.யினருக்கும் அவர்களின் பங்காளிகளான மென்போக்குவாதிகளான தேசியமக்கள் சக்தியினருக்கும் இடையில் இழுபறி நிலை ஏற்பட்டுள்ளதால் பாராளுமன்ற தெரிவுக்குழு நியமனம் தொடர்ந்து தாமதமாகும் என தகவல்கள் வெளிவந்துள்ளன.

ஆளும் மற்றும் எதிர்க்கட்சியின் உறுப்பினர்கள் உள்ளடங்களாக 12 பேரை நியமிக்க வேண்டும் என்று யோசனை முன்வைக்கப்பட்டுள்ள நிலையில் எதிர்க்கட்சிகளின் பிரதிநிதிகளாக இலங்கைத் தமிழரசுக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் சாணக்கியன் இராசமாணிக்கம், தமிழ் முற்போக்கு கூட்டணியின் தலைவர் மனோ கணேசன், ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ 'ின் பொதுச்செயலாளர் நிசாம் காரியப்பர் மற்றும் ஐக்கிய மக்கள் சக்தியின் பொதுச்செயலாளர் ரஞ்சித் மத்தும பண்டார ஆகியோரின் பெயர்களை எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச சபாநாயகருக்கு பரிந்துரைத்துள்ளார்.

ஆளுங்கட்சியான தேசிய மக்கள் சக்தியில் இருந்து 8 பேர் நியமிக்கப்பட வேண்டும் என்று குறிப்பிடப்பட்டுள்ள நிலையில் இதுவரையில் ஆளும் தரப்பினர் பெயர் பரிந்துரை சபாநாயகருக்கு முன்வைக்கப்படவில்லை. இந்த குழுவுக்கு ஜே.வி.பி.யின் (மக்கள் விடுதலை முன்னணி) இனவாத கொள்கையுடைவர்களை நியமிப்பதா அல்லது தேசிய மக்கள் சக்தியின் முற்போக்கான கொள்கையுடையவர்களை நியமிப்பதா என்பதில் அரசாங்கத்துக்குள் கருத்து வேறுபாடுகள் தோற்றம் பெற்றுள்ளது.

ஜனாதிபதியால் குறிப்பிடப்பட்ட பெயர்களுக்கும், அமைச்சர் பிமல் ரத்நாயக்க குறிப்பிட்ட பெயர்களுக்கும் இடையில் பரஸ்பர வேறுபாடுகள் காணப்படுவதாக குறிப்பிடப்படுகிறது. மாகாண சபை முறைமைக்கு எதிரான பழமையான கொள்கை உடையவர்களை இந்த தெரிவுக்குழுவுக்கு நியமித்தால் முரண்பாடான நிலைமை ஏற்படும். அது அரசாங்கத்துக்கு நெருக்கடியை தோற்றுவிக்கும் என்று தேசிய மக்கள் சக்தியின் உறுப்பினர்கள் தமது நிலைப்பாட்டை வெளிப்படுத்தியுள்ளனர். பாராளுமன்ற தெரிவுக்குழுவுக்கான நியமனம் கடந்த மாதம் 23 ஆம்திகதி இடம்பெற்றிருக்க வேண்டிய நிலையில் ஆளும் தரப்பின் பெயர் பரிந்துரையில் இழுபறி நிலை காணப்படுவதால் தெரிவுக்குழு நியமனம் தொடர்ந்து தாமதமாகியுள்ளது.

அத்துடன் ரணில் கைது, ராஜபக்சக்கள் மீதான பழிவாங்கல்கள். அரசாங்கம், அமைச்சர்கள் மீதான குற்றச்சாட்டுக்கள், சபாநாயகரின் தன்னிச்சையான செயற்பாடுகள், அரசின் சர்வாதிகாரப் போக்கு, வடக்கு, கிழக்கு மாகாணங்களில் தொடரும் தமிழர் விரோத செயற்பாடுகள், சிங்களக் குடியேற்றங்கள் போன்றவற்றினால் ஜே.வி.பி.-தேசிய மக்கள் சக்தி அரசுக்கு எதிரான உணர்வலைகள் அதிகரித்துள்ளது. எனவே டித்வா புயல் ஏற்படுத்திய பேரழிவுகளை காரணம் காட்டியும் மாகாணசபைத் தேர்தலை எந்த முறையில் நடத்துவது என்று ஆராய்ந்து விதப்புரைகள் மற்றும் அறிக்கைகளை முன்வைப்பதற்காக நியமிக்க உத்தேசிக்கப்பட்டுள்ள பாராளுமன்ற தெரிவுக் குழுவுக்கான நியமனங்களை இழுத்தடிப்பு செய்தும் மாகாணசபைகளுக்கான தேர்தலை அநுரகுமார அரசு இவ்வருடமும் நடத்தப்போவதில்லை என்பது பெரும்பாலும் உறுதியாகியுள்ளது.

இலங்கை செய்திகள் Sri Lanka News

# அரசாங்கத்தின் புதிய பயங்கரவாத எதிர்ப்பு மசோதாவில் அடங்கியுள்ள "பயங்கரம்" குறித்த தகவல்கள் வெளியாகின!

## இந்தச் சட்டத்தின் மூலம் பொலிஸார் என்னும் காவல் நாய்களுக்கு எல்லையற்ற அதிகாரம் வழங்கப்பட்டுள்ளதாகவும் சுட்டிக்காட்டப்பெற்றுள்ளது.

அதிகாரத்தைப் பெற்றுக்கொள்வதற்கு முன்னர் மக்களுக்கு வழங்கிய வாக்குறுதியின் படி, பயங்கரவாதத் தடைச் சட்டத்தை நீக்குவது மட்டுமே போதுமானது எனவும், அதற்கு பதிலாக புதிய சட்டம் எவ்விதத்திலும் அவசியமில்லை எனவும் வலியுறுத்தும் சட்ட நிபுணர் ஒருவர், தேசிய மக்கள் சக்தி அரசாங்கத்தின் "பயங்கரவாதத்திலிருந்து அரசைப் பாதுகாக்கும் சட்டமூலத்தின்" "அபாயகரமான" தன்மையை விளக்கியுள்ளார்.

பயங்கரவாதத்திலிருந்து அரசைப் பாதுகாக்கும் சட்டமூலம் தொடர்பாக சட்டத்திற்கும் கொள்கைகளுக்குமான யாழ்ப்பாண நிலையத்தின் கலாநிதி குமாரவடிவேல் குருபரன் அண்மையில் யாழ்ப்பாணத்தில் நடந்த கலந்தாய்வு அமர்வொன்றில் இந்தச் சட்டத்தின் மூலம் பொலிஸ் உத்தியோகத்தர்களுக்கு பகிரங்கக் கூட்டங்களைக் கலைப்பதற்கான எல்லையற்ற அதிகாரம் வழங்கப்பட்டுள்ளதாகச் சுட்டிக்காட்டியுள்ளார்.

"51 ஆவது பிரிவில் என்ன சொல்லப்பட்டிருக்கிறது? பொலிஸ் உத்தியோகத்தர் ஒருவருக்கு ஏதேனும் ஒரு தகவல் கிடைத்தால்-அங்கு தெளிவான, உடனடி ஆபத்து இருப்பதாக பொலிசார் கருதினால், அவர்களால் எந்தவொரு பொருளையும் அகற்ற முடியும் வாகனத்தை அகற்ற முடியும். கப்பல் அல்லது விமானத்தைக் கூட அகற்ற முடியும். (e) பகுதியைப் பாருங்கள், எந்த இடத்திலும் ஒன்றுகூட வேண்டாம் என உத்தரவிட பொலிசாரால் முடியும்."

பொலிஸ் உத்தியோகத்தர்களுக்கு சட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்குத் தேவையான அதிகாரம் பொலிஸ் கட்டளைச் சட்டத்தின் மூலம் ஏற்கனவே வழங்கப்பட்டுள்ள நிலையில் "பயங்கரவாதத்திலிருந்து அரசைப் பாதுகாக்கும் சட்டமூலத்தின்" மூலம் அவர்களுக்கு இவ்வாறு எல்லையற்ற அதிகாரம் வழங்கப்பட்டிருக்கிறது என கலாநிதி குமாரவடிவேல் குருபரன் சுட்டிக்காட்டுகிறார்.

"இது ஒன்றுகூடும் சுதந்திரம் மற்றும் போராட்டத்தில் ஈடுபடுவதற்கான அடிப்படை உரிமைகளுக்கு எதிரானது என்றே நான் நினைக்கிறேன். ஒரு இடத்தில் ஒன்று கூடினால் "பயங்கரவாதம்" என்ற விடயத்தின் கீழ் குற்றமொன்று நிகழக்கூடும் எனக்கருதி பொலிஸ் உத்தியோகத்தர் ஒருவர் இந்த அறிவுறுத்தல்களை வழங்கி அதனைத் தடுக்க முடியும். அடிப்படை உரிமைகளுடன் ஒப்பிடுகையில் இந்தப் பிரிவு முற்றிலும் - அடுத்ததையும் பாருங்கள்: ஏதேனும் கூட்டத்தை நடத்த வேண்டாம் என்பது... அக்கூட்டத்தில் குற்றமொன்று நிகழக்கூடும் என அறிவித்தல் விடுத்து, அக்கூட்டத்தை நிறுத்த பொலிஸ் உத்தியோகத்தர் ஒருவரால் முடியும். பொலிசாருக்கு ஏன் இவ்வளவு அதிகாரம் வழங்கப்படுகிறது என்று எனக்குப் புரியவில்லை. இவ்வாறான மேலதிக அதிகாரங்கள் எதற்கு? ஏற்கனவே பொலிஸ் கட்டளைச் சட்டத்தில் இவை உள்ளன."

எதிர்ப்புப் போராட்டமொன்றில் அல்லது ஊர்வலமொன்றில் வன்முறை ஏற்படக்கூடும் என நியாயமான சந்தேகம் ஏற்படும் பட்சத்தில், அதனைத் தடுப்பதற்குத் தேவையான நடவடிக்கைகளை எடுக்க பொலிஸ் உத்தியோகத்தர்களுக்குத் தேவயான சட்ட ஏற்பாடுகள் உள்ள நிலையில், கூட்டமொன்று ஆரம்பிக்கப்படுவதற்கு முன்னரே அதனை நிறுத்தும் அதிகாரங்களை பொலிஸாருக்கு வழங்குவதன் நோக்கம் என்னவென்று சட்டத்தரணி கேள்வி எழுப்பியிருந்தார்.

"பொலிஸ் கட்டளைச் சட்டத்தின் 52 ஆவது பிரிவின் கீழ் என நினைக்கிறேன்: எதிர்ப்புப் போராட்டம் அல்லது ஊர்வலம் ஒன்றின் போது வன்முறை ஏற்படக்கூடும் எனத் தோன்றினால் நடவடிக்கை எடுப்பதற்கான அதிகாரங்கள் ஏற்கனவே அவர்களுக்கு வழங்கப்பட்டுள்ளன. அது இருக்கும் போது, கூட்டமொன்றை நடத்துவதற்கு முன்னரே அதனைத் தடுப்பதற்கு பொலிசாருக்கு மேலதிக அதிகாரங்கள் வழங்கப்படுவது ஏன்?"

தனிநபர்களின் தொலைபேசி அழைப்புகள் தொடர்பான தகவல்களை நீதிமன்ற உத்தரவின்றி சட்டவிரோதமான முறையில் பெற்றுக்கொள்ளும் நடவடிக்கைகளை பாதுகாப்புப் பிரிவினர் தற்போதும் முன்னெடுத்து வருவதை நினைவூட்டிய கலாநிதி குமாரவடிவேல் குருபரன், "பயங்கரவாதத்திலிருந்து அரசைப் பாதுகாக்கும் சட்டமூலத்தின்" ஊடாக அந்தச் செயலை சட்டபூர்வமாக்க அரசாங்கம் தயாராகி வரும் விதத்தையும் சுட்டிக்காட்டியிருந்தார்.

"51 ஆவது பிரிவு மிகவும் சிக்கலானது. இப்போது எமது தொலைபேசிகளை பொலிசாரால் ஒட்டுக்கேட்க முடியுமா? எமது தொலைபேசிப் பதிவுகளை எடுக்க முடியுமா? நான் அறிந்த வகையில் நீதிமன்ற உத்தரவின்றி அவ்வாறு செய்ய முடியாது. ஆனால் இங்கு அது தாராளமாக நடக்கிறது. டயலொக் முதல் மொபிடெல் வரை, HNB முதல் மக்கள் வங்கி வரை அனைவரும் பொலிசார் கேட்டவுடன் அவற்றை வழங்கத் தயாராக இருக்கிறார்கள். இப்போது இது சட்டத்திற்குள் கொண்டுவரப்படுகிறது."

ஒரு வங்கி அல்லது தொலைபேசி நிறுவனம் தனிநபர்களின் தகவல்களை நீதிமன்ற அனுமதியின்றி பொலிசாருக்கு வழங்கினால், அந்த நிறுவனத்தும்கு எதிராக நீதிமன்ற நடவடிக்கை எடுக்கும் உரிமை பொதுமக்களுக்கு இருக்க வேண்டும் என கலாநிதி குமாரவடிவேல் குருபரன் வலியுறுத்துகிறார்.

"நீங்கள் இந்தத் தகவல்களைக் கோருவதாயின் நீதவானிடம் உத்தரவு பெற்றே அதனைச் செய்ய வேண்டும். இது அத்தியாவசியமான ஒன்று என நான் கருதுகிறேன். ஏனென்றால் இனிமேல் எங்கள் தொலைபேசித் தரவுகள் அல்லது வங்கி விபரங்களை நீதிமன்ற உத்தரவின்றி வங்கி அல்லது தொலைபேசி நிறுவனம் வழங்கினால், எங்களால் அந்த நிறுவனத்துக்கு எதிராக நடவடிக்கை எடுக்கக் கூடியதாக இருக்க வேண்டும். எனவே பொலிசார் வந்தால் "நீதிமன்ற உத்தரவைத் தாருங்கள், அப்போது தருகிறேன்" என சொல்ல வேண்டும்."

தேசிய மக்கள் சக்தி அரசாங்கத்தினால் தயாரிக்கப்பட்டுள்ள "பயங்கரவாதத்திலிருந்து அரசைப் பாதுகாக்கும் சட்டமூலத்தில்" ஒப்புதல் வாக்குமூலங்கள் தொடர்பிலான சாதகமான விடயம் ஒன்றையும் சட்டத்திற்கும் கொள்கைகளுக்குமான யாழ்ப்பாண கற்கை நிலையனத்தின் கலாநிதி குமாரவடிவேல் குருபரன் அங்கு சுட்டிக்காட்டியிருந்தார்.

"முன்னர் ASP தரத்துக்கு குறையாத உத்தியோகத்தர் ஒருவரிடம் வழங்கப்படும் வாக்குமூலங்கள் ஏற்றுக்கொள்ளப்பட்டன என்றால், இப்போது அது நீதவான் முன்னிலையில் என மாற்றப்பட்டுள்ளது. அது ஒரு முன்னேற்றம் எனறு நான் நினைக்கிறேன். ஆனால் இப்போதும் எனது கருத்து என்னவென்றால், வாக்குமூலங்கள் குறித்து தற்போதுள்ள குற்றவியல் நடைமுறைச் சட்டக்கோவையின் ஏற்பாடுகள் போதுமானவை என்பதாகும். திட்டமிட்டுப் பெறப்படும் வாக்குமூலங்களை எமது நாட்டின் சாதாரண சட்டத்தின் கீழ் பயன்படுத்த முடியாது. சட்டம் அங்கேயே இருக்க வேண்டும். இந்த ஏற்பாட்டின் மூலம் ஒரு வாக்குமூலம் நீதவான் முன்னிலையில் வழங்கப்பட்டால் மட்டுமே அது செல்லுபடியாகும் எனக் கூறப்பட்டிருந்தாலும், சாதாரண சட்டமானது வாக்குமூலங்கள் சாட்சியங்களாக ஏற்றுக்கொள்ளப்பட முடியாதவை (inadmissible) என்றே கூறுகிறது. ஏனென்றால் நான் ஏன் அப்படிச் சொல்கிறேன் என்று உங்களுக்கும் தெரியும். அதாவது, அவற்றை பலவந்தமாகப் பெறப்பட முடியும் என்பதால் ஆகும்."

லாநிதி குருபரன், "பயங்கரவாதத்திலிருந்து அரசைப் பாதுகாக்கும் சட்டமூலம்" தொடர்பாக யாழ்ப்பாணத்தில் அளித்த விளக்கத்தில் நாடாளுமன்றத்தில் அவசரகாலச் சட்டத்தைப் பிரகடனப்படுத்தி, நாடாளுமன்ற அனுமதியைப் பெற்ற பின்பே அதனை நீடிக்க முடியும் என்கிற தற்போது நடைமுறையிலுள்ள பாதுகாப்பு நடைமுறைகளை நீக்கி, "பயங்கரவாதத்திலிருந்து அரசைப் பாதுகாக்கும் சட்டத்தின் கீழ் நிரந்தர அவசரகால நிலையை உருவாக்கவதற்கான ஆயத்தமும் தென்படுவதாகச் சுட்டிக்காட்டினார்."

"ஊரடங்குச் சட்டத்தை அமுல்படுத்தவும் கட்டுப்பாடுகளை விதிக்கவும் அவசரகாலச் சட்டத்தின் கீழ் சாதாரணமாக காணப்படும் அனைத்து அதிகாரங்களும் இங்கு வழங்கப்பட்டுள்ளன. அவை ஒவ்வொன்றும் மிகவும் சிக்கலானவை. நாடாளுமன்றத்தில் அவசரகாலச் சட்டத்தைப் பிரகடனப்படுத்தி, நாடாளுமன்ற அனுமதியைப் பெற்று அதனை நீடிக்க வேண்டும் என்கிற பாதுகாப்பு நடைமுறைகளை நீக்கி, இந்தச் சட்டத்தின் கீழ் நிரந்தர அவசரகால நிலைமையை உருவாக்குவது போலவே இந்தப்பிரிவுகள் எனக்குத் தெரிகின்றன. ஏனென்றால் அவசரகால நிலை இல்லாத ஒரு நேரத்தில் இவ்வாறான அதிகாரங்களை பொலிசாருக்கும், இராணுவத்தினருக்கும் மற்றும் அனைவருக்கும் வழங்குவது முற்றிலும் தவறானதாகும்.

ஜனாதிபதி அநுர குமார திசாநாயக்கவின் அரசாங்கத்தினால் புதிதாக வரைவு செய்யப்பட்டு (http://moj.gov.lk) என்ற இணையதளத்தில் சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கிலம் ஆகிய மும்மொழிகளிலும் வெளியிடப்பட்டுள்ள "பயங்கரவாதத்திலிருந்து அரசைப் பாதுகாக்கும் சட்டமூலம்" தொடர்பில் பெப்ரவரி 28 ஆம் திகதி வரை பொதுமக்கள் தமது கருத்துகளை முன்வைக்க முடியும் எனத் தெரிவித்துள்ள நீதி மற்றும் தேசிய ஒருமைப்பாட்டு அமைச்சர் சட்டத்தரணி ஹர்ஷண நானயக்கார, அவற்றை மிக உன்னிப்பாக அவதானித்து அரசாங்கத்திற்கு ஒத்துழைப்பு வழங்குமாறு நாட்டின் பிரஜைகளிடம் கோரிக்கை விடுத்துள்ளார்.

# அமெரிக்கா – வெனிசுலா இடையிலான தூதரக உறவு தொடர்ந்து நீடிக்குமா?



தென் அமெரிக்க நாடான வெனிசுலாவில் நீண்ட காலமாக அரசியல் குழப்பம் நீடித்து வருகிறது. அந்நாட்டின் அதிபராக இருந்த நிக்கோலஸ் மதுரோ பதவியில் இருந்து அகற்றப்பட்டதை அடுத்து, டெல்சி ரோட்ரிக்ஸ் இடைக்கால அதிபராகப் பொறுப்பேற்றுள்ளார். இந்நிலையில், வெனிசுலா மற்றும் அமெரிக்கா இடையே கடந்த 2019-ம் ஆண்டு முதல் துண்டிக்கப்பட்டிருந்த தூதரக உறவுகளை மீண்டும் புதுப்பிக்கும் வகையில் ஒரு முக்கிய முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது. வெனிசுலா தலைநகர் கரகாசில் உள்ள அதிபர் மாளிகையில், அமெரிக்க தூதர் லாரா டோகு மற்றும் இடைக்கால அதிபர் டெல்சி ரோட்ரிக்ஸ் ஆகியோர் நேரில் சந்தித்துப் பேசினர். இந்த சந்திப்பின் போது, இரு நாடுகளுக்கும் இடையே வர்த்தகம் மற்றும் எரிசக்தி (கச்சா எண்ணெய்) குறித்து ஆலோசிக்கப்பட்டது.

குறிப்பாக, வெனிசுலாவின் பொருளாதாரத்தை மேம்படுத்தவும், அங்கு அமைதியான முறையில் ஆட்சி மாற்றத்தை உறுதி செய்யவும் அமெரிக்கா ஆதரவு தெரிவித்துள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

# லிபியா முன்னாள் அதிபர் கடாபியின் மகன் படுகொலை



லிபியாவின் முன்னாள் அதிபர் மும்மர் கடாபி. இவர் லிபியாவை 42 ஆண்டுகள் ஆட்சி செய்தார். இதையடுத்து, கடந்த 2011ம் ஆண்டு லிபியாவில் நடந்த மக்கள் போராட்டத்தால் கடாபியின் ஆட்சி முடிவுக்கு வந்தது. அவர் போராட்டக்காரர்களால் கொல்லப்பட்டார். இதனிடையே, முகமது கடாபியின் 2வது மகன் சைப் அல் இஸ்லாம் (வயது 53). கடாபி கொல்லப்பட்டப்பின்னர் லிபியாவில் ஆட்சி மாற்றம் ஏற்பட்டது. அப்போது மனித குலத்திற்கு எதிரான குற்றங்களை செய்ததற்காக சைப் அல் இஸ்லாமிற்கு லிபியா நீதிமன்றம் தூக்குதண்டனை விதித்தது. ஆனால், தண்டனை நிறைவேற்றப்படவில்லை. சைப் அல் இஸ்லாமி லிபியா தேர்தலில் போட்டியிடுவேன் என்று 2021ம் ஆண்டு அறிவித்தார். ஆனால் தேர்தல் நடத்தப்படவில்லை. இதையடுத்து, லிபியாவின் சிண்டான் நகரில் சைப் அல் இஸ்லாம் வசித்து வந்தார். அவரது பாதுகாப்பிற்காக பாதுகாவலர்கள் நியமிக்கப்பட்டிருந்தனர். இந்நிலையில், சைப் அல் இஸ்லாம் நேற்று வீட்டில் வைத்து மர்ம நபர்களால் படுகொலை செய்யப்பட்டார். சிண்டான் நகரில் சைப் அல் இஸ்லாம் வசித்து வந்த வீட்டிற்குள் நேற்று மதியம் 4 பேர் கொண்ட மர்ம கும்பல் நுழைந்துள்ளது. அந்த கும்பல் வீட்டிற்குள் இருந்த சைப் அல் இஸ்லாமை துப்பாக்கியால் சரமாரியாக சுட்டு படுகொலை செய்துவிட்டு அங்கிருந்து தப்பிச்சென்றது. இந்த சம்பவம் லிபியாவில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

# ஈழத்துத் திருக்கோயில்கள் (வரலாறும் மரபும்)

வரலாறும் மரபும் 1182



மேலதிக தகவல்களுக்கு:
திருமதி. வசந்தா நடராசன் B.A.
(416) 332-0269
vasantha@rogers.com



## சொக்கவளவு சோதிவிநாயகர் ஆலயம்
### குப்பிளான், யாழ்ப்பாணம்

1998 ஆம் ஆண்டு இவ்வாலயம் பாலஸ்தாபனம் செய்யப்பட்டது. திரு.ச. பொன்னம்பலம் அவர்களைத் தொடர்ந்து திரு. தம்பு தர்மலிங்கம் அவர்கள் பரிபாலனசபைத் தலைவராக 1998 ஆம் ஆண்டு தெரிவுசெய்யப்பட்டார். இவரைத் தலைவராகக் கொண்ட பரிபாலனசபையின் ஊக்கம்காரணமாக ஆலயத் திருப்பணிகள் பல சிறப்பாக நிறைவேற்றப்பட்டது இக்காலப்பகுதியில் ஆலயக் கருவறை பழுது பார்க்கப்பட்டதோடு, வசந்த மண்டப அலங்கரிப்புஆலயத்தின் மேற்குப் பக்கத்தில் கொட்டகைக்கு மேல் திருத்தவேலைகள் செய்யப்பட்டதோடு ஓடுகளால் வேயப்பட்டது. அத்தோடு சந்தானகோபாலர், சண்டீசுவர மூர்த்திகளுக்கு தனித்தனி கருவறைகள் அமைக்கப்பட்டது. ஆலயத்திற்குரிய மூலகம், யானை போன்ற வாகனங்களும் புதிதாகச் செய்விக்கப்பட்டதோடு. ஆலயம்பூராவும் வர்ணம் தீட்டப்பட்டது. இவ்வாறான பணிகள் விரைந்து நிறைவேறுவதற்க சொக்கவளவு சோதிவிநாயகப்பெருமானின் அடியவாகள் வாரிவழங்கிய குறிப்பிடத்தக்கது. இக்காலத்திலிருந்நத பரிபாலனசபையினா தமது சொந்தப்பணத்திலே ஆலயத்தின் வடக்கு வீதியைப் பரவலாக்கியும், ஆலயத்திற்கு அருகாமையிலுள்ள ஒரு பகுதி ஆதனத்தை விலைக்கு வாங்கியும் அதனை ஆலயத்திற்குத் தர்மசாசனமாக்கி ஆலயதின் வளர்ச்சிக்கு உதவியுள்ளனர்.

இவ்வாலயத்தின் திருமுறை ஓதுவாராகத் திருப்பணி புரிந்த திரு. அப்பபர்பிள்ளை காசிப்பிள்ளை அவர்கள் இறைவனடி சேர்ந்த பின்னர். அவரது துணைவியார் ஓம் பிரணவ என்னம் தார்மீக மந்திரத்தை தங்கச் சங்கிலியிலே வடித்து விநாயகப் பெருமானுக்கு அர்ப்பணித்தள்ளார். அவ்வாறே சந்தான கோபாலருக்காள சந்நிதியை இலண்டனில் வசித்த திரு. ந. செல்லத்துரை அவர்களும், சண்டேசுவரருக்கான சந்நிதியை திரு.வைத்திலிங்கம் தம்பிராசா அவர்களின் ஞாபகார்த்தமாக, இவரது பேரனாகிய திரு. மகாலிங்கம் அன்னராசா அவர்களும் அமைக்க உதவியமை குறிப்பிடத்தக்கது.சொக்கவளவு சோதிவிநாயகப்பெருமான் உலாவருவதற்குரிய வாகனங்களையும் அன்பர்கள் செய்து உதவியுள்ளனர். மூசிக வாகனத்தை திரு.சுப்பையா நடராசா அவர்களும், யானை வாகனத்தினை இராசரத்தினம் பவளம் அவர்களும் செய்து வழங்கியுள்ளார்கள். ஆலய உள்வீதி மேற்குப் பக்க நிலவேலையை திரு.சி.

சொக்கலிங்கம் அவர்கள் புதிதாக அமைக்க உதவியுள்ளார். நாட்டு நிலைமை காரணமாக புலம்பெயாந்து வாழும் இவ்வூர் மக்கள் தொடர்ந்தும் இவ்வாலய வளர்ச்சிக்கு உதவி வருகின்றனர். இவ்வாறான பணிகளின் பின் 1999 ஆம் ஆண்டு இவ்வாலய நவகண்ட மகா கும்பாபிசேகம் சிறப்பாக நிறைவேறிது. பெரஞ்சாந்தி என்னும் இவ்விழா சிறப்பாக நிறைவேற ஆசிரியர் வைத்தியர் சுப்பையா அவாகளின் பேரன், திரு. நடராசா சிறிஸ்கந்தராசா அவர்கள் லண்டனில் இருந்து நிதியுதவி செய்தமை குறிப்பிடத்தக்கது. அத்தோடு மேலும் பல ஆலயத்திருப்பணிகள் சிறப்பாக நிறைவேறவும் இவர் அரும்பணியாற்றியுள்ளார்.

இவ்வூரின் அறிஞராக விளங்கிய காசிவாசி செந்திநாதையர் அவாகளின் ஞாபகார்த்தமாக மணிமண்டபம் ஒன்றை அமைத்து அவரது வாழ்க்கை வரலாறு பற்றி நூலொன்றினையும் வெளியிட்டமை தமிழுலகத்திற்கக் கிடைத்த பெரும்பேறாகவே கருதவேண்டும். இதனைத் தொடர்ந்த சட்டத்தரணி திரு கந்தப்பு வைரவநாதன் தலைமையில் உருவான சைவமகா சபை திரு. சிவசுப்ரமணியம் முத்துலிங்கம் அவர்கள் மேற்கொண்ட முயற்சியடன், ஆசிரியர் சிவ மகாலிங்கம் அவர்களின் வழிநடத்தலில் அனைவரும் ஒன்றுபட்டு , சித்தாந்த ஞானபானு காசிவாசி செந்திநாதையர் அவர்களின் உருவச்சிலையை 1983 ஆம் ஆண்டு சொக்கவளவு சோதிவிநாயகப்பெருமான் ஆலய முன்றலில் நிறுவினர். இவ்வாறான பல பணிகள் நிறைவேற்றப்பட்டதோடு தற்காலத்திலும் ஆலயத்தில் பல பணிகள் நிறைவேற்றப்பட்டு அருளும், புகழும் கொண்ட ஆலயமாக குப்பிளான் சொக்கவளவு சோதி விநாயகர் ஆலயம் திகழ்கின்றது.

வளரும்..

---

இலங்கை செய்திகள் Sri Lanka News

## சுதந்திர தினத்தை கரிநாளாக அனுஷ்டிக்க யாழ்ப்பாண பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் அழைப்பு!

பு. கஜிந்தன்



புதன்கிழமை 4ஆம் திகதி இலங்கையின் சுதந்திர தினம் கொண்டாடப்பட உள்ளது. அந்த நாளை கரி நாளாக அனுஷ்டிக்குமாறு அனைத்து தமிழ் பேசுகின்ற மக்களையும் அழைத்து நிப்பதாக யாரழ்ப்பாண பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் தெரிவித்துள்ளது.

யாழ். பல்கலைக்கழக கலைப்பீட மாணவர் ஒன்றியத்தின் செயலாளர் அ.அபிஷேக் இந்த அழைப்பினை விடுத்துள்ளார். இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில், யாழ்ப்பாண பல்கலைக்கழக மாணவர் ஒன்றியமும், வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோர் சங்கமும் இணைந்து இந்த கறுப்பு நாள் போராட்டத்தினை முன்னெடுக்கவுள்ளோம். அந்தவகையில் 04ஆம் திகதி வடக்கில் கிளிநொச்சியிலும், கிழக்கில் மட்டக்களப்பிலும் காலை 10.00 மணியளவில் இந்த போராட்டம் முன்னெடுக்கப்பட உள்ளது.

எமது உரிமைகளை பெற்றுக் கொள்ளக்கூடிய ஒரே வழி கல்வியாக தன் காணப்படுகிறது. எங்களது மக்களின் நலனுக்காகவே நாங்கள் பல்கலைக்கழகம் சென்றோம். ஆனால் தற்போதைய காலகட்டத்தில் நாங்கள் என்ன காரணத்திற்காக பல்கலைக்கழகம் சென்றோமோ அந்த காரணம் தற்போது பின்னோக்கி செல்லப்படுகிறது.

ஒரு காலகட்டத்தில் தமக்கான நிலம் வேண்டும் என்று போராடியவர்கள் தான் தமிழ் மக்கள். இன்றைய அரசாங்கம் வடக்கு - கிழக்கு மக்களை இணைத்து ஒன்றாக பயணிப்போம் என்று கூறினாலும் தமிழர் பகுதிகளில் ஆக்கிரமிப்புகளை செய்து கொண்டே இருக்கின்றனர். உங்களது ஆக்கிரமிப்புகளை எந்த அளவிற்கு விரைவாக நிறுத்துகின்றீர்களோ அந்த அளவிற்கு தான் இந்த நாட்டினை ஒன்றாக மாற்ற முடியும்.

அரசாங்கம் சொல்வது ஒன்று செய்வதொன்று. இவ்வாறான சூழ்நிலையில் மீண்டும் இளைஞர்கள் அரசாங்கத்திற்கு எதிரான நிலையில் செல்லலாம். எனவே அரசாங்கம் அனைத்து மக்களையும் சம கண்ணோட்டத்துடன் பார்க்க வேண்டும் என்றார்.

## வடக்கில் சுதந்திர தினத்தை கறுப்பு நாளாக அனுஷ்டிக்கும் போராட்டத்துக்கு ரெலோ கட்சியும் ஆதரவளிக்கின்றதாம்!




சுதந்திர தினத்தை கறுப்பு நாளாக அனுஷ்டிக்கும் போராட்டத்துக்கு ரெலோ கட்சியும் ஆதரவு தெரிவிப்பதாக அந்த கட்சியின் யாழ்ப்பாணம் மாவட்ட அமைப்பாளர் சபா குகதாஸ் தெரிவித்துள்ளார்.

3ம் திகதி செவ்வாய்க்கிழமை அன்றையதினம் அவரது இல்லத்தில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கருத்து தெரிவிக்கையில் அவர் இவ்வாறு தெரிவித்தார். இது குறித்து மேலும் தெரியவருகையில், பெப்ரவரி 4ஆம் திகதி இலங்கையின் சுதந்திர தினம் என செல்லப்படுகிறது. உண்மையிலேயே இலங்கை சுதந்திரமடைந்து 76 ஆண்டுகள் கடந்தாலும் தமிழ் மக்களை பொறுத்தவரையில் சுதந்திரம் என்பது பேச்சளவில் உள்ள ஒரு விடயமாகத்தான் பார்க்கப்படுகிறது.

இலங்கை தீவில் சிங்கள மக்களுக்கு மாத்திரமே அந்த சுதந்திரம் கிடைக்கப்பெற்றது. ஏனைய இனங்களுக்கு அந்த சுதந்திர காற்று என்பது சரியாக வீசவில்லை. அடக்குமுறைக்குள் வாழ்கின்ற இனமாகவே ஈழத் தமிழர்கள் தொடர்ந்தும் இருக்கின்றார்கள்.

சுதந்திர தினத்தை கரி நாளாக அனுஷ்டிக்கின்றதன் நோக்கமாக, தமிழ் மக்களாகிய நாம், இதுவரை சுதந்திரத்தை அனுபவிக்கவில்லை என்ற விடயத்தை அனைவருக்கும் தெரிவிக்கவே முயல்கின்றோம்.

மாறி மாறி வந்த அரசாங்கங்கள் தமிழ் மக்களை நம்ப வைத்து தமது நிகழ்ச்சி நிரல்களை நடத்திச் செல்வது தான் அவர்களுடைய நோக்கமாக இருக்கின்றது. அதுபோல தான் அனுர அரசும் இனவாதமற்ற, மதவாதம் அற்ற நாட்டை கட்டி எழுப்புவதாகவும் தாங்களது ஆட்சியில் இனவாதம் மதவாதம் என்பதற்கு இடமில்லை என்ற வகையிலும் போலிப் பிரச்சாரங்களை செய்கின்றனர். ஆனால் யதார்த்த நிகழ்வுகள் அவ்வாறு இல்லை என்று அவரது அறிக்கையில் தெரிவிக்கப்பெற்றுள்ளது.



# பலுசிஸ்தானில் போராட்டக்காரர்களால் ராணுவ வீரர்கள் உடல் ரீதியாக பலவீனமாக உள்ளனர் என்கிறார் பாகிஸ்தான் பாதுகாப்பு அமைச்சர்

உலக செய்திகள்
World News



பாகிஸ்தானின் தென்மேற்கு மாகாணமான பலுசிஸ்தானில் தனி நாடு கோரி அரசுக்கு எதிராக பலூச் விடுதலை ராணுவம் (பி.எல்.ஏ) என்ற அமைப்பு செயல்பட்டு வருகிறது.

இதற்கிடையே பலுசிஸ்தான் மாகாணம் முழுவதும் ராணுவம், போலீஸ் ஆகியோரை குறிவைத்து ஒரே நேரத்தில் பயங்கரவாதிகள் தாக்குதல் நடத்தினார்கள். இதில் பெண்கள் அடங்கிய தற்கொலைப்படை தாக்குதலும் நடத்தப்பட்டது. இந்த தாக்குதல்களில் 280 ராணுவ வீரர்கள் கொல்லப்பட்டதாக பலூச் விடுதலை ராணுவம் அமைப்பு தெரிவித்தது. மேலும் நுஷ்கி மாவட்டத்தில் முக்கிய நிலைகளைக் கைப்பற்றியதாகவும் தெரிவித்தனர். ஆனால் அரச எதிர்ப்பு போராட்டக்காரர்களின் தாக்குதலை முறியடித்ததாகவும், 177 போராட்டக்காரர்கள் கொல்லப்பட்டதாகவும் பாகிஸ்தான் ராணுவம் தெரிவித்தது. இந்தநிலையில் பாகிஸ்தான் பாதுகாப்புத்துறை அமைச்சர் குவாஜா ஆசிப் நாடாளுமன்றத்தில் உரையாற்றியபோது கூறியதாவது: பலுசிஸ்தானில் 12 இடங்களில் தாக்குதல் நடத்தி உள்ளனர். மாகாணம் முழுவதும் நடத்தப்பட்ட விரிவான பயங்கரவாத எதிர்ப்பு நடவடிக்கைகளில் 177 போராட்டக்காரர்கள் கொல்லப்பட்டனர். புவியியல் ரீதியாக பாகிஸ்தானின் 40 சதவீதத்திற்கும் அதிகமான பகுதியை பலுசிஸ்தான் கொண்டு உள்ளது. அதை கட்டுப்படுத்துவது என்பது மக்கள் தொகை நிறைந்த நகரத்தை கட்டுப்படுத்துவதை விட மிகவும் கடினமானது. அதற்குப் பெருமளவிலான படைகளை நிலை நிறுத்த வேண்டும். நமது துருப்புக்கள் அங்கு நிலை நிறுத்தப்பட்டு, போராட்டக்காரர்களுக்கு எதிரான நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளனர். ஆனால் இவ்வளவு பெரிய பகுதியை பாதுகாத்து ரோந்து செய்வதால் ராணுவ சிப்பாய்கள் உடல் ரீதியாக பலவீனமாக உள்ளனர். பெண்கள், குழந்தைகள் உள்பட பொதுமக்களைக் கொன்ற போராட்டக்காரர்களுடன் எந்தப் பேச்சுவார்த்தையும் நடத்தப்படாது. குற்றவாளிகளுக்கும் பிரிவினைவாதக் குழுக்களுக்கும் இடையே ஒரு தொடர்பு இருக்கிறது. குற்றக் கும்பல்கள் பலூச் விடுதலை ராணுவம் அமைப்பின் பெயரில் செயல்படுகின்றன. இவ்வாறு அவர் கூறினார்.

(5ம் பக்கம் தொடர்ச்சி)

# ரொறன்ரோ காவல்துறை அதிகாரிகள் 'Project South' வழக்கில் குற்றம் சாட்டப்பட்டமை: தனது வாழ்க்கையில் "மிகவும் கவலைக்குரியது" என்று தெரிவித்த காவல்துறைத் தலைவர்!

அந்தளவிற்கு "வேலியே பயிரை மேயும்" வகையில் குற்றவாளிகளாக மாறிய "அதிகாரிகள்" குற்றச் செயல்களில் ஈடுபட்டார்கள் என்பது வெளிச்சத்திற்கு வந்துள்ளது.

இதில் நீண்டகால கான்ஸ்டபிள்கள் மற்றும் சார்ஜென்ட்கள் மற்றும் இளைய அதிகாரிகள் உள்ளனர். இந்த விசாரணைகளின் அடிப்படையில் ரொறன்ரோ இளைஞர் சீர்திருத்தப் பணியாளரை கொலை செய்ய சதித்திட்டம் தீட்டப்பட்டதாகக் கூறப்படுவதற்கும், வாகனங்களை திருத்தம் செய்யும் இடங்களுக்கு எடுத்துச் செல்லும் இழுவை வண்டித் துறையுடன் தொடர்புகள் இருப்பதாகவும், சட்டவிரோத கஞ்சா மருந்தகங்களை ஆதரிப்பதற்காக லஞ்சம் வாங்க திட்டமிட்டதாகக் கூறப்படுவதற்கும் வழிவகுப்பட்டு மிகப் பெரிய அளிவிலான குற்றங்களை செய்வதற்கும் மற்றவர்கள் அந்த குற்றங்களில் ஈடுபடுவதற்கும் வழி வகுத்துள்ளதாக மேற்படி பொலிஸ் பிரிவுகளின் அதிகாரிகள் தங்கள் உரைகளின் போது தெரிவித்துள்ளார்கள்.

ரொறன்ரோ மாநகர காவல்துறைத் தலைவர் மைரான் டெம்கிவ் இந்த மாபெரும் குற்றச் செயல்கள் தொடர்பான விடயங்களை முதலில் அ அறிவிக்கத் தொடங்கினார். வழக்கை அழைத்தார் -அப்பொழுது அவர் "இதுவரை 27 கைதுகள் மற்றும் 170 குற்றச்சாட்டுகள் தொடர்பான விடயங்கள் வெளிச்சத்திற்கு வந்துள்ளன என்றும் குற்றச் செயல்களில் ஈடுபடுத்தப்பட்ட சாதாரண குற்றவாளிகள் மூலமாகவே கொலைச் செயல்கள் நடத்தப்பட்டன என்றும் அத்துடன் $600,000 க்கும் அதிகமான ரொக்கம் மற்றும் நான்கு சட்டவிரோத துப்பாக்கிகள் பறிமுதல் செய்யப்பட்டன -என்றும் இது அவரது 35 ஆண்டுகளுக்கும் மேலான வாழ்க்கையில் அவர் கண்ட மிகக் கடுமையானதும் நினைத்துப் பார்க்க முடியாததுமான குற்றவியல் வழக்குகள் என்றார்.

அவர் தொடர்ந்து உரையாற்றுகையில் "நான் தலைவராக இருந்த காலத்தில் இந்த துரோகம் நிறைந்த குற்றவியல் வழக்குகள் நிச்சயமாக மிகவும் கவலைக்குரிய மற்றும் மிக முக்கியமான தொழில்முறை தரநிலைகள் உள் விவகார விஷயமாகும், மேலும் ரொறன்ரோ மா நகரில் ஒரு காவல்துறை அதிகாரியாக எனக்கு அதிர்ச்சியை தரும் விடயம்," என்று அவர் யோர்க் காவல் தலைமையகத்தில் வியாழக்கிழமை 5ம் திகதி காலை செய்தியாளர் கூட்டத்தில் கூறினார்.

"இது அனைவருக்கும் ஒரு வேதனையான மற்றும் அமைதியற்ற தருணம்," என்றும் அவர் தயக்கத்துடன் கூறினார்.

கைது செய்யப்பட்டவர்களில் நான்கு போலீசார் ஊதியம் இல்லாமல் பதவிஇடைநீக்கத்தை எதிர்கொள்கின்றனர்.என்றும் அது இவ்வளவு பெரிய குற்றச்சாட்டுக்களுக்கு உரியவை என்பதற்கான காரணம் இதுதான் என்றார்.

விசாரணையை வழிநடத்திய அதிகாரிகளில் ஒருவரான யோர்க்,பிராந்திய காவல்துறைத் தலைவர் ஜிம் மேக்ஸ்வீன், இந்த செய்தியை "அதிர்ச்சியூட்டும் மற்றும் முற்றிலும் ஏற்றுக்கொள்ள முடியாதது" என்றும் கண்டிப்புடன் தெரிவித்தார்.

"காவல்துறையில் ஊழலுக்கு இடமில்லை," என்றும் அவர் உரத்துக் கூறினார்.

பொதுமக்களுக்காக பின்வரும் விடயங்களை நான் பகிர்ந்து கொள்கின்றேன் என்று கூறிய அவர் "இந்தச் செய்தியைப் பற்றி நீங்கள் அதிர்ச்சியடைந்து, குழப்பமடைந்து, கோபமாக உணரலாம் என்பது எனக்குத் தெரியும் ... இந்தக் கண்டிக்கத்தக்க குற்றங்களுக்குப் பொறுப்பான அனைவரையும் அடையாளம் கண்டு, கைது செய்து, வழக்குத் தொடர நாங்கள் உறுதியாக இருக்கிறோம் என்பதை நீங்கள் புரிந்து கொள்ளுங்கள். என்று தெரிவித்த அவர்

யோர்க் பிராந்தியத்தில் உள்ள வீட்டில் கொலை செய்ய சதித்திட்டம் தீட்டியதாக போலீசார் கூறியதை அடுத்து, ஜூன் 2025 இல் விசாரணை தொடங்கியது என்றும் ஆரம்பத்தில் இவ்வளவு கொடிதான குற்றச்செயல்களில் எமது பொலிஸ் அதிகாரிகள்? சம்பந்தப்பட்டுள்ளார்கள் என்பதை அறிந்த போது எமக்கு பதட்டமும் கோபமும் ஏற்பட்டது தவிர்க்க முடியாமல் இருந்தது என்றார்.

டொராண்டோ நிறுவனத்தில் பணிபுரிந்த "திருத்த மேலாண்மை உறுப்பினரை" குறிவைத்து கொலை செய்ய சதி செய்ததாக துணைத் தலைவர் ரியான் ஹோகன் செய்தியாளர்களிடம் தெரிவித்தார். எமது விசாரணைகள் தொடங்கிய அந்த ஜூன் மாதம் 3ஒரு நாள் 6 மணி நேரத்திற்குள், பல சந்தேக நபர்கள் அந்த இளையோர் சீர்திருத்தப் பணிப்பாளரின் வீட்டிற்குச் சென்றனர், இது "அவரைக் கொலை செய்வதற்காக" மாத்திரமே என்று போலீசார் குற்றம் சாட்டியுள்ளனர். ஜூன் 20, 2025 அன்று, மூன்று பேர் முகமூடி அணிந்த நிலையில், திருத்தப் பணியாளரின் வீட்டிற்கு வந்து, தோட்டாக்கள் நிரப்பப்பட்ட கைத்துப்பாக்கியுடன், ஓட்டிச் சென்ற ஒரு போலீஸ் வாகனத்துடன் மோதியதாக ஹோகன் பத்திரிகையாளர் சந்திப்பில் கண்காணிப்பு காட்சிகளை முன்வைத்து குற்றம் சாட்டினார். இரண்டு இளைஞர்கள் மற்றும் ஒரு வளர்ந்தவர் உட்பட மூன்று சந்தேக நபர்கள் அன்று கைது செய்யப்பட்டதாகவும் போலீசார் சார்பில் தெரிவிக்கப்பட்டது.




ஜூன் 2025 சம்பவத்திற்கு முன்பு, டொராண்டோ கான்ஸ்டபிள் டிமோதி பார்ன்ஹார்ட் என்பவர் ஒரு போலீஸ் தரவுத்தளத்தை சட்டவிரோதமாக அணுகி, ரகசியத் தகவலை உருவாக்கும் முயற்சியை மேற்கொண்டதாக புலனாய்வாளர்கள் குற்றம் சாட்டினர்.

"பல வழக்குகளில்", கான்ஸ்டபிள் பார்ன்ஹார்ட் மற்றும் பிற காவல்துறை அதிகாரிகளால் சட்டவிரோதமாக விசாரிக்கப்பட்ட முகவரிகள் பின்னர் குற்றங்களின் இடங்களாக மாறியதாக புலனாய்வாளர்கள் கண்டுபிடித்ததாக யோர்க் காவல்துறை தெரிவித்துள்ளது - "கப்பம் பறித்தல், வணிகக் கொள்ளைகள் மற்றும் துப்பாக்கிச் சூடு உட்பட", பலகுற்றச்சாட்டுகளில் இந்த பொலிஸ் அதிகாரி ஈடுபட்டமை எம்மால் கண்டு பிடிக்கப்பட்டுள்ளது.

மேலும் சில காவல்துறை அதிகாரிகள் சட்டவிரோத கஞ்சா விற்பனை இடங்களை ஆதரிக்கவும், "அந்த இடங்களில் எடுக்கப்படும் எந்தவொரு அமலாக்க நடவடிக்கையையும் தடுக்க லஞ்சம் பெறவும்" பிரையன் டா கோஸ்டா என்ற நபரால் "வழிநடத்தப்பட்ட" ஒரு திட்டமும் இருந்ததாகக் கூறப்படுகிறது, மேலும் இது தொடர்பாக தெரிவிக்கையில் இருபதுக்கும் மேற்பட்டவர்கள் குற்றம் சாட்டப்பட்டுள்ள பொலிசாருடன் இணைந்து பாரிய குற்றச் செயலுக்கான அடித்தளத்தளத்தை இடுவதற்கு திட்டங்கள் தீட்டினர் என்றார்.

மேற்படி குற்றசாட்டுகளில் முக்கிய பாத்திரவாளியாக கான்ஸ்டபிள் பார்ன்ஹார்ட் இருந்ததாகவும் அவர் அணுகியதாகக் கூறப்படும் ரகசியத் தகவல்களில் சிலவற்றையாவது வைத்திருந்ததாகக் குற்றம் சாட்டப்பட்ட மற்றொரு தனி நபர் 23 வயதான இன்னிஸ்.்.பில் குடியிருப்பாளர் கெய்ஜீன் டோமன் ஆகியோர் மீதும் குற்றச்சாட்டுகள் சுமத்தப்பட்டுள்ளன. 5ம் திகதி வியாழக்கிழமை காலை, நடைபெற்ற மேற்படி பத்திரிகையாளர்கள் சந்திப்பில். ரொறன்ரோ காவல்துறைத் தலைவர் மைரான் டெம்கிவ், ஒன்ராறியோவின் காவல்துறையினர் தங்கள் சக உத்தியோகத்தர்களை எவ்வாறு கண்காணிப்பு செய்கிறார்கள் என்பதில் ஒரு புதிய சகாப்தத்தை அறிமுகப்படுத்தினார் -

மேற்படி பாரிய குற்றச்சாட்டுக்களின் அடிப்படையில் ஐந்து ரொறன்ரோ காவல்துறை கான்ஸ்டபிள்கள், இரண்டு சார்ஜென்ட்கள் மற்றும் ஒரு ஓய்வுபெற்ற அதிகாரி, தனிநபரான அவரது மகன் ஆகியோர் விசாரணையில் சம்பந்தப்பட்டுள்ளார், அவர்கள் மீது இப்போது போதைப்பொருள் கடத்தல், நம்பிக்கை மீறல், நீதியைத் தடுக்க சதி செய்தல் மற்றும் லஞ்சம் வாங்குதல் உள்ளிட்ட ஏராளமான குற்றச்சாட்டுகள் உள்ளன.

குற்றம் சாட்டப்பட்டவர்களில் ஐந்து ரொறன்ரோ போலீஸ் கான்ஸ்டபிள்கள், இரண்டு சார்ஜென்ட்கள் மற்றும் ஓய்வுபெற்ற ஒரு அதிகாரியின் மகனும் விசாரணையில் சிக்கினார்கள். அவர்கள் மீது எண்ணிக்கையற்ற கணக் குற்றங்கள் சுமத்தப்பட்டுள்ளன, அவற்றில் போதைப்பொருள் கடத்தல், நம்பிக்கை மீறல், நீதியைத் தடுக்க சதி செய்தல் மற்றும் லஞ்சம் வாங்குதல் ஆகியவை அடங்கும்.

இவ்வாறு குற்றச்சாட்டுக்களில் கைது செய்யப்பட்டவர்களில்

ரொறன்ரோ போலீஸ் கான்ஸ்டபிள் டிமோதி பார்ன்ஹார்ட், வயது-56, சார்ஜென்ட் ராபர்ட் பிளாக், வயது-42, கான்ஸ்டபிள் ஜான் மேட்லி ஜூனியர், வயது-29, கான்ஸ்டபிள் கார்ல் கிரெல்லெட், வயது- 49, கான்ஸ்டபிள் சவுரப்ஜித் பேடி, வயது-38, கான்ஸ்டபிள் டெரெக் மெக்கார்மிக், வயது- 57, கான்ஸ்டபிள்

எலியாஸ் மௌவாட், வயது-24, மற்றும் ஓய்வுபெற்ற கான்ஸ்டபிள் ஜான் மேட்லி சீனியர், வயது-55, ஆகியோர் குற்றச்சாட்டுகளை எதிர்கொள்ளும் நபர்களில் அடங்குவார்கள் எனவும் மேற்படி பத்திரிகையாளர்கள் சந்திப்பில் தெரிவித்தார்கள்.

"உண்மை என்னவென்றால், எங்கள் அதிகாரிகளில் மிகச் சிலரே இந்தக் கடுமையான குற்றச் செயல்களைச் செய்கிறார்கள்," என்று பெடர்சன் கூறினார். "எனவே, இதுவரையிலும் எந்தவொரு காவல்துறைத் தலைவரும் ஊதியமின்றி இடைநீக்கம் செய்யும் சட்டத்தைப் பயன்படுத்த வேண்டிய அவசியம் இருக்கவில்லை. மிகவும் வெளிப்படையாகச் சொன்னால், எங்கள் காவல்துறை உத்தியோகத்தர்களில் பெரும்பாலோர் தங்கள் வேலைகளை மிகுந்த மரியாதையுடன் செய்கிறார்கள்." என்றும் அவர் தெரிவித்தார்.

எதிர்வரும் வாரங்களில் அல்லது மாதங்களில் இந்த குற்றச்சாட்டுக்கள் தொடர்பான விசாரணைகள் மற்றும் வழக்குகளின் ஊடாக மேலதிக விபரங்கள் வெளியிடப்படும் எனவும் அன்றை பத்திரிகையாளர்கள் சந்திப்பின்போது தெரிவிக்கப்பெற்றது.

**Uthayan -LJI Journalist Ganesh**

# இவ்வார ராசிபலன்

**06-02-2026 வெள்ளி தொடக்கம் 12-02-2026 வியாழன் வரையும்**




**மேஷம்:** மாற்றுச் சிந்தனைக் உதயமாகும் வாரம். விலகி சென்றவர் விரும்பி வருவர். வரன் வாயில் தேடி வரும். அந்நிய தேச பயணம் உண்டு. இரும்புத்தொழில் ஏற்றம் தரும். மனை வாங்கும் யோகம் உண்டு. இல்லத்தில் மேன்மைகள் ஏற்படும். நல்ல சம்பவங்கள் நடைபெறும். புதிய ஒப்பந்தம் கையெழுத்தாகும். கடன் விஷயத்தில் கவனம் தேவை. உறவினர் வருகையால் கலகலப்பு குறையும். செயல்பாட்டில் கவனம் தேவை. ஆபரணச்சேர்கை உண்டு. கூட்டுத்தொழில் லாபம் தரும். வீண் வம்புகள் அகலும். எதிர்கால சிந்தனைகள் ஏற்றம் பெறும். குடும்ப சந்தோஷம் அதிகரிக்கும். அரசு வகையில் ஆதாயம் கிட்டும். பணியாளர் ஒத்துமைப்பு கிட்டும். கோரிக்கைகள் நிறைவேறும். மேலதிகாரியின் பாராட்டு கிடைக்கும். காதலர்களுக்கு கையிருப்பு கரையும். பெற்றோர் வழியில் பிரியம் கூடும். தொலைதூரப் பயணம் லாபம் தரும். மன மகிழ்ச்சி அதிகரிக்கும். முதலீடுகளால் முன்னேற்றம் உண்டு. உதவிகள் கிடைக்கும். கல்வியில் கவனம் தேவை. பொது விஷயங்களில் நாட்டம் ஏற்படும். புதிய முதலீடு உருவாகும். பகையாளிகளின் நிலை மாறும். முன்னேற்றம் அதிகரிக்கும். ஷேர் மார்க்கெட் லாபம் தரும். கற்பனை வளம் அதிகரிக்கும். சட்டம் சாதகமாகும். திருப்தி ஏற்படும். புண்ணிய ஸ்தலம் செல்ல வேண்டி வரும். புதிய முயற்சிகள் பலன் தரும். பெற்றவர்கள் பாராட்டு கிட்டும். வினோதமான எண்ணங்கள் விலகும். மனைவியால் மருத்துவச் செலவு உண்டு. மற்றவர்களிடத்தில் மரியாதை உயரும். எதிர்கால எண்ணம் நிறைவேறும். சாதனையான எண்ணங்கள் உதயமாகும்.

வழிபட வேண்டிய தெய்வம்: நட்சத்திர தேவதை, அதிர்ஷ்ட எண்: 7,5,9,8
அதிர்ஷ்ட நிறம்: கருப்பு, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: F,C





**ரிஷபம்:** சிக்கனத்தைக் கடைப்பிடிக்க வேண்டிய வாரம். ஏஜென்ஸி தொழில் ஏற்றம் தரும். வெளிநாட்டுத் தொடர்பு ஆதாயம் தரும். நட்பு வட்டம் விரிவடையும். கணவன், மனைவி அன்யோன்யம் அதிகரிக்கும். தன்னம்பிக்கையும், துணிச்சலும் மேலோங்கும். சேமிப்பு வளரும். நீண்ட தூரப் பயணம் லாபம் தரும். இளைஞர்களுக்கு படிப்பிற்கு ஏற்ப உத்தியோகம் கிட்டும். சம்பளம் எதிர்பார்த்தபடி அமையும். தொழில் லாபம் உண்டு. தொட்ட காரியம் ஜெயமாகும். சுமூகமான சூழ்நிலை பெருகும். நீண்ட நாளைய நோய் விலகும். ஞாபகத்திறன் அதிகரிக்கும். முயற்சிகளில் தாமதம் ஏற்படும். கலைஞர்களுக்கு புகழ் கூடும். இடமாற்றத்தால் நன்மை உண்டு. உடல் ஆரோக்கியம் சீராகும். பேச்சில் நிதானம் தேவை. வீடு, மனை யோகம் உண்டு. நினைத்த விஷயம் நிறைவேறும். ஆபத்துக்கள் விலகும். கணினி துறையில் ஊதிய உயர்வு உண்டு. பங்குச்சந்தையில் பலன் கிடைக்கும். வாயில் தேடி வாய்ப்புக்கள் வரும். புதிய முயற்சி பலிதமாகும். ஊதிய உயர்வு கிட்டும். எதிரிகள் ஏமாற்றம் அடைவர். மனைவியின் அன்பு அதிகரிக்கும். வளமான சிந்தனை உருவாகும். கருத்து வேறுபாடுகள் விலகும். இடையூறு அகலும். வேதனைகள் சாதனைகள் ஆகும். இனம் புரியாத சந்தோ'ம் ஏற்படும். வறுமையின் வாட்டம் குறையும். குடும்ப அன்யோன்யம் திருப்தி தரும். புத்துணர்ச்சியோடு செயல்படுவீர்கள். கடன் விஷயத்தில் கவனம் தேவை. திருமண பேச்சு முடிவிற்கு வரும். எண்ணங்கள் பலிதமாகும். சொத்துக்களில் வில்லங்கம் விலகும். கலகலப்புக்கூடும். ஆசைகள் நிறைவேறும். உறவினர்கள் உதவி செய்ய முன் வருவர்.

வழிபட வேண்டிய தெய்வம்: அக்னீஸ்வரர், அதிர்ஷ்ட எண்: 3,5,2,1
அதிர்ஷ்ட நிறம்: பொன்நிறம், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: R,Q




**மிதுனம்:** கனமான லாபம் கிடைக்கும் வாரம். இனியத் தகவல் வந்து சேரும். குடும்ப விஷயத்தில் கவனம் தேவை. விரோதங்கள் விலகும். உத்தியோக மாற்றம் உறுதியாகும். எதிர்கால சிந்தனை ஏற்றம் பெறும். சந்தோஷம் அதிகரிக்கும். நீண்ட நாள் கனவு நிறைவேறும். ஆசிரியர்களுக்கு அற்புதமான காலம். வழக்கமான பணியில் மாற்றம் வரும். சுபச்செய்தி வரும். பிரபல்ய ஆசை ஏற்படும். மேலதிகாரியின் பாராட்டு கிட்டும். புதிய நட்பு உருவாகும். வசந்தம் தேடி வரும். முன்னோர்கள் ஆசீர்வாதம் கிடைக்கும். வரவுக்கு மீறிய செலவு ஏற்படும். வாகனத்தால் செலவு ஏற்படும். உற்சாகம் மேலோங்கும். எதிரிகள் தொல்லைகள் ஒழியும். விழிப்புணர்ச்சியோடு செயல்படுவது நல்லது. உடல்நலம் சீராகும். ஆடம்பர நாட்டம் ஏற்படும். வணிகத்தொழில் விரிவடையும். பிள்ளைகளால் வெகுமானம் கூடும். பிராணிகளால் தொல்லை ஏற்படும். முன்னேற்றமான காலம். நட்பு வட்டம் விரிவடையும். சுபச்செய்தி தேடி வரும். ஆபரணப் பொருள் களவுப்போகும். அனுகூலச் செய்திகள் வந்து சேரும். உறவினர்களின் ஒத்துழைப்பு கிட்டும். மாற்று மருத்துவம் பலன் தரும். வரவுகள் மிகுதியாகும். பெற்றோர் நலனில் அக்கறைத் தேவை. உடல் சோர்வு நீங்கும். திருஷ்டிகள் விலகும். செல்வச் செழிப்பு உயரும். விவேகம் கைக்கொடுக்கும். அலைச்சல் ஆதாயம் தரும். வளமான சிந்தனை உதயமாகும். பிள்ளைகளின் தேவைகள் பூர்த்தியாகும். வியாபாரம் திருப்தி தரும். பணியாட்கள் ஆதரவு பெருகும். மனமகிழ்ச்சி கிட்டும். எண்ணங்கள் பூர்த்தியாகும். எதிர்பார்த்த விஷயம் தாமதமாகும். பெண்களுக்கு அணிகலன் சேரும்.

வழிபட வேண்டிய தெய்வம்: சுக்ர பகவான், அதிர்ஷ்ட எண்: 2,9,7,6
அதிர்ஷ்ட நிறம்: இளம்ஊதா, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: Y,G




**கடகம்:** ஆளுமைத்திறன் அதிகரிக்கும் வாரம். திருப்தி தரும் காலம். அலைச்சல் ஆதாயம் தரும். வளமான சிநதனை உருவாகும். பிள்ளைகளின் தேவை பூர்த்தியாகும். வியாபாரம் திருப்தி தரும். நண்பர்களால் நன்மை உண்டு. மனக்கட்டுப்பாடு அவசியம். உதவும் குணம் அதிகரிக்கும். பிரச்சனைகள் விடுபடும். பதவி உயர்வு ஏற்படும். நல்ல செய்திகள் நாடி வரும். பிள்ளைகளின் தேவை பூர்த்தியாகும். இடையூறுகள் அகலும். கூட்டுப் பிரார்த்தனை நன்மை தரும். எதிரிகளின் தொல்லை குறையும். பயணங்களால் வெகுமதி கூடும். பணத்தேவை அதிகரிக்கும். குளிர்பானத் தொழில் கவனம் தேவை. தொலைபேசித் தகவல் தொல்லைத் தரும். விபரீத எண்ணம் விலகும். புண்ணிய ஸ்தலம் செல்வீர்கள். உள்ளம் மகிழும். ஆடை, அணிகலன் சேரும். செல்வாக்கு உயரும். குடும்ப பாசம் அதிகரிக்கும். இசையார்வம் கூடும். பிள்ளைகளின் நலனில் அக்கறை தேவை. உணவுத்தொழில் உயர்வு பெறும். புதிய தொழில்



ஒரு மனிதனை யார் கைவிட்டாலும் ஆன்மீகம் கைவிடாது!
என்ற உறுதியோடு உங்கள் 'ராஜயோகம்'
"ஜோதிட மகரிஷி"
Dr. K. RAM.Ph.D (USA)
தொடர்புக்கு: 0091-9840160068
9940431377


அமையும். திட்டங்கள் எளிதாகும். பாராட்டுக்கள் உயரும். பயணம் அனுகூலம் தரும். வெளியூர் பயணம் நன்மை தரும். வெளிநாட்டு நபரால் வெகுமதி உண்டு. போதாத காலம் விலகும். தோதான எண்ணம் உருவாகும். வாகன மாற்றம் நன்மை தரும். பொருளாதாரம் உயரும். வியாபாரம் திருப்தி தரும். நண்பர்களின் பேச்சு ஆறுதல் தரும். மனநிலையில் மாற்றம் ஏற்படும். அடுத்தவர் தலையீடு அமைதியைக் கெடுக்கும். பெரியவர்களை அனுசரித்துச் செல்வது நல்லது. உழைப்பு கடுமையாக இருக்கும். ஏற்றுமதி தொழிலில் லாபம் தரும். உறவினர் வருகை உற்சாகம் தரும். சகோதர ஒற்றுமை அதிகரிக்கும். ஆசைகள் நிறைவேறும். பங்குச்சந்தை லாபம் தரும்.

வழிபட வேண்டிய தெய்வம்: ராகு பகவான், அதிர்ஷ்ட எண்: 3,8,7,1
அதிர்ஷ்ட நிறம்: சாம்பல் நிறம், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: D,C




**சிம்மம்:** வெளியூர் பயணம் வெகுமதி தரும் வாரம். பிள்ளைகளிடம் மதிப்பு உயரும். வியாபாரம் சிறக்கும். விரயம் குறையும். சகோதரி வகையில் சகாயம் கிடைக்கும். கருத்து வேறுபாடுகள் விலகும். நண்பர்கள் சந்திப்பு நன்மை பயக்கும். பதவி உயர்வு தாமதமாகும். வார்த்தைகளில் கவனம் தேவை. களவு போன பொருள் திரும்ப கிடைக்கும். வயிறு உபாதைகள் வந்து போகும். திடீர் மாற்றம் ஏற்படும். பயணத்தில் கவனம் தேவை. ஆடம்பர செலவுகள் அதிகரிக்கும். தொழிலில் வளர்ச்சி கூடும். முயற்சிகள் பலிதமாகும். பெற்றோர்களால் பெருமை சேரும். பொது வாழ்வில் புகழ் கூடும். புதிய தொழில் வாய்ப்பு ஏற்படும். பெண்களின் ஆலோசனை பெருமை சேர்க்கும். பொருள் வரவு ஏற்படும். சாதனையை சந்திப்பீர்கள். தெய்வத் திருப்பணியில் ஆர்வம் கூடும். அரசியல் ஆர்வம் ஏற்படும். விரயங்கள் அதிகரிக்கும். மாற்றங்களை சந்திப்பீர்கள். உற்சாகம் களை கட்டும். உயர் பதவி யோகமுண்டு. தடைகள் அகலும். நீண்ட நாளைய கனவு நிறைவேறும். நல்ல செய்திகள் நாடி வரும். விவாதம் வாக்குவாதங்களாக மாறும். வேண்டாத நபர்கள் விலகுவர். வெளி வட்டாரத் தொடாபு அதிகரிக்கும். ஆழமான மேன்மைகள் அமையும். சாதகமான சந்தர்ப்பங்கள் நிகழும். திட்டமிட்ட செயல்பாடு தேவை. பறவைகளுக்கு உணவு அளித்து பலன் பெறலாம். பாக்கிகள் வசூலாகும். உறவினர்களால் சஞ்சலம் ஏற்படும். முயற்சிகளில் தாமதமாகும். பங்குச்சந்தை லாபம் தரும். இரகசியம் காப்பது நல்லது. பணியில் மாற்றம் ஏற்படும். பயணத்தில் கலனம் தேவை. முயற்சிகள் வளர்ச்சி அடையும். மாணவர்களுக்கு எச்சரிக்கை தேவை. நல்லச் செய்தி நாடி வரும். கூட்டுத்தொழில் லாபம் தரும்.

வழிபட வேண்டிய தெய்வம்: சண்முகப் பெருமாள், அதிர்ஷ்ட எண்: 8,6,9,2
அதிர்ஷ்ட நிறம்: சாம்பல் நிறம், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: H,S




**கன்னி:** மேன்மைகள் சந்திக்கும் வாரம். தடைகள் விலகும். பணியில் பாராட்டு கிடைக்கும். வாகனச் செலவு ஏற்படும். புதிய முயற்சியில் ஈடுபடலாம். அலைச்சல் அதிகரிக்கும். மனநிம்மதி குறையும். தனசேர்க்கை உண்டு. கூட்டுத்தொழில் லாபம் தரும். உயர்வுகள் தாமதமாகும். நண்பகலில் நல்ல தகவல் வரும். வேலை பளு அதிகரிக்கும். அத்தியாவசிய செலவுகள் ஏற்படும். தான தர்மங்கள் பலன் தரும். வழக்குகள் தள்ளிப்போகும். உற்சாகம் அதிகரிக்கும். தனலாபம் பெருகும். உத்தியோகத்தில் நல்ல பெயர் கிட்டும். உடல்பொலிவு கூடும். முதலீடு தவிர்க்கவும். வரவு திருப்தி தரும். வழக்குகள் தாமதமாகும். உடன்பிறப்புக்களால் ஆதாயம் கிடைக்கும். முயற்சிகள் பலன் கொடுக்கும். ஆரோக்கியம் சீராக இருக்கும். பூமியால் நன்மை உண்டு. வியாபாரிகளுக்கு லாபம் அதிகரிக்கும். வார்த்தைகளில் நிதானம் தேவை. வாய்ப்புக்கள் சாதகமாக அமையும். தொழில் வளர்ச்சி கூடும். பால் தானம் பாக்கியம் சேர்க்கும். மதிநுட்பம் தேவை. உத்தியோகத்தில் நல்ல பெயர் கிட்டும். தெய்வப் பணிகளில் ஈடுபாடு அதிகரிக்கும். சகோதர ஒற்றுமை பலப்படும். கொடுக்கல், வாங்கலில் திருப்தி தரும். வாகன மாற்றம் உண்டு. பிள்ளைகள் கல்வி மேம்படும். பதவி உயர்வு தாமதமாகும். செய்த்தொழிலில் கவனம் தேவை. மற்றவர்களால் தொல்லை உண்டு. மனைவியால் நன்மை உண்டு. பால்ய நண்பர் சந்திப்பு கிட்டும். குடும்பத்தில் மகிழ்ச்சி பெருகும். காரியம் வெற்றி பெறும். வாழ்க்கைத் துணையால் வளம் பெருகும். எதிலும் வெற்றி கிட்டும். ஏற்றம் அதிகரிக்கும்.

வழிபட வேண்டிய தெய்வம்: பிரம்மதேவன், அதிர்ஷ்ட எண்: 6,9,7,1
அதிர்ஷ்ட நிறம்: இந்திர நீலம், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: Y,B




**துலாம்:** சந்தோஷமான நிகழ்வுகள் அமையும் வாரம். பொன்னான காலம். அன்னிய தேச பயணம் உண்டு. வழக்குகள் சாதகமாகும். கலைஞர்களுக்கு ஆதாயம் பெருகும். அரசியல்வாதிகளுக்கு அற்புதமான காலம். கட்டிடத்தொழிலில் ஒப்பந்தங்கள் குவியும். நினைத்த விஷயம் நிறைவேறும். பணமுயற்சி பலன் தரும். கூட்டுத்தொழில் சுமாராக இருக்கும். புத்தி சாதுர்யம் பெருகும். வியாபாரத்தில் கவனம் தேவை. வீடு, மனை யோகம் உண்டு. விரக்திகள் மறையும். ஊக்கம் அதிகரிக்கும். சிக்கனம் தேவை. கல்வியில் மேன்மை உண்டு. கடன் வசூலாகும். காதலர் ஒற்றுமை அதிகரிக்கும். சேமிப்பு உயரும். பேச்சில் நிதானம் தேவை. நியாயம் ஜெயிக்கப் போராடுவீர்கள். புதிய நட்பில் கவனம் தேவை. செய்த்தொழில் லாபம் தரும். பணத்தேவைகள் பூர்த்தியாகும். மன ஆரோக்கியம் சீறக்கும். உடல் ஆரோக்கியம் சீராகும். குடும்ப ஒற்றுமை மேம்படும். பொருளாதாரம் உயரும். மேலதிகாரியின் பாராட்டு கிடைக்கும். பிள்ளைகளின் தொல்லைகள் அகலும். தந்தை உடல்நலனில் அக்கறை தேவை. வியாபாரம் விருத்தியாகும். வெளியூர் பயணம் உண்டு. மனைவயின் பிரார்த்தனை மாற்றத்தை ஏற்படுத்தும். தொழிலாளர்களுக்கு மனநிறைவு உண்டு. குடும்பத்தில் குழப்பங்கள் நீங்கும். உடல்நலம் சிறக்கும். தேகப்பலன் கூடும். இல்லத்தில் அமைதி கூடும். பணவரவு திருப்தி தரும். கொடுத்த வாக்கை காப்பாற்றுவீர்கள். ஆலோசனைகளால் ஆதாயம் உண்டு. வாழ்த்துக்கள் வந்து சேரும்.

வழிபட வேண்டிய தெய்வம்: ஸ்ரீ காமதேனு, அதிர்ஷ்ட எண்: 4,7,2,3
அதிர்ஷ்ட நிறம்: யானை நிறம், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: T,Q

(தொடர்ச்சி 22 பக்கம்)

இலங்கை செய்திகள்
Sri Lanka News

# இலங்கை ஜனநாயக சோசலிச குடியரசின் 78வது சுதந்திர தினக் கொண்டாட்டம் யாழ்ப்பாண மாவட்ட செயலகத்தில் அரசாங்க அதிபர் தலைமையில் நடைபெற்றது!

இலங்கை ஜனநாயக சோசலிச குடியரசின் 78வது சுதந்திர தின யாழ்ப்பாண மாவட்ட நிகழ்வு 4ம் திகதி புதன்கிழமை அன்றைய தினம் (04.02.2025) காலை 07.30 மணிக்கு அரசாங்க அதிபர் திரு.மருதலிங்கம் பிரதீபனின் தலைமையில் யாழ்ப்பாண மாவட்டச் செயலக முன்றலில் நடைபெற்றது.

இந் நிகழ்வானது அணிவகுப்பு மரியாதையுடன் ஆரம்பமாகி - தேசியக் கொடி ஏற்றல், தேசிய கீதம் இசைத்தல், சர்வ மதத் தலைவர்களின் ஆசியுரை மற்றும் அரசாங்க அதிபரின் உரை உள்ளடங்கலாக சிறப்பாக நடைபெற்றது.

இந் நிகழ்வில் யாழ்ப்பாணம் வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை, கொக்குவில் இந்துக் கல்லூரி, பரியோவான் கல்லூரி மற்றும் யாழ் இந்து ஆரம்ப பாடசாலை ஆகிய பாடசாலை மாணவர்களின் பான்ட் (Band) வாத்தியக் குழுவின் அணிவகுப்பும், வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை, யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி, யாழ் இந்து மகளிர் கல்லூரி மற்றும் கொக்குவில் இந்துக் கல்லூரி ஆகிய பாடசாலைகளின் தேசிய மாணவர் படையணியின் (Cadet) அணிவகுப்பும், யாழ் இந்துக் கல்லூரி, கொக்குவில் இந்துக் கல்லூரி, வேலணை மத்திய கல்லூரி ஆகிய பாடசாலை மாணவர்களின் சாரணிய அணிவகுப்பு மரியாதையும் நடைபெற்றமை குறிப்பிடத்தக்கது.




மேலும், இன்றைய அணிவகுப்பில் பங்குபற்றிய மாணவர்களை கௌரவித்து அரசாங்க அதிபர் உள்ளிட்டவர்களால் சான்றிதழ் வழங்கப்பட்டதுடன், மர நடுகை மற்றும் சிரமதான நிகழ்வுகளும் இடம்பெற்றன.





இந் நிகழ்வில் பலாலி பாதுகாப்பு படைகளின் தலைமைப்பீடத்தினைச் சேர்ந்த மேஜர் ஜெனரல் ராசிக் அவர்கள், பொலிஸ் கடற்படை உள்ளிட்ட உயர் அதிகாரிகள் முப்படையின் அதிகாரிகள், மேலதிக அரசாங்க அதிபர், மேலதிக அரசாங்க அதிபர் (காணி) உள்ளிட்ட மாவட்ட செயலக பதவிநிலை உத்தியோகத்தர்கள், மாவட்ட செயலக உத்தியோகத்தர்கள், பாடசாலை மாணவர்கள், பொதுமக்கள் மற்றும் ஊடகவியலாளர்கள் உள்ளிட்ட பலர் கலந்து சிறப்பித்தனர்.



# சண்டிலிப்பாய் பிரதேச செயலகத்தில் சுதந்திர தின நிகழ்வு!

இலங்கை ஜனநாயக சோசலிச குடியரசி-ின் 78 ஆவது சுதந்திர தினத்தை முன்னிட்டு சண்டிலிப்பாய் பிரதேச செயலகத்தில் சுதந்திர தின நிகழ்வுகள் 04.02.2026 புதன்கிழமை மு.ப.08.04 மணிக்கு தேசியக் கொடி ஏற்றலுடன் ஆரம்பமானது.

சண்டிலிப்பாய் பிரதேச செயலாளர் திரு. குமாரசாமி பிரபாகரமூர்த்தியின் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் பூசை வழிபாடுகள் இடம்பெற்றமைமைத் தொடர்ந்து மாநாட்டு மண்டபத்தில் இணைய வழி ஊடாக தேசிய நிகழ்வுகளோடு உத்தியோகத்தர்கள் அனைவரும் இணைந்திருந்தனர்.

செயலக உத்தியோகத்தர்கள் மத்தியில் உரையாற்றிய பிரதேச செயலாளர், சுதந்திர தினம் தொடர்பான வரலாற்று ரீதியான விடயங்களை குறிப்பிட்டு, பிரதேச செயலகத்தில் கருவிலுள்ள குழந்தைகள் நலனைக் கவனிப்பது தொடங்கி, முதியோர் சேவை ஈறாக ஒவ்வோரு துறை சார்ந்தும் பணியாற்றும் உத்தியோகத்தர்கள் நியமிக்கப்பட்டுள்ள நிலையில் கிராம மட்டத்தில் பணியாற்றுகின்ற உத்தியோகத்தர்கள் அனைவரும் ஒன்றுபட்டு பிரதேசத்தின் அபிவிருத்திக்காக பணியாற்றுவதோடு, நீங்களும் மகிழ்ச்சியுடன் மேம்பட்ட எதிர்காலத்தை நோக்கிப் பயணிக்க வேண்டும் எனக் குறிப்பிட்டார்.

இந்நிகழ்விலே செப்ரெம்பர் மாதம் முதல் டிசெம்பர் மாதம் வரை காலை 8.30 முன்னர் அலுவலகத்திற்கு வருகை தந்த உத்தியோகத்தர்களில் முதல் மூன்று நிலைகளிலுள்ள உத்தியோகத்தர்களுக்கான கௌரவிப்பும், முதியோர் செயலக செயற்பாடுகளில் அர்ப்பணிப்பாக பணியாற்றிய உத்தியோகத்தருக்கு அமைச்சின் செயலாளரால் வழங்கப்பட்ட மெச்சுரை வழங்கும் நிகழ்வும் இடம்பெற்றது.



நிறைவாக செயலக வளாகத்தில் சிரமதானம் மற்றும் மரநடுகை நிகழ்வுகள் இடம்பெற்றமை குறிப்பிடத்தக்கதாகும்.

- ந.லோகதயாளன்

# யாழ்ப்பாணத்தில் மீண்டும் தற்கொலை செய்து கொள்வோர் மற்றும் முயற்சிப்போர் எண்ணிக்கை அதிகரிப்பு

தற்கொலைக்கு முயன்று சிகிச்சைக்காக யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் 2025 ஆம் ஆண்டு அனுமதிக்கப்பட்டவர்களில் 170 பேர் உயிரிழந்துள்ளனர்.

இலங்கையில் மன அழுத்தம் மற்றும் குடும்ப வன்முறை மட்டுமன்றி காதல் தோல்விகள் உள்ளிட்ட காரணங்களால் ஆண்டுதோறும் தற்கொலைக்கு முயல்வோர் எண்ணிக்கையும் அதகரித்த வண்ணமே உள்ளது.

இந்த வகையிலேயே 2025 ஆம் ஆண்டு அனுமதிக்கப்பட்டவர்களில் 170 பேர் உயிரிழந்துள்ளனர்.

இவ்வாறு 2023 ஆம் ஆண்டு 60 பேரும், 2024 ஆம் ஆண்டில் 76 பேர் மட்டுமே தற்கொலைக்கு முயன்றவர்கள் சிகிச்சைக்காக யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டபோது உயிரிழந்துள்ளனர் என தகவல் அறியும் சட்டத்தின் கீழ் விண்ணப்பித்த ஓர் விண்ணப்பத்திற்கு போதனா வைத்மியசாலை நிர்வாகத்தினால் பதிலளிக்கப்பட்டுள்ளது.

இந்த எண்ணிக்கைகளின் அடிப்படையில் 2023 முதல் தற்கொலைகளின் எண்ணிக்கை அதிகரிப்பது உறுதி செய்யப்பட்டுள்ளது.

இதேநேரம் 2021 ஆம் ஆண்டு முதல் 2025 ஆம் ஆண்டு வரையான 5 ஆண்டுகளில் தற்கொலைக்கு முயன்று சிகிச்சை பெற்று வெளியேறியவர்களின் எண்ணிக்கை 2996 எனவும் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

# யாழ்ப்பாணம் மாவட்டத்தில் வீதி விபத்துக்களால் மட்டும் 2025 ஆண்டு சுமார் 100 பேர் உயிரிழந்துள்ளதாக புள்ளிவிபரங்கள் தெரிவிக்கின்றன!

யாழ்ப்பாணம் மாவட்டத்தில் வீதி விபத்துக்களால் மட்டும் 2025 ஆண்டு சுமார் 100 பேர் உயிரிழந்துள்ளதாக போதனா வைத்தியசாலையின் தகவல் உறுதிப்படுத்துகின்றது.

இலங்கை முழுவதும் வீதி விபத்து மரணம் அதிகரித்துள்ளது. இதில் யாழ்ப்பாணக் குடாநாட்டில் வீதி விபத்து மரணம் தொடர்பில் தகவல் அறியும் சட்டத்தின் கீழ் விண்ணப்பித்த ஓர் விண்ணப்பத்திற்கு போதனா வைத்தியசாலை நிர்வாகத்தினால் பதிலளிக்கப்பட்டுள்ளது.

இந்த எண்ணிக்கைகளின் அடிப்படையில் 2023 முதல் வீதி விபத்து மரணத்தின் எண்ணிக்கை அதிகரிப்பது உறுதி செய்யப்பட்டுள்ளது.

இதற்கமை 2023 ஆம் ஆண்டு வீதி விபத்தில் 68 பேர் உயிரிழந்துள்ளனர். இந்த எண்ணிக்கை 2024 ஆம் ஆண்டில் 83 ஆக அதிகரித்துள்ளது. 2025 ஆம் ஆண்டு விபத்து மரண எண்ணிக்கை மேலும் அதிகரித்து 98 ஆக அதிகரித்துள்ளதாக யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலை உறுதி செய்துள்ளது.



இதேநேரம் 2021 ஆம் ஆண்டு முதல் 2025 ஆம் ஆண்டு வரையான ஐந்து ஆண்டு காலப் பகுதியில் விபத்துக்களில் அகப்பட்ட 9 ஆயிரத்து 325 பேர் காயமடைந்து வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்றுள்ளனர்.

# தியாகி நடராஜனின்69 வது ஆண்டு நினைவேந்தல் யாழ்ப்பாணத்தில் அனுஸ்டிக்கப்பட்டது!



தமிழ்த் தேசியப் பற்றாளர் தியாகி திருமலை நடராஜனின் 69வது ஆண்டு நினைவேந்தல் நிகழ்வு தாயக நினைவேந்தல் பணிமனையால் யாழ்ப்பாணத்தில் 4ம் திகதி புதன்கிழமை (04.02.2026) மாலை அனுஸ்டிக்கப்பட்டது. சிறீலங்காவின் சுதந்திரதினத்தை தமிழர்கள் கரிநாளாக பகிஸ்கரித்தனர்.

திருகோணமலையில் உயரமாக பறக்கவிடப் பட்டிருந்த சிங்கக்கொடியை அகற்றி கறுப்புக் கொடியைக் கட்டமுயன்ற இனப்பற்றும் தேசப்பற்றும் நிரம்பிய 22வயது இளைஞரான தியாகி நடராஜன், சிங்கள அரச படைகளால் சுட்டு படுகொலை செய்யப்பட்டார்.

அவர் தேசியக் கொடியுடன் மண்ணில் வீழ்ந்து மாய்ந்த நிகழ்வு அன்று வடக்கு கிழக்கு தமிழர் தாயகத்தையே உலுக்கியது. அகிம்சைப் போராட்டத்தில் ஈடுபட்ட தியாகி நடராஜன் படுகொலை செய்யப்பட்டபோது தமிழீழ தேசியத் தலைவர் வே.பிரபாகரனுக்கு அகவை 03.

1957, பெப்ரவரி 4ம் திகதி இலங்கை சுதந்திரம் அடைந்து சரியாக ஒன்பதாவது ஆண்டில் முதல் தமிழ்த் தேசிய விடுதலை உணர்வுடன் சிங்கள அரச படைகளின் துப்பாக்கி சூட்டில் பலியான திருகோணமலை மண் தந்த வீரப்புதல்வன் தியாகி நடராஜனின் 69வது ஆண்டு நினைவு நாள் அனுஸ்டிப்பு யாழ்ப்பாணத்தில் உள்ள தாயக நினைவேந்தல் பணிமனையில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் தாயக நினைவேந்தல் குழுவினர் மற்றும் தமிழ்த் தேசிய பற்றாளர்கள் என அனைவரும் கலந்து கொண்டு தியாகி நடராஜன் அவர்களின் உருவப்படத்திற்கு பொதுச்சுடர் ஏற்றி மலர் அஞ்சலி செய்து மாலை அணிவித்து கருத்துரைகள் வழங்கியிருந்தனர்.

# இவ்வார ராசிபலன்

(20 பக்கம் தொடர்ச்சி)




**விருச்சிகம்:** ஆன்மீக எண்ணம் அதிகரிக்கும் வாரம். அரசுத்துறையில் ஆதாயம் உண்டு. வாழ்த்துச் செய்தி வரும். மறைமுக எதிர்ப்புக்கள் மாறும். உறவினர் வருகை உண்டு. புதிய நாட்டம் ஏற்படும். பூர்வீகச் சொத்துக்கள் கிடைக்கும். வாகன மாற்றம் உண்டு. பங்குச்சந்தையில் பணம் புரளும். விளையாட்டுத் துறையில் வெகுமதி கூடும். காதலர்கள் தம்பதியாவார்கள். மாணவர்களுக்கு கல்வியில் ஆர்வம் கூடும். பொறாமைகள் விலகும். தர்ம சிந்தனை மேலோங்கும். சகோதர வழியில் கவனம் தேவை. நண்பர்களால் பாராட்டு கிடைக்கும். ஆபரணச் சேர்க்கையுண்டு. பொது வாழ்வில் புகழ் கூடும். பித்ருக்கள் சாபம் நீங்கும். வீண்செலவுகள் அதிகரிக்கும். மங்களச் செய்தி வரும். வார்த்தைகளில் நிதானம் தேவை. தான தர்மங்கள் பலன் தரும். திருமண முயற்சி பலன் தரும். ஏற்றுமதி தொழிலில் லாபம் கிடைக்கும். வேண்டாத உறவுகளை தவிர்க்கவும். விவசாயிகளின் கோரிக்கை நிறைவேறும். பிரிந்த குடும்பம் ஒன்று சேரும். கலைஞர்களுக்கு வாய்ப்பு வரும். பயணங்களால் பணம் கரையும். வயிறு சம்பந்தமான நோய் வந்து நீங்கும். அரிசி தானம் ஆயுள் விருத்தி தரும். நல்லோர்களின் பாராட்டு கிடைக்கும். பெண்களுக்கு வேலைபளு அதிகரிக்கும். நினைத்த காரியம் நிறைவேறும். பயணங்களால் பணம் கரையும். வாக்குவாதத்தை தவிர்ப்பது நல்லது. குதூகலம் தாண்டவமாடும். உறவினர் வருகையால் உள்ளம் மகிழும். பறவைகளிடம் அன்பு அதிகரிக்கும். அலைபேசியால் அலைச்சல் அதிகமாகும். தாய்வழி உறவில் விரிசல் ஏற்படும். கலவரமான சூழ்நிலை காணப்படும்.

வழிபட வேண்டிய தெய்வம்: துர்காதேவி, அதிர்ஷ்ட எண்: *6,2,4,3*
அதிர்ஷ்ட நிறம்: ஆழ்ந்த சிவப்பு, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: A,X




**தனுசு:** முன்னேற்றம் கிடைக்கும் வாரம். லாபமான காலம். தொலைதூரப் பயணம் ஏற்படும். பெண்களுக்கு அணிகலன் சேரும். யோக பலன் கூடும். வம்பு வழக்குகள் தீரும். எண்ணங்கள் வண்ணமயமாகும். உறவினரால் உதவிகள் கிட்டும். சகோதர வழியில் சந்தோஷம் கூடும். காதலர்களுக்கு கையிருப்பு கரையும். வியாபாரம் விருத்தியாகும். வருமானம் திருப்தி தரும். வாகன மாற்றம் உண்டு. மாற்று யோசனை பயன் தரும். மாணவர்களுக்கு அக்கறை கூடும். விளையாட்டில் கவனம் தேவை. புதுமுயற்சிகளை தள்ளிப்போடவும். எதிரிகளால் ஏற்றம் உண்டு. பங்குச்சந்தையில் கவனம் தேவை. மனைவியின் அன்பு அதிகரிக்கும். மாற்று இனத்தவரால் நன்மை உண்டு. அயல்நாட்டுப் பயணம் உண்டு. நண்பர்களிடம் எச்சரிக்கை தேவை. உறவுகளால் செலவு அதிகரிக்கும். உத்தியோகத்தில் உயர்வு கிடைக்கும். வியாபாரிகளுக்கு லாபம் அதிகமாகும். ஆன்மீகப் பயணம் மேற்கொள்வீர்கள். கொடுத்த வாக்கை காப்பாற்றுவீர்கள். பழைய பாக்கி வசூலாகும். நம்பிக்கை துளிர்விடும். நல்லோர்களின் சந்திப்பு கிட்டும். தேவைகள் அதிகரிக்கும். வெளியூர் பயணம் வெகுமானம் சேர்க்கும். வரவுக்கு மீறிய செலவு ஏற்படும். கௌரவம் கூடும். நீண்ட நாள் முயற்சி நிறைவேறும். முன்னோர்கள் ஆசீர்வாதம் கிடைக்கும். வழக்குகள் சாதகமாகும். எடுத்த முயற்சி வெற்றி பெறும். பொல்லாதவர்கள் தொல்லை ஒழியும். உடல் நலம் சீராகும். நூதன பொருள் சேர்க்கை ஏற்படும்.

வழிபட வேண்டிய தெய்வம்: நவதேவதை, அதிர்ஷ்ட எண்: *4,9,3,1*
அதிர்ஷ்ட நிறம்: இளம் பச்சை, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: K,G




**மகரம்:** வருமானமும், வெகுமானமும் சேரும் வாரம். தேவைகள் அதிகரிக்கும். எதிர்கால சிந்தனை ஏற்றம் பெறும். உத்தியோக மாற்றம் உறுதியாகும். விரோதங்கள் விலகும். வீண் வம்புகள் அகலும். கூட்டுத்தொழில் லாபம் தரும். குடும்ப விஷயத்தில் கவனம் தேவை. புதிய ஒப்பந்தம் கையெழுத்தாகும். மதிநுட்பம் மாபெரும் வெற்றித்தரும். மருத்துவச் செலவு குறையும். கனிவான பேச்சு அவசியம். கலைகளில் ஆர்வம் கூடும். சொத்துக்களில் வில்லங்கம் விலகும். எண்ணங்கள் பலிதமாகும். வாகனத்தால் செலவு ஏற்படும். பிள்ளைகளால் செலவுகள் அதிகமாகும். தாய்வழி தகராறு குறையும். கௌரவம் உயரும். கனவுகள் பலிதமாகும். கடன்சுமை குறையும். காதலர்களுக்குள் மனக்கசப்பு நீங்கும். மங்கள நிகழ்ச்சிகள் நடைபெறும். பணமும், பாராட்டும் சேரும். ஆசைகள் நிறைவேறும். வரன் வாயில் தேடி வரும். வியாபாரத்தில் வேகம் கூடும். வாழ்வில் வசந்தம் கூடும். நல்ல சம்பவங்கள் நடைபெறும். புதிய பொருள் சேர்க்கையுண்டு. பிள்ளைகளால் தனவரவு உண்டு. இனம் புரியாத சந்தோஷம் ஏற்படும். வாய்ப்பேச்சில் நிதானம் தேவை. வழக்குகள் சாதகமாகும். வெகுமானம் கிடைக்கக்கூடிய காலம். மாலை நேரத்தில் கவனம் தேவை. பெருமைமிக்க காலம். வறுமையின் வாட்டம் குறையும். எதிர்ப்புக்கள் உருவாகி மறையும். பெண்களால் பெருமை சேரும். அவமானங்கள் அகலும். குடும்ப அன்யோன்யம் திருப்தி தரும். பணப்பற்றாக்குறை நீங்கும். கொண்டாட்டங்கள் கூடும். திண்டாட்டங்கள் மறையும். வேதனைகள் சாதனையாகும். பிள்ளைகள் வழியல் கவனம் தேவை.

வழிபட வேண்டிய தெய்வம்: காவல் தெய்வம், அதிர்ஷ்ட எண்: *4,2,1,9*
அதிர்ஷ்டநிறம்: இளம்பச்சை, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: H,E




**கும்பம்:** பிரியமானவர்களின் சந்திப்பு கிட்டும் வாரம். சாதகமான வாய்ப்பு அமையும். ஆண்களின் அதிகாரம் உயரும். மனைவியின் அன்பு அதிகரிக்கும். பணிசெய்யும் இடத்தில் பாராட்டு உயரும். எதிரிகள் ஏமாற்றம் அடைவர். சுறுசுறுப்பு அதிகரிக்கும். கடன்தொல்லை தீரும். அலைச்சல் அதிகரிக்கும். ஊதிய உயர்வு கிட்டும். வியாபாரம் சுமாராக இருக்கும். புதிய முயற்சி பலிதமாகும். செயல்களில் நிதானம் தேவை. கணவன், மனைவி அன்யோன்யம் அதிகரிக்கும். வாகன மாற்றம் ஏற்படும். தாயின் பிரார்த்தனையால் தகுதிகள் உயரும். வினோதமான எண்ணங்கள் பூர்த்தியாகும். வரவுகள் மிகுதியாகும். உடல்நலம் சீராகும். மாற்று மருத்துவம் பலன் தரும். உறவினர்களின் ஒத்துழைப்பு கிட்டும். அனுகூலச் செய்திகள் வந்து சேரும். ஆபரணப் பொருள் களவு போகும். சுபச்செய்தி தேடி வரும். நட்பு வட்டம் விரிவடையும். வாயில் தேடி வரன் வரும். பெற்றோர் நலனில் அக்கறை தேவை. பங்குத்தொழில் லாபம் தரும். உத்தியோகத்தில் உயர்வு கிட்டும். குடும்பச் சுமை குறையும். ஆபரணத் தொழிலில் கவனம் தேவை. வழக்குகளில் திருப்பம் ஏற்படும். பிரச்சினைகள் முடிவுக்கு வரும். ஏற்றுமதி தொழில் லாபம் தரும். குடும்ப தேவைகள் பூர்த்தியாகும். உழைப்பு கடுமையாக இருக்கும். பெரியவர்களை அனுசரித்து செல்வது நல்லது. பாக்கிகள் வசூலாகு ம். பணவரவு மேலோங்கும். குடும்பத்தில் குழப்பம் தீரும். பிள்ளைகள் வழியில் சந்தோ'ம் கூடும்.

வழிபட வேண்டிய தெய்வம்: ஆதிசேஷன், அதிர்ஷ்ட எண்: *3,9,2,1*
அதிர்ஷ்ட நிறம்: அடர்ந்த சிவப்பு, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: X,U




**மீனம்:** சிறப்போடும், பொறுப்போடும் செயல்படும் வாரம். எண்ணங்கள் நிறைவேறும். சேமிப்பு அதிகரிக்கும். பணியாட்களிடம் கவனம் தேவை. பங்குச்சந்தை லாபம் தரும். வியாபாரிகளுக்கு லாபம் அதிகமாகும். சச்சரவுகள் சமாதானத்தில் முடியும். எதிர்ப்புகள் அதிகமாகும். வியாபாரம் மந்தமாக இருக்கும். விவசாயம் பலன் தரும். வீடு, மனை யோகம் உண்டு. ஆரோக்கியத்தில் கவனம் தேவை. உடல் உஷ்ணம் அதிகரிக்கும். ஆடம்பர பொருள் சேரும். உத்தியோகத்தில் உயர்வு கிடைக்கும். மருத்துவச் செலவு அதிகரிக்கும். அன்னதானம் செய்வதால் அதிர்ஷ்டம் கூடும். கிருபைகள் சேரும். குழப்பங்கள் அகலும். கணவரிடத்தில் மதிப்பு உயரும். எதிர்ப்புகள் மாயமாய் மறையும். பெண்களால் பெருமை உண்டு. நண்பர்களின் சந்திப்பு நன்மை பயக்கும். கருத்து வேறுபாடுகள் விலகும். சகோதர வகையில் சகாயம் கிடைக்கும். விரயம் குறையும். வியாபாரம் சிறக்கும். மனைவி பிள்ளைகளிடம் மதிப்பு உயரும். திடீர் பயணம் ஏற்படும். தொழில் வளர்ச்சி கூடும். ஆடம்பரச் செலவுகள் அதிகரிக்கும். பயணத்தில் கவனம் தேவை. சுபிட்ஷம் பெருகும். வயிறு உபாதைகள் வந்து போகும். வார்த்தைகளில் நிதானம் தேவை. பதவி உயர்வு தாமதமாகும். சாதனையை சந்திப்பீர்கள். பொருள் வரவு ஏற்படும். பெண்களின் ஆலோசனை பெருமை சேர்க்கும். புதிய தொழில் வாய்ப்பு ஏற்படும். பெற்றோர்களால் பெருமை சேரும். முயற்சிகள் பலிதமாகும். நெருக்கடிகள் குறையும். நல்ல செய்திகள் நாடி வரும். நீண்ட நாள் கனவு நிறைவேறும். தெய்வத் திருப்பணியில் ஆர்வம் கூடும்.

வழிபட வேண்டிய தெய்வம்: ஸ்ரீ கபாலீஸ்வரர், அதிர்ஷ்ட எண்: *8,9,6,2*
அதிர்ஷ்ட நிறம்: யானை நிறம், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: N,J

# சிதம்பரம் நடராஜர் திருக்கோயிலிற்கு மறைந்த துணைவியாரின் 108 கிராம் எடையுள்ள தங்க ஆரத்தை காணிக்கையாக வழங்கிய கனடா கணேசன் சுகுமார் அவர்கள்!



உலகப் புகழ்பெற்ற சிதம்பரம்: Shri Chidambaram Natarajar Temple பொற்சபையில் ஸ்ரீ நடராஜருடன் இருக்கும் ஸ்ரீ சிவகாம சுந்தரி அம்மனுக்கு கனடாவைச் சேர்ந்த திரு. கணேசன் சுகுமார் 5ம் திகதி வியாழக்கிழமை அன்று 108 கிராம் எடையுள்ள தங்க ஆரத்தை பக்தியுடன் காணிக்கையாக வழங்கினார்.

இந்த தங்க ஆரம், மறைந்த அவரது மனைவி ஷீலா சுகுமார் அவர்களின் தாலி சங்கிலியில் இருந்து உருவாக்கப்பட்டதாகும். தாம்பத்ய பந்தத்தின் புனிதச் சின்னமான தாலியை, இறைத் திருவடிகளில் அர்ப்பணித்த இந்த நிகழ்வு, பக்தர்கள் மற்றும் ஆலயத்திற்கு வந்திருந்தோரிடையே ஆழ்ந்த உணர்வையும் ஆன்மிக நெகிழ்வையும் ஏற்படுத்தியது.





தனிப்பட்ட துயரத்தை தெய்வீக சேவையாக மாற்றிய இந்த காணிக்கை, இறைநம்பிக்கை, அன்பு மற்றும் நினைவுகளின் நித்திய அடையாளமாக விளங்குகிறது. இந்த புனித காணிக்கையை சிவகாம சுந்தரி அம்மன் அருளுடன் ஏற்று, குடும்பத்தினருக்கும் உலக மக்களுக்கும் அருள், அமைதி மற்றும் நல்வாழ்வு வழங்க வேண்டுமென ஸ்ரீ ஸபாநாயகர் கோயில் பொது தீக்ஷிதர்கள் ஆசிர்வாதம் செய்தனர்.





சமூக மற்றும் ஆன்மீக நிறுவனங்களுக்கும் தனி நபர்களுக்கும் அதிகளிவில் நன்கொடைகளும் கனடாவிலும் யாழ்ப்பாணத்திலும் இயங்கும் வைத்தியசாலைகளுக்கு சிகிச்சை உபகரணங்களும் வழங்கி அறத்தின் அடையாளமாக விளங்கும் கனடா வாழ் கணேசன் சுகுமார் அவர்கள் - சில ஆண்டுகளுக்கு முன்னே ஆனந்த நடராஜ மூர்த்திக்கு தங்க பதக்கம் ஒன்றை காணிக்கையாக கொடுத்து உள்ளார் என்பதும் இங்கு குறிப்பிடத்த்ககது.



கனடா திரு. கணேஷன் சுகுமார் அவர்கள் துணைவியார் சீலாசுகுமார் நினைவாக எல்லாம் வல்ல சிதம்பரம் ஸ்ரீ ஆனந்த நடராஜ ராஜ மூர்த்தி சன்னிதியில் ஸ்ரீ சிவகாமசுந்தரி அம்பாளுக்கு 05-02-2026 வியாழக்கிழமை காலை தங்க ஆரம் சாற்றப்படுகிறது

K. தில்லை நடராஜன் (மகன்) K. ராஜசந்திரசேகர தீக்ஷிதர்
ஸ்ரீ நடராஜர் கோயில் [illegible] & பூஜை
14/2, சபாநாயகர் தெரு, சிதம்பரம் - 608 001, தமிழ்நாடு.
Mobile : 9345228256

உலக செய்திகள் World News

# இங்கிலாந்தின் லண்டனில் முன்னெடுக்கப்பட்ட இலங்கையின் சுதந்திர தின எதிர்ப்பாக "கறுப்பு தின" போராட்டம்!



இலங்கையின் சுதந்திர தினத்தை கரிநாளாக அனுஷ்டித்து 4ம் திகதி அன்றையதினம் இலங்கையின் வடக்கு - கிழக்கில் மாபெரும் எழுச்சி போராட்டம் ஒன்று முன்னெடுக்கப்பட்டது.

அந்தவகையில் குறித்த போராட்டத்துக்கு வலுச்சேர்க்கும் வகையில் புலம்பெயர் உறவுகளால் இங்கிலாந்தின் லண்டனிலும் எழுச்சி போராட்டம் ஒன்று முன்னெடுக்கப்பட்டது. லண்டனில் அமைந்துள்ள இலங்கை தூதரகத்திற்கு முன்பாக ஆரம்பமான இந்த போராட்டம் பேரணியாக பாராளுமன்றம் நோக்கி நகர்ந்தது.

இலங்கை அரசின் அடக்குமுறைகளுக்கு எதிர்ப்பு தெரிவித்தும், தமிழர்களுக்கு இதுவரை சுதந்திரம் கிடைக்கவில்லை என தெரிவித்தும், தமிழ் தேசிய கொடியான "புலிக் கொடியை" தாங்கியவாறு இந்த போராட்டமானது முன்னெடுக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.



# "மத்திய, மாநில கட்சிகள் அனைத்தும் தே.மு.தி.க.வுக்கு தோழமை கட்சிகளே" என்கிறார் பிரேமலதா விஜயகாந்த்

சென்னையில் தே.மு.தி.க. பொதுச்செயலாளர் பிரேமலதா விஜயகாந்த் செய்தியாளர்களை சந்தித்து பேசினார். அப்போது அவர் கூறியதாவது: "கூட்டணி குறித்து உரிய நேரத்தில் நாங்கள் அறிவிப்போம். எங்கள் மாவட்ட கழக செயலாளர்களிடம் கலந்தாலோசித்துள்ளோம். அவர்களின் விருப்பம், கட்சி நிர்வாகிகள் மற்றும் தொண்டர்களின் விருப்பப்படி தே.மு.தி.க. இந்த முறை மகத்தான கூட்டணியை அமைக்கும். மத்திய, மாநில கட்சிகள் அனைத்தும் தே.மு.தி.க.வுக்கு தோழமை கட்சிகள்தான். கேப்டன் விஜயகாந்த் குருபூஜைக்கு அனைத்து கட்சியினரும் வந்திருந்தனர். அதே சமயம், அரசியல் நிலைப்பாடு என்பது, கட்சியின் விருப்பத்தைப் பொறுத்து எடுக்க வேண்டிய முடிவு. எனவே, தே.மு.தி.க.வின் எதிர்காலம் மற்றும் கட்சியின் விருப்பத்தை கருத்தில் கொண்டு எங்கள் அறிவிப்பு இருக்கும்." இவ்வாறு அவர் தெரிவித்தார்.

# வட இந்தியர்கள் மீதான வெறுப்பு பேச்சு – திமுக அமைச்சருக்கு நயினார் நாகேந்திரன் கண்டனம்



தமிழக பாஜக தலைவர் நயினார் நாகேந்திரன் வெளியிட்டுள்ள எக்ஸ் தள பதிவில், வட இந்தியர்கள் மீதான வெறுப்புணர்வைத் தூண்டும் திமுக தலைவர்கள். திமுக ஆட்சியில் ஏற்கனவே வட இந்தியர்கள் மீதான தாக்குதல்கள் தலைவிரித்தாடிக் கொண்டிருக்கும் நிலையில், செங்கல்பட்டு மாவட்டம் மதுராந்தகத்தில் நடைபெற்ற கூட்டத்தில் "பானிபூரி விற்கவும், கட்டட வேலைக்கும், டேபிள் துடைக்கவும் தான் வடக்கர்கள் தமிழகத்திற்கு வருகிறார்கள்" எனத் திமுக அமைச்சர் எம்ஆர்கே பன்னீர் செல்வம் எள்ளி நகையாடியிருப்பதை வன்மையாகக் கண்டிக்கிறேன். தனது ஆணவப்பேச்சிற்குத் திமுக அமைச்சர் உடனடியாக மக்களிடம் பகிரங்க மன்னிப்பு கோரவேண்டும். "யாதும் ஊரே யாவரும் கேளிர்" என்ற வாழ்வியல் தத்துவத்தின் மூலம் சமத்துவத்தையும், சகோதரத்துவத்தையும் பறைசாற்றிய நமது தமிழ் மண்ணில், வட இந்தியர்கள் மீதான வெறுப்புணர்வைத் திமுக தலைவர்கள் தொடர்ந்து விதைக்க முயல்வது அருவருப்பானது மட்டுமன்றி ஆபத்தானதும் கூட. வடக்கு, தெற்கு என இன ரீதியாக மக்களைப் பிரித்தாளத் துடிக்கும் திமுகவின் பிளவுவாத அரசியலை அதன் கூட்டணிக் கட்சிகளான காங்கிரஸும் கம்யூனிஸ்டு கட்சிகளும் ஆமோதிக்கின்றனவா? "இமயம் முதல் குமரி வரை" ஒருமித்த பண்பாட்டுக் கலாச்சாரத்தைப் பகிர்ந்துகொள்ளும் நமது பாரதத்தில், ஆட்சியைப் பிடிக்கவும் அதிகாரத்தைக் கைப்பற்றவும் வட இந்திய மக்களைப் பகடைக்காய்களாகப் பயன்படுத்தத் துடிக்கும் திமுக எனும் நஞ்சுக்கொடியை வரும் சட்டமன்றத் தேர்தலில் மக்கள் பிடுங்கி எறியப்போகிறார்கள். என தெரிவித்துள்ளார்.

# சிம்பு நடிக்கும் படம் "சிலம்பாட்டம்" – டி ராஜேந்தர்



எஸ்டிஆர் பிறந்தநாளைத் தொடர்ந்து அவரது ரசிகர்களை உற்சாகப் படுத்தும் வகையில், லக்ஷ்மி மூவி மேக்கர்ஸ் தயாரிப்பில் உருவான பிளாக்பஸ்டர் படமான சிலம்பாட்டம் திரைப்படம், வரும் பிப்ரவரி 6 ஆம் தேதி திரையரங்குகளில் மறு வெளியீடு ஆகிறது. முன்னணி வெளியீட்டு நிறுவனமான எல்மா பிக்சர்ஸ் தமிழகமெங்கும் இந்தப் படத்தை வெளியிடுகிறது. மறுவெளியீட்டை ஒட்டி சென்னையில் நடைபெற்ற விழாவில், இயக்குநர் டி. ராஜேந்தர் பேசும் போது, "என் மகன் சிலம்பரசன் பிறந்த நாள் கொண்டாட்டத்தை, "சிலம்பாட்டம்" படத்தோடு கொண்டாடும் அனைவருக்கும் நன்றி. எல்மா பிக்சர்ஸ் எத்தில் ராஜ், ட்ரீம் வாரியர்ஸ் பிக்சர்ஸ் குகன் ஆகிய இருவருக்கும் என் நன்றி. இயக்குநர் சரவணன் காலம் கடந்து நிற்கும் அருமையான ஆக்சன் படத்தை தந்துள்ளார். நான் என் பையன் நடித்ததில் வியந்து பார்த்த காதல் படம், விண்ணைத் தாண்டி வருவாயா!, நானும் பல காதல் படங்களை எடுத்திருக்கிறேன். ஆனால் என்னையே வியக்க வைத்த படம், விண்ணைத் தாண்டி வருவாயா." "அதே போல ஆக்சன் படம் என்று எடுத்துக்கொண்டால், எத்தனையோ படங்கள் மறு வெளியீடு ஆகிறது. ஆனால், "மங்காத்தா" மட்டும் தான் வெற்றி பெற்றது. ரசிகர்களால் கொண்டாடப்பட்டது. ஏன் வேறுபடங்களுக்கு கூட்டம் வரவில்லை? அது போல இந்த "சிலம்பாட்டம்" கண்டிப்பாக பெரிய வெற்றி பெறும். இந்தப்படம் இந்த காலகட்டத்திற்கு ஏற்றார் போல மீண்டும் டிஜிட்டல் செய்துள்ளார்கள். ஒவ்வொரு ஃபிரேமும் அவ்வளவு கலர்ஃபுல்லாக இருக்கிறது." "சரவணன் அடிப்படையில் கேமராமேன். அத்தனை அற்புதமாக எடுத்துள்ளார். இந்தப்படத்தில் நடித்த பிரபு, சந்தானம், சினேகா என எல்லோரும் அட்டகாசமாக நடித்துள்ளனர். என் "உயிருள்ள உஷா" படமும் மறு வெளியீடுக்கு தயாராகிவிட்டது. ஆனால், "சிலம்பாட்டம்" வருவதால் என் படத்தை தள்ளி வைத்துவிட்டேன். நண்பர் விஜய்யின் "ஜனநாயகன்" படம் வந்தாலும் தள்ளிப்போவேன் அது நான் தரும் மரியாதை. தமிழ் சினிமா மறு வெளியீடில் என் பையனின் "சிலம்பாட்டம்" பெரிய வெற்றி பெற ஆண்டவனை வேண்டுகிறேன், அனைவருக்கும் நன்றி," என்றார்.



# தனுஷ் நடிக்கும் டி55 படத்தில் மம்மூட்டியும் நடிக்க ஒப்பந்தம்

தனுஷ், இயக்குநர் ராஜ்குமார் பெரியசாமி இணையும் படத்திற்கு "டி55" என தற்காலிகமாக பெயரிடப்பட்டுள்ளது. இந்தப் படத்தை தனுஷின் வுண்டர்பார் ஸ்டுடியோ நிறுவனம் தயாரிக்கிறது. இயக்குநர் ராஜ்குமார் பெரியசாமி "டி55" படத்தை பெரிய அளவில் ஆக்ஷன் அதிரடி படமாக எடுக்க திட்டமிட்டுள்ளார் என கூறப்பட்டது. இதனை தொடர்ந்து, இந்தப் படத்திற்கு சாய் அபயங்கர் இசையமைக்க உள்ளதாக சில தினங்களுக்கு முன்பு அறிவிக்கப்பட்டது.

மேலும், "டி55" படத்தில் தனுஷுக்கு ஜோடியாக ஸ்ரீலீலா, சாய் பல்லவி நடிக்கிறார் என்று படக்குழு ஏற்கனவே அறிவித்து இருந்தது. இந்நிலையில், "டி55" படத்தில் மெகாஸ்டார் மம்மூட்டி முக்கிய கதாபாத்திரத்தில் நடிப்பது உறுதியாகி இருக்கிறது. இயக்குநர் ராஜ்குமார் பெரியசாமி இதனை தனது எக்ஸ் தளப் பதிவில் தெரிவித்துள்ளார். தனுஷ் 55-வது படத்தின் நடிகர், நடிகைகள் விவரம் தொடர்ச்சியாக அறிவிக்கப்பட்டு வரும் நிலையில், இந்தப் படத்தின் பூஜை நடைபெற்றது.

# சரத்குமார் முக்கிய கதாபாத்திரத்தில் நடித்துள்ள "ஆழி" படத்தின் புதிய பதிவேற்றம்



இயக்குநர் பொன்ராம் இயக்கத்தில் மறைந்த விஜயகாந்தின் இளைய மகனான சண்முக பாண்டியன் நடிப்பில் வெளியான படம் "கொம்புசீவி". இப்படத்தில் சரத்குமார் முக்கிய கதாபாத்திரத்தில் நடித்து இருந்தார். இதனை தொடர்ந்து தற்போது நடிகர் சரத்குமார் "ஆழி" படத்தில் நடித்துள்ளார். இந்தப் படத்தை இயக்குநர் மாதவ் தாசன் இயக்கியுள்ளார். இந்தப் படம் கடலை மையமாக கொண்டு வித்தியாசமான கதைக்களத்தில் உருவாகி உள்ளதாக கூறப்படுகிறது. "ஆழி" படத்தில் தேவிகா சதீஷ், இந்திரஜித் ஜெகன், தாமரை செல்வி, வையாபுரி மற்றும் ஸ்ரீஜித் ரவி உள்ளிட்ட பலர் நடித்துள்ளனர். 888 புரொடக்சன்ஸ் நிறுவனம் சார்பில் பொன்னு கண்ணன் தயாரித்துள்ள இந்தப் படத்தின் படப்பிடிப்பு பணிகள் நிறைவடைந்து, வெளியீட்டிற்கு தயாராகி உள்ளது. இதனிடையே, "ஆழி" படத்தின் முதல்காட்சி பதாகை வெளியாகி ரசிகர்களின் கவனத்தை ஈர்த்தது. இந்த நிலையில், "ஆழி" திரைப்படம் வருகிற 27ஆம் தேதி திரையரங்குகளில் வெளியாகும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

# சன்னி லியோன் நடித்த "கென்னடி" படம் 20ம் தேதி ஓடிடியில் வெளியீடு



பாலிவுட் திரையுலகில் மிகவும் பிரபலமான நடிகைகளில் ஒருவரான சன்னி லியோன் நடிப்பில் உருவாகியுள்ள "கென்னடி" திரைப்படம், வரும் 20ஆம் தேதி ஜீ5 ஓடிடி தளத்தில் வெளியாக உள்ளது. இந்த அறிவிப்பை நடிகை சன்னி லியோன் தனது எக்ஸ் (ட்விட்டர்) பக்கத்தின் மூலம் அதிகாரப்பூர்வமாக வெளியிட்டுள்ளார். அனுராக் காஷ்யப் இயக்கிய கென்னடி திரைப்படத்தில் நடிகர் ராகுல் பட் முக்கிய கதாபாத்திரத்தில் நடித்துள்ளார். தூக்கமின்மையால் பாதிக்கப்படும் ஒரு முன்னாள் காவலரை மையமாகக் கொண்டு இந்த படம் உருவாக்கப் பட்டுள்ளது. மேலும், இந்த திரைப்படம் 2023 ஆம் ஆண்டு கேன்ஸ் திரைப்பட விழாவில் திரையிடப்பட்ட போது பார்வையாளர்களிடமிருந்து பெரும் வரவேற்பைப் பெற்றது குறிப்பிடத்தக்கது. இதனால், கென்னடி படத்தை ஓடிடியில் காண ரசிகர்கள் ஆவலுடன் காத்திருக்கின்றனர்.

மொன்றியல் நகரில்
உதயன் UTHAYAN
விளம்பரங்கள், மரண அறிவித்தல்கள்,
பிறந்ததின வாழ்த்துக்கள், உள்ளூர்ச் செய்திகள் மற்றும்
அறிவித்தல்களைக் கையளிக்க நாடுங்கள்.
FRUITS HABY
பசுமையான மரக்கறி வகைகள் மற்றும் பழவகைகளுக்கு மொன்றியலில் புகழ்பெற்ற தமிழர் ஸ்தாபனம்
5925 Victoria
Montreal, QC
H3W 2R9
514-342-4229
514-865-0519

மதுரையில் இருந்து மீண்டும் வருகை
ஜாதகம் பார்க்கப்படும்
பிறந்த வருடம், மாதம், திகதி சொன்னால் போதும் நாள், நட்சத்திரம், ராசி பார்த்து நடந்தது நடக்கப்போவது பற்றிய பலன் சொல்லப்படும். திருமணப் பொருத்தம் மற்றும் குழந்தைகளுக்கு குறிப்பு எழுதிக் கொடுக்கப்படும்.
கோ. காசி (மதுரை) Phone:- 437-925 5643 Whatsapp:- 437- 329 4164

Matt Mathisayan
Sales Representative
647 268 9219
905 201 9977
905 201 9929
mattmathisayan@gmail.com
Follow me on
HomeLife/Future Realty Inc.
7 Eastvale Dr #205, Markham, On L3S 4N8

26ம் ஆண்டில்...
26 years of publishing
www.uthayannews.ca
UTHAYAN
உதயன்

இவ்விடத்தில் விளம்பரம்
செய்ய எங்களுடன்
தொடர்பு கொள்ளவும்.
416 752 1524

உதயம் 1557 CHIEF EDITOR: R.N. LOGENDRALINGAM Friday February 6, 2026



# சிதம்பரம் நடராஜர் திருக்கோயிலிற்கு மறைந்த துணைவியாரின் 108 கிராம் எடையுள்ள தங்க ஆரத்தை காணிக்கையாக வழங்கிய கணேசன் சுகுமார் அவர்கள்!

உலகப் புகழ்பெற்ற சிதம்பரம்: **Shri Chidambaram Natarajar Temple** பொற்சபையில் ஸ்ரீ நடராஜருடன் எழுந்தருளி இருக்கும் ஸ்ரீ சிவகாம சுந்தரி அம்மனுக்கு கனடாவைச் சேர்ந்த திரு. கணேசன் சுகுமார் 5ம் திகதி வியாழக்கிழமை அன்று 108 கிராம் எடையுள்ள தங்க ஆரத்தை பக்தியுடன் காணிக்கையாக வழங்கினார்.

இந்த தங்க ஆரம் , மறைந்த அவரது மனைவி ஷீலா சுகுமார் அவர்களின் தாலி சங்கிலியில் இருந்து உருவாக்கப்பட்டதாகும். தாம்பத்ய பந்தத்தின் புனிதச் சின்னமான தாலியை, இறைத் திருவடிகளில் அர்ப்பணித்த இந்த நிகழ்வு, பக்தர்கள் மற்றும் ஆலயத்திற்கு வந்திருந்தோரிடையே ஆழ்ந்த உணர்வையும் ஆன்மிக நெகிழ்வையும் ஏற்படுத்தியது. (தொடர்ச்சி 22ம் பக்கம்)

# ஈழ விடுதலைப் போராட்டத்தின் முன்னோடிகளில் ஒருவரான திருநெல்வேலி முத்துக்குமாரசாமி (குமார்) நினைவுகூரப்பெற்றார்!



அமெரிக்காவில் அண்மையில் இயற்கை எய்திய ஈழ விடுதலைப் போராட்டத்தின் முன்னோடிகளில் ஒருவரான தம்பித்துரை முத்துக்குமாரசாமியை நினைவுகூரும் அஞ்சலி நிகழ்ச்சி கடந்த 1ம் திகதி (01.02.2026) ஞாயிற்றுக்கிழமை, யாழ்ப்பாணம் திருநெல்வேலி இந்து வாலிபர் சங்க மண்டபத்தில் நடைபெற்றது.
(தொடர்ச்சி 7ம் பக்கம்)

தமது நற்சேவையினால் தமிழ் மக்களின்
உள்ளங்களை வெற்றி கொண்ட வீடு விற்பனை முகவர்கள்
Siva & Joy Real Estate Team
416-267-9700
Homelife/Future Reality Inc., Brokerage
Siva Shanmuganathan
Broker
Joy H.Selvanayagam
Broker

# கனடாவில் "பைரவி நுண்கலைக் கூடம்" மற்றும் "ஆரோசை" இசைக்குழு இணைந்து நடத்திய "தமிழிசை விழாவில் "தமிழ்ச் சமூக மையம்" கட்டட நிதிக்காக 50.000 டாலர்கள் வழங்கப்பெற்றன







கனடாவில் “பைரவி நுண்கலைக் கூடம்” மற்றும் “ஆரோசை” இசைக்குழு இணைந்து ஜனவரி மாதத்தின் இறுதிநாளான 31ம் திகதி “பைரவி நுண்கலைக் கூடம்” கலாச்சார மண்டபத்தில் நடத்திய “தமிழிசை விழா”வில் தமிழிசை மற்றும் பன்னிரு திருமுறைகள் ஆகியவை மேற்படி இரு இசைசார்ந்த நிறுவனங்களின் மாணவ மாணவிகளால் இசைச் சமர்ப்பணமாக நிகழ்த்தப்பெற்றன.

அத்துடன் அன்றைய முக்கிய நிகழ்வாக தற்போது கனடிய தமிழர்கள் மத்தியில் பேசு பொருளாக விளங்கும் “தமிழ்ச் சமூக மையம்” கட்டட நிதிக்காக 50.000 டாலர்கள் நான்கு தமிழர் நிறுவனங்களால் வழங்கப்பெற்றன. இந்த அற்புதமான நிகழ்வை பைரவி நுண்கலைக் கூடத்தின் அதிபர் ஜெயச்சந்திரன் தியாகராஜா தொகுத்து வழங்கினார்.







மேற்படி நிதி அன்பளிப்பிற்கான மாதிரிக் காசோலைகளை தமிழச் சமூக மையத்தின் நிதி சேகரிப்புக் குழுவின் சார்பில் தொழிலதிபர் சாந்தா பஞ்சலிங்கம் அவர்கள் பெற்றுக்கொண்டார். அப்போது மேடையில் ரொறன்ரோ நகரசபை உறுப்பினர் நீதன் சண்முராஜா மற்றும் “கனடா உதயன்” லோகேந்திரலிங்கம் ஆகியோர் இந்த அரிய பணியை வாழ்த்தி உரையாற்றினார்கள்.

மேற்படி நிகழ்வில் “பைரவி நுண்கலைக் கூடம்” இசைக் கல்லூரியின் சார்பில் பத்தாயிரம் டாலர்களும் “ஆரோசை” இசைக்குழுவின் சார்பில் இருபதாயிரம் டாலர்களும், **GL Prime Legal Services** (905 334 6851) சட்ட ஆலோசனை நிறுவனத்தின் சார்பில் பத்தாயிரம் டாலர்களும் திரு சத்தியசீலன் அவர்கள் குடும்பத்தின் சார்பில் பத்தாயிரம் டாலர்களுவழங்கப்பெற்றன என்பது இங்கு குறிப்பிடத்தக்கது.

இந்த நிதி சேகரிப்பிற்கு “பைரவி நுண்கலைக் கூடம்” மற்றும் “ஆரோசை” இசைக்குழு சார்ந்த பெற்றோர்கள் மற்றும் மாணவர்கள் பக்கபலமாக விளங்கினார்கள் என்றால் அது மிகையாகாது.

***செய்தி: சத்தியன்***